# சம்பந்தரும் சமணரும்

ஆசிரியர் :

பேராசியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

ருத்திரா பதிப்பகம்

சென்னை-1.

முதற் பதிப்பு
உரிமை ஆசிரியருக்கு

ARUL ANANDAR COLLEGE:
Acc: No. 5274
Call No.
CHECKED

விலை ரூ. 4—50

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# முன்னுரை

சமுதாயம் இயங்கி வருவதனைச் 'சமுதாய-இயக்க இயல்' என மனநூல் முறைப்படியும், அரசியல் முறைப்படியும் ஆராய்வது இருபதாம் நூற்றுண்டின் சிறப்பு இயல்பு. சமுதாயத்தில் போராட்டம் எழுவது எப்படி? அப்போராட்டம் சமயம், மொழி, நம்பிக்கை, இனம், சாதி, பண்பாடு முதலிய பல காரணங்களைக் கொண்டு எழும். உலகம் ஒரு குடும்பம் ஆதல் வேண்டுமானல், இத்தகைய போராட்டங்கள் எழாதபடி செய்தல் வேண்டும். இவை எழுவதற்கான வாய்ப்புக்களையும் எழுந்த முறைகளையும் ஆராய்ந்து அறிந்தாலன்றி, அவற்றைத் தடுக்கும் வழியை எவ்வாறு உணர்தல் கூடும்? இந்நாளைய சமுதாயத்தினையும், முன்னாளைய சமுதாயத்தினையும் இந்தக் கண் கொண்டு அறிஞர் ஆராய்கின்றனர்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது சங்கப்புலவர் கண்ட உண்மை. "யாதானும் நாடாமால் ஊராமால்" என்கிருர் வள்ளுவர். "அப்பாலும் அடிசார்ந்தார் அடியார்க்கும் அடியேன்," என்று பாடுகின்றுர் சுந்தரர். உலகத்தினையும் அனைத்தினையும் ஒரு குடும்பமாகக் கண்ட தமிழ்ச் சமுதாயத்திலும் சமுதாயப் போராட்டம் எழாமல் இல்லை.

சமணரும் புத்தரும் சைவரும் ஒருவரை ஒருவர் பொருது நின்ற வரலாறும் உண்டு. இந்த வரலாற்றினைச் சம்பந்தர் பாடல் கொண்டு அந்தக் குறுகிய அளவில் ஆராய்வதே இந்நூலின் நோக்கம்.

சம்பந்தர் பாடல்களை ஆராய்வதோடு அவர் வரலாற்றைப் பின்வந்தார் எவ்வாறு பாடியுள்ளார் என்றும் ஆராயவேண்டுவது ஆயிற்று. கதை கூறு-வாரின் போக்கோடு ஒட்டி முதலிற் கதையை ஆராய்வதே பொருத்தமாதலின், அவ்வாறு விளக்கி உள்ளேன். ஆதலின், அங்குக் கூறுவன எல்லாம் என்னுடைய கருத்தென்று கொள்ளுதலாகாது என மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். யான் சமணன் அல்லனாதலால் சில போது நடுநிலை தவறினேன் என்று எண்ணிவிட வேண்டா. சம்பந்தர் பழிப்பது உண்மைச் சைனரை அன்று, குண்டரையே என்று காட்ட முனைந்துள்ளேன். இதனை அனைவரும் ஒவ்வாமற் போகலாம்; ஆனால் என்னைச்சமணரை வெறுப்பவனாகக்கொள்ள இடம் இல்லை என்பதனை மட்டும் கூற விரும்புகிறேன். (சம்பந்தர் குண்டரையே பழித்தாலும், அடிப்படை-யில் பிறரிடம் அந்நாளைய சைவர்க்கு இருந்த வெறுப்பே இவ்வாறு இரக்கமாகக் கலைவடிவம் பெறுகிறது. இரங்கத்தான் நாம் யார்? ஆனால், அந்-நாளில் இந்த வெறுப்புக்குக் காரணம் சமயம் மட்டுமோ? பல அரசியற் சூழ்ச்சிகளும் இங்கே இடம் பெற்றிருக்கும். அவற்றை ஆராயத்தக்க குறிப்புக்கள் இன்னும் கைக்கு எட்டவில்லை. இங்கு ஆராயப் பெறுவது சைவர் கொண்ட எரிவு மட்டும் அன்று; சமணர் முதலியோர் கொண்ட எரிவுமே ஆம்.

இந்நூல் சமுதாய இயக்க இயலில் தமிழில் எழுந்த முதல் முயற்சியாம். ஆதலின் இதன் குறைகளைப் பிறரினும் நான் நன்கு அறிவேன். ஆயினும், விளங்காத பாடற்பகுதிகளை விளக்க முயன்றுள்ளேன். அறிஞர் ஆராய்வாராக.

திருப்பாதிரிப்புலியூர் சைவச் சிறப்பு மாநாடு தமிழ் நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. அப்போது, ஞானியார் அடிகள் "திருஞான சம்பந்தரைப்பற்றி அவர் பெயரால் காஞ்சியில் வளர்ந்த கழகத்தில் பேசும்படி அன்போடு ஆணை தந்தனர். திரு. வி. க. அவர்கள் தலைமையில் அச் சொற்பொழிவு நிகழ்ந்தது. பின்னர் திரு. வி. கவின் வற்புறுத்தலின்மேல் அச்சொற்பொழிவுக் குறிப்புக்களை விளக்கி அப்பாவலர் நடத்தி வந்த தேசபந்துவில் எழுதிவந்தேன். முற்றுப் பெறுதுபோன அக் குறிப்புக்களை நண்பர் திரு. T. S. உமாபதி பதிபிக்க முனைந்தார். அப்போது ஐந்து பகுதிகளோடு முடிவுற்றிருந்த இந்நூலின் 6-ஆம் பகுதியைப் பல குறிப்புகளை விளக்கி எழுதினேன். ஏறக்குறையக் கால் நூற்றுண்டுக்குப் பின் இக்குறிப்புக்களை எழுதிச் சேர்த்தேன். எனவே முன்னுக்கும் பின்னுக்கும் முரண் உண்டு எனக் கருதவேண்டா. (ஆசீவகர் குண்டர் என்ற கருத்துக்களை ஆராய முற்பட்டுச் சில விளக்கம் தந்துள்ளேன்). மற்றைய விளக்கங்கள் நான் கண்டன அல்ல. பிறமொழிகளில் உள்ளனவற்றைத் தமிழில் எழுதியதே என்னுடைய தொண்டு. ஆராய்ச்சி, முடிவின்றி ஆண்டவன் போலச் சென்று விளங்குவது. ஆதலின் மற்றையோர், இங்குக் கூறியவற்றை மேலும் ஆராய்வர் என்ற நம்பிக்கையிலேயே இவற்றை வெளியிடத் துணிந்தேன்.

தெ. பொ. மீ. வெள்ளிவிழாக் குழுவினர் இதனைத் திரு. உமாபதி வழியே பதிப்பிக்க முயன்றமைக்கு அவர்களுக்கும், திரு. உமாபதிக்கும் என் நன்றி உரியதாகும்.

சென்னை,
19—9—'57.

இங்ஙனம்,
தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

## உள்ளுறை


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கடவுட் பேராறு | ... | 1 |
| 2. | சமணரும் கடவுளே | ... | 12 |
| 3. | பேய்த்துறவு | ... | 17 |
| 4. | போலித்துறவு | ... | 47 |
| 5. | கழுவேற்றிய கதை | ... | 63 |
| 6. | வெறுப்பின் விளக்கம் | | |
| | I. பௌத்தரும் சம்பந்தரும் | ... | 118 |
| | II. ஆரம்பர் | ... | 125 |
| | III. உண்டும் இல்லையும் எனல் | ... | 127 |
| | IV. புலவரைப் பழித்தல் | ... | 135 |
| | V. கழிமீன் கவர்தல் | ... | 138 |
| | VI. ஆசீவகரும் சம்பந்தரும் | ... | 142 |
| | VII. குண்டர் | ... | 149 |

# சம்பந்தரும் சமணரும்

## 1. கடவுட் பேராறு

I

தமிழரது கொள்கை ஒரு கடவுட் பேராறு. உலகம் தோன்றிய நாள் தொடங்கி, உலகனைத்தையும் தன்னருட் பெரு வெள்ளத்தில் மூழ்த்தி, இன்பமூட்டி, அறிவு விளக்கு எரிக்க விரைந்து போந்து, உண்மை முடிவு என முழங்கி, ஓடிவந்து கொண்டிருக்கிறது இந்தக் கடவுட் பேராறு. இந்த ஆறு, உள்ள பொருள் ஒன்றேயாதலின், ஒன்றாய்த் திரண்டு பரவுவதும் இயல்பேயன்றோ?

"ஒன்றே உள்ளது. உயர்ந்தோர் பலவகையாகப் பேசுகின்றனர்." (ஏகம் ஸத். விப்ர பஹுதா வதந்தி) என்பது திருமறை. ஊள்ளீடாய் உற்று நோக்குமிடத்து உயிருள் பொருளும், உயிரில் பொருளுமாய் ஒளிரும் உலகனைத்திலும் ஒரு பெரும்பொருளே உளதாதலைக் காணலாம். உண்மையாய், உண்மையில் ஒளிரும் அறிவாய், அவ்வறிவிலூறும் இன்பமாய்த் திகழ்வதே இதன் இயல்பாம். (சத் சித் ஆநந்தம்.) எல்லாப் பொருளிலும் இவ்வியல்பு விளங்குதலின், இருப்பது இப்பொருளேயாம். உள்ளதாந்தன்மை எப்பொருளில் இல்லை? ஒரு பொழுது பனிக் கட்டியாய்த் திரண்டு ஒரு பொருள் உளதாகிறது. மற்றொரு பொழுது அப்பொருள் வடிவு மாறி, நீர் என்ற வடி-

வோடும் பெயரோடும் உளதாகின்றது. இன்னும் தாழ்த்தால் ஆவியாய் மாறி அவ்வடிவோடும் பெயரோடும் உளதாகின்றது. இவ்வாறு பொருள்கள் அழிந்தும் மாறியும் உழல்கையிலும், ஏதோ ஒரு வடிவோடும் பெயரோடும் இருத்தலால், உளதாந்தன்மை தனித்து நின்று, என்றும் விளங்குகிறது. அறிவுதான் எப்பொருளிடத்தில் இல்லை? அறிவாவது யாது? விளக்கமேயாம். பொருள்கள் அனைத்தும் நம்புலன்களுக்கோ, மனத்திற்கோ, விளங்கிக் கொண்டே எதிர் நிற்கின்றன. இன்பந்தான் எப்பொருளில் இல்லை? ஒவ்வொரு பொருளும் பயன் தருவதாய், இன்பவூற்ருய்ப் பொங்கி வழிகின்றது. எருவென இகழப்படுவதும் மருக்கொழுந்திற்கு உரமூட்டி, நறுநாற்றத்தை நாற்புறமும் வீசி நமக்கு இன்ப மூட்டுகின்றது; கிழங்கையும் கனியையும் வளர்த்து, வாய்க்கினிய உணவாய் இன்பம் ஊட்டுகின்றது. மக்களின் மறலியாம் நல்ல பாம்பும் தன்னுடைய காதலிக்கு இன்பமாகின்றது. துன்பமென்ற பொருளிலுமன்ருே, இன்பம், வெள்ளமாகப் புரண்டோடுகின்றது. அதனை அறிந்த நம் பகைஞன், நமது துன்பத்தில் ஓர் இன்பம் துய்க்கின்ருன். இவ்வின்ப வழியை உணராது நாம் இடர்ப்படுகின்ருேம். எனவே, உண்மை அறிவின்ப வடிவான பொருள் ஒன்றே உள்ளது. ஆதலின், அப்பொருள் முழுதினையும் தன்னுட் கொள்ளவே தமிழரது கடவுட் பேராறு காவிரிக் கரையில் பரந்தெழுந்தது.

அங்ஙனம் ஒன்றாய் ஒளிரும் பொருளை அறியும் வழியோ, நமது உள்ளத்தியல்பைப் பொறுத்தது. உள்ளமோ பொருள்களை அறிகிறது; தொழிலின்மேல் ஊக்கமாய் முயல்கின்றது; இன்புற்றும் சினந்தும் உள்ளக் கிளர்ச்சியால் பொங்குகிறது. உள்ளத்தின் செயலனைத்தையும் இம்மூன்று தலைப்பில் அடக்கி விடலாம். உள்ளத்தின் அறிவோ, கல்வியால் நீண்டு வளர்கிறது. தொழிலுறு நிலையோ ஒழுக்கத்தால் உயர்ந்து ஓங்கி எழுகிறது. உள்ளக் கிளர்ச்சியும் அழகின் வயப்பட்டு அன்பாய் அகன்று இன்புறுகின்றது. நல்லறிவும், நல்லொழுக்கமும், நல்லழகும் நமது உள்ளத்தின் நாட்டமாகும். (சத்யம்—சிவம்—ஞானம்—சுந்தரம்.) நாட நின்ற பொருளோ உண்மையறிவின்பமே அன்றி, வேறில்லை. ஆகவே, கல்விக் கடலையும், 'குணப் பெருங் குன்றை'யும், அழகு வெள்ளத்தையும் காணும் போதெல்லாம் அவற்றை இறைவனொளியின் மின்னற் பிழம்பெனக் கண்டு வழிபடுதல் வேண்டும். இவற்றின் வழியே, உண்மை அறிவின்பப் பெரும் பொருளை உணர்ந்து அதனோடும் ஒன்றுகின்றோம். தமிழர்க்கு, அறிவு, ஒழுக்கம், அழகு என்பன அனைத்தும் அழகாகவே தோன்றின. அழகாவது யாது? உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டுவதாய், இயற்கையினிடத்தே காணக்கிடக்கும் ஓர் இயைபே அன்றோ? இறைவன் வடிவாம் இயற்கையின் உண்மை இயைபினைக் காண்பதே நல்லறிவு. இயற்கையோடு இயைய ஒழுகல் எனும் இறைபணி நிற்-

ஞலே நல்லொழுக்கமாவது. ஆதலின், இயற்கை இயைபின் காட்சியாம் இவ்வறிவும், இவ்வொழுக்கமும் அழகேயாம். தமிழர் பாடிய நாலடியார் "கல்வியழகே அழகு" என முழங்குகின்றது. தமிழவில்லியும் "ஒழுக்கத்தழகு" எனப் பாடுகின்றான்! எனவே, அழகு வழிபாடே தமிழ்க் கடவுட்பேராற்றின் தண்ணீராய் அமைந்தது.

தமிழ்க் கடவுட்பேராறு மேற்கூறிய தண்ணீர்ப் பெருக்கால் உலகனைத்தையும் ஒன்றுபடுத்தப் புறப்பட்டது; இருபுறத்தும் பரந்திருந்த கொள்கையினரை எல்லாம் தன்னுட்கொண்டு புரண்டோடியது; "ஊரங்கண நீர் உரவு நீர்ச் சேர்ந்தக்கால், பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்." பேயைத் தொழுதாரையும் தன்னுட்கொண்டு பெருமானின் பேரடியாராக்கியது. எத்துணை நிறத்தினர் எத்துணைக் கொள்கையினர் இது போது தமிழர் என நிலவுகின்றனர்! ஈதன்றோ ஒற்றுமைக் காட்சியின் பெருமை? சிற்சிலபோது இத்தமிழ்க் கடவுட்பேராறு, பெருமலை வெளியிலே தடைபட்டுத் தடைபட்டுச் செல்லும்; சில இடத்தே மலை எதிரே முட்டிக்கொள்ளும்; ஆறும் ஓட்டமின்றித் தேங்கிக் கிடக்கும்; ஓடுந் தண்ணீரில் ஓர் அழுக்கும் இல்லை. தேங்கி நின்றால் திரு நீரும் புழுத்துப் போகின்றது. அங்ஙனம் இப்பேராறு புழுத்து நின்ற நிலைகளும் உண்டு. அந்நிலைகளில் அத்திருநீரின் கடவுள் தன்மையால் அம்மலை சிறுகச் சிறுகத்தேய்ந்துபிளவு விடுகின்றது. அவ்விடத்தே பேரொளி ஒன்று புத்தர்

என்றும், மகாவீரர் என்றும், கண்ணன் என்றும், சம்பந்தர் என்றும், அப்பர் என்றும், சங்கரர் என்றும், இராமானுசர் என்றும் தோன்றி ஒளியாற்றலினுல் அம்மலையை இடித்துடைத்து, அப்பேராற்றிற்கு வழி செய்தமைக்கின்றது. பழைமை போல, அந்த ஆறு பெருக்கெடுத்துத் தூயதாய் விரைந்தோடிப் பார் முழுதும் பரவுகின்றது.

## II

அழகு வழிபாடே அவ்வாற்றின் அருள்நீர் எனக் கண்டோம். தமிழர் தமது கடவுளுக்கு அழகு என்றே பெயரிட்டனர். முருகு என்பதே தமிழ்க் கடவுள். அழகு, உடற்கட்டு, இன்பம், இளமை, அழியாமை, நறு நாற்றம், இனிப்பு என்பன அச்சொல்லால் குறிக்கப்படுகின்றன. அழகென்பது கட்புலனமைதி ஒன்றேயன்று. ஐம்புலனும், ஆறறிவும் ஆரத்துய்க்கும் ஓர் அன்பின் மென்மையும், இன்ப நுட்பமுமே அழகாம். தேனிலும், மலரிலும், உடலழகிலும், வன்மையிலும், அழியாப் பொருளிலும் தமிழர் ஆண்டவனைக் கண்டனர். ஐம்புலனும் ஆரத்துய்க்கும் இன்ப ஊற்றினை அவர் எங்கு எங்குக் கண்டனரோ, அங்கெல்லாம் ஆண்டவனைத் தொழுது வணங்கினர். அப்பொருள் மாறினும், மறையினும், அவ்வின்பம் நிலையாய் நிற்கும் என்று கொண்டு, அதனை அழியா இளமையாம் கந்தழி எனப்போற்றினர்; அக்கந்தழி நிலையை நாடினர். மலையானது, மாலைக்-

காலத்தில் மயிற்படாம் போர்த்து விளங்குவது போலக் கண்ணைக் கவர்வது கண்டு, அங்கும் இறைவன் வடிவை எதிர்நோக்கி இறைஞ்சி-னர். சுருண்டெறிந்து ஓவென்றிரைக்கும் கருங்-கடல், கதிரவன் ஒளியால் பலநிறம் பெற்றுப் பளபள என்று மின்னுவது கண்டு, கடவுளெனக் கை கூப்பினர். நண் பகலில் நெல்லிக் கனியுண்ட பின், தண்ணென்ற தீம் பொழிலிடையே மின்-னற் பெருக்கென ஓடும் அருவி நீரையுண்டு அவ்வினிமையிலும் திருமாலாம் ஆண்டவனை அறிந்து போற்றினர். பாம்பின் பளபளப்-பினையும், அதன் கூத்தமைதியையும் கண்டு, தம் பகைமையை மறந்து அங்கும் அழகு வடிவாம் கடவுளைக் கண்டனர். கதிரவன் உலகப் பொருள்களின் உயிரூற்ருய் ஆற்றற் பிழம்பாய் விளங்கி எரிவது கண்டு இறைவன் என ஏத்-தினர். தீப்பிழம்பின் பேராற்றலையும், தூய்மை-யினையும் திறம்பட உணர்ந்து சிவனெனத் தொழுதனர். உணவு அட்டுத் தந்தும், குளிரைப் போக்கியும், இன்பந்தருவதை எண்ணி இறைஞ்-சினர். தீயிலே சிவனைக் கண்டு விருந்தோடுண்-ணுவதே எரியோம்பலாயிற்று.

இவ்வழகெலாம் கண்டு மனமுருகிப் பாடிய பாடல்களே மறைமொழிகளாயின. மறை மொழிகளோ உண்மை மொழிகளாம். உண்-மையோ உலகம்தோன்றிய நாள்தொட்டு ஒளிர்-வதொன்ரும். "பொருள்கள் தரைமேல் விழுகின் றன, தரையிலுள்ள இழுக்கு மாற்றலால்" என்ற உண்மையைக் கண்டு பிடித்தவர் நியூடனே.

ஆனாலும், அவ்வுண்மை உலகந் தோன்றியது தொட்டே விளங்கி நிற்கின்றது. அதுபோலத் திருமறையில் காணக்கிடக்கும் உண்மைகளும் ஒவ்வொருவர் வழியாக உலகத்தில் வெளி வந்தாலும் முதலிறுதி இல்லாதவையாம். இன்னும் இவ்வுண்மைகள் வெளிப்படலாம். அதனாலன்றோ இப்பேராறு இன்னும் ஓடிக்கொண்டே இருக்கின்றது? பொய்க் கொள்கைகள் இத்திருமறையில் உள்ளன என்றால் அவை ஒரு நாளும் மறைமொழிகளாகா! உண்மையே மறைமொழி என்றால், பொய்ம்மொழி மறை மொழியாவது எங்ஙனம் இயலும்? பொய்ம் மொழிகள் மயக்கத்தால் பிறருடைய இடைச் செருகலாய் வந்தவையாகும். அவ்வழுக்கை எல்லாம் நீக்கித் தூய்மையாக்குவதே இந்த ஆற்றோட்டத்தின் செயலாம்.

## III

எரியோம்பி, விருந்தோடுண்டு வருகையில், தமிழ்ப் பேராறு தேங்கத் தொடங்கியது. அம் மாக்களோ நிழலை இறுகத் தழுவி, முதலை நழுவ விட்டனர். எரியோம்பிய அழகு வழிபாட்டை மறந்து, எரியின் அழகினைக் கண்டு, அன்புரு ஆகாது, அதன் எரியுந் தன்மைக்கஞ்சிச் சிலர் விதிர் விதிர்த்தனர். தீயினை ஓர் ஆள் விழுங்கும் பேய் என எண்ணலாயினர். அப்பேய், வயிறார உண்ண, அதன் வாயில் உயிர்களையிட்டுப் பொசுக்கினால், அத்தீ மகிழ்ந்து நமக்கு அருளும் என எண்ணினர். அவ்வகையில் கள்ளுண்டு,

புலால் தின்று, கடவுளின் பகையின்றி வாழலாம் எனக் கனாக் கண்டனர். மறைமொழி என்பது அழகு நிறைந்த பாட்டு என்பதை மறந்து, அதைச் சொல்வதொன்றாலேயே எவற்றையும் பெறலாம் என முடிவு கட்டினர். மறையோதி, எரியோம்பி, கள்ளுண்டு, புலால் தின்று, உடல் கொழுத்தால், எரியிலெழும் புகையே ஏணியாக மேலுலகை அடைந்து அழகு நிறைந்த இளமங்கையரோடு எந்நாளும் இனிய கள்ளுண்டு களித்துத் திரியலாம் என இறுமாந்தனர். 'பல் யாக சாலை முது குடுமிப் பெருவழுதி' எனப் பெயர் புனைந்து கொண்டனர். மலையையும் கடலையும் வணங்கினவர்களும் அழகை மறந்து, அச்சத்திற்காளாய், மாத்தாட் கொழுவிடையும், மறியும் வெட்டி அச்செங்குருதியளைந்த சோற்றோடு திங்கள் உண்டு வெறியாடத் தொடங்கினர். பல உயிர்களின் செங்குருதியே தமிழ்ப் பேராற்றில் ஓடியது. பொய்யும், புனைசுருட்டும், புலாலும், கள்ளும் பெருமலையாய் எதிர் எழுந்தன; ஆற்றின் ஓட்டத்தைத் தடுத்தன. அறியாமை எனும் இருள் எங்கும் மூடியது.

அது பொழுது புத்தர் என்ற பேரொளி ஒரு புறம் தோன்றியது. மகா வீரர் என்ற பேரொளி மற்றொரு புறம் எழுந்து விளங்கியது. வெறியாட்டமாம் வேள்வியினை இப்பெரியோர் இழித்துப் பேசினர். வருந்தி இறந்த உயிர்களுக்காக இவர்கள் மனம் இரங்கி உருகியது. புலையும் கள்ளும் பெரும் பழி என்றனர். ஒழுக்க நிலையின் சீர்கேட்டைக் கண்டு நல்லொழுக்கமொன்றே

வீட்டு நிலைக்கு வழி என்றனர். இன்பங் கருதி அன்றோ மாக்கள் கள்ளுண்டு புலாலுண்டனர். ஆகவே,புறத்தே இன்பம் நாடுதலை எல்லா வகை-யாலும் இழித்துரைத்தனர். அழகு வழிபாட்-டிற்கு அவ்வகையில் அணைகோல வேண்டி நின்-றது. துறவறமே பேரறமென்ற முழக்கம் எங்-கும் பெரும் முழக்கமாயது. குருதியும், புலாலும், கள்ளும் அன்பு வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டன. நீரும் தூய நீராய்த் திரு நீராயிற்று. எங்கும் அன்பு மணம் கமழ்ந்-தது. ஓரறிவுயிர்க்கும் ஊறுபாடு ஒன்றுமில்லாத வகையில் உவகை எங்கும் பொங்கியது. இந்தியா ஒன்றோ! சீனம், சாவகம், கடாரம், ஈழம் முத-லான நாடுகளும் இப்பேராற்றில் குளித்துக் களித்தன. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தா-மணி, சூளாமணி என்ற அருப் பெறன் மணிகளை இவ்வெள்ளப் பெருக்கே கொண்டுவந்து நம் நாட்டிற் கொழித்தது. பதினெண்கீழ்க்-கணக்கில் பெரும் பகுதி இவ்வெள்ளத்து எழுந்த இன்னமுதாம். மக்களிடையே துன்பத்தை ஒழிக்கப் புகுந்தனர் பெரியோர் பலர். எந்-நிலையினரிடையும் கல்வியைப் பரப்பினர். நோயொழிய மருந்தாராய்ச்சி செய்யும் மருத்து-வப் பள்ளிகள் பல எழுந்தன. தூவுணவையே எவரும் உண்டனர். புலால் உண்போர் தீண்டப்-படாதாராய் ஊர்ப் புறத்தே ஒதுக்கி வைக்கப்-பட்டனர்.

IV

அன்பே உருவாக இவர்கள் திகழ்ந்த வரையில் உலகம் சீரும் சிறப்புமாக வாழ்ந்தது. பின் வந்தோர் பரந்தோடும் கொள்கைகளைத் திரட்டி உருட்டி ஒரு வடிவாக்கத்தொடங்கினர். உண்மை அறிவின் வடிவாம் கடவுளை மறுத்தனர்; அழகு வழிபாட்டை நிரயவழி எனப் பழித்தனர். எறும்பையும், ஈயையும் தொடவும் அஞ்சி அன்புருவானோர், தம்மொடு மாறுபட்ட மக்களைக் 'கண்டு முட்டு', 'கேட்டு முட்டு' என அன்பிலாது பழித்துப் புறத்தே ஒதுக்கினர். துறவினை அனைவரும் மேற்கொள்ள முடியுமோ? இந்நாளில் துறவிகளில் பலர் கூடா ஒழுக்கம் கொண்டு திரிவது போல, அந்நாளிலும் பலர் திரிந்திருப்பர் அன்றோ? மக்கள் இயல்பு இருபதாம் நூற்றாண்டில் வேருகவும், ஆரும், ஏழாம் நூற்றாண்டுகளில் வேருகவுமோ அமைந்து கிடக்கும்! புத்தரும், மகாவீரரும் வெட்டிவிட்ட பேராறு தேங்கித் தயங்கியது. அன்பு ஊற்று அடைபட்டது. திருநீரோடு தெருநீரும், சிறுநீரும் கலந்தன. களவு, புலை, பொய்யொழுக்கம், துன்பம் என்பவை பெருமலையாய் நீரோட்டத்தைத் தடுத்தன. அப்பர் என்ற வெள்ளி முளைத்தது. சம்பந்தர் என்ற கதிரவன் தோன்றினன். இருண்மலையும் தேய்ந்தொழிந்தது. அன்பு வழிபாடு வற்புறுத்தப்பட்டது. முன்புபோல அழகு வழிபாடும், அறிவு வழிபாடும், ஒழுக்கவழிபாடும் தமிழ் நாட்டில் தளிர்த்துத் துளிர்த்தன. பேரா–

றும் பெருகி ஓடியது. மறைக்காலத்து நீரும் அதில் ஒடுகிறது. புத்தர் காலத்து நீரும் அதில் ஓடுகிறது. மகாவீரர் காலத்து நீரும் அதில் ஓடுகிறது. புத்தர் கொள்கையும் அழியவில்லை; மகாவீரர் கொள்கையும் அழியவில்லை. கலங்கல் நீரே தெளிந்தோடியது; பாசியே நீங்கியது. நச்சுப் புழுக்களை அன்பு மீன்கள் உண்டு நீரை அமுதாக்கின. இனிமை மிகுந்தது. இன்பப் பூ மலர்ந்தது. அறிவொளி வீசியது. பேரொளி-யாம் பெரியோர் ஆக்கப் பிறந்தவரே யன்றி அழிக்கப் பிறந்தவரல்லர். புத்தரும், மகா வீரரும் சீர் திருத்தம் செய்த செவ்வியோராவர். அவர்களை அழிக்க வந்தார்களாக்கிய பழி அவர்களுக்குப்பின் வந்தோரைச் சேரும். சம்பந்தரைக் கொலையாளியாக்கிய பழி அவர் பின் வந்த அடியாரைச் சேரும். ஒரு சிலர்பால், மறைந்து மழுங்கி நின்ற சமணக் கொள்கைகள் சம்பந்தராலேயே தமிழர் அனைவரிடத்தும் பர-வின என்பதை மறுத்தல் இயலாது. புலா-லுண்ணாமை பேரறமாய் எங்கும் பரவியது எப்-போது? அறவொழுக்கத்தே புகாதவர் வீடு பெறுவதில்லை என்பதை எதுபோது தமிழர் பெரிதும் வற்புறுத்தத் தொடங்கினர்? கள்-ளுண்டு புலால் தின்றவர் அன்றோ இவ்வாறு மாறினர்? எரியோம்பலும் ஊனமில் வேள்வி யாய் விட்டது. கள்ளும் புலாலும் ஒழித்து, மாவும் அப்பமும் உண்டு களித்துப் பலர் தீயுரு-விற் சிவனைத் தொழலாயினர்.

## 2. சமணரும் கடவுளே

I

இவ்வொற்றுமைக் காட்சி, யாம் இன்று புத்தம் புதியதாகக் கண்டதொன்றன்று. சம்பந்தர் கண்ட காட்சியேயாம்; அவரது பாடல்கள் வழியாக நாம் ஒரு சிறிது உணர்ந்ததேயாம். எல்லாம் இறைவன் வடிவு என்பதும், எவர் செயலும் இறைவன் செயல் என்பதும் அப் பெரியாருடைய துணிபு. அங்ஙனமாயின் சமணர் செயலும் சிவன் செயல் என்பது திண்ணம். அவர்களும் இறைபணி செய்கின்றனர். ஆண்டவனது திருமொழியே பேசுகின்றனர். என்னே? எப்பொருளும் இறைவனுனல் எச்சொல்லும் இறைவனையே அன்றோ குறிக்கும்? அவ்வழியாக நோக்குமிடத்து ஆண்டவனைப் போற்றுதார் இல்லை; புகழாதார் இல்லை.

"உரையாதாரில்லை யொன்று நின்றன்மையைப்
பரவாதாரில்லை நாள்களும்"

"பூத்தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தாதா ரில்லை எண்ணுங்கால்
ஒத்தூர் மேய ஒளிமழு வாளங்கை
கூத்தீரும்ம குணங்களே"

"தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்பு கழ்ந்து
ஓதாதார் உளரோ திருவோத்துர்
ஆதீரே அருள் நல்குமே"

என்று பாடுகின்றார் சம்பந்தர்.

எனவே, இவ்வகையில், இறைவனது அருள் வழி நின்ற புத்தர், சமணர் முதலானோர் செய்யும் வழிபாடும், புனைந்துரைக்கும் திருப்புகழும் ஆண்டவனையே சேரும். மேனோக்காக நோக்குமிடத்து, அவருரைகள் ஆண்டவனைப் பழிப்பதாகத் தோன்றினாலும், அந்தப் பழிக்கும், அவனை அன்றிப் பொருள் வேறில்லாமையால், அவனது திருப்புகழாய்ச் சிறப்புறுகின்றன. அவர்களும் உயிர் வாழ்ந்து உலகில் உயர்ந்து விளங்குவது அவனருளே அன்றோ? அன்னோர், ஆண்டவனைப் பழித்துரையாடினாலும், தாம் தாம் அறிந்த அறவழியில் நிற்கின்றனராதலின், அம்மட்டில், அவ் அறத்தின் பயனை அவர்களுக்கு அருளுவிப்பவனும் ஆண்டவனே அன்றோ?

> "போதியாரும் பிண்டியாரும் புகழல சொன்னாலும்
> நீதியாகக் கொண்டங் கருளும் நிமலன்."

[போதி - புத்தர் அறிவு விளக்கம் பெற்ற ஆலமரம்; போதியார் - புத்தர்கள். பிண்டி - மகாவீரர் அறிவு விளக்கம் பெற்று விளங்கும் அசோக மரம்; பிண்டியார் - சமணர்கள்.]

என்ற உண்மையையும் நிலை நாட்டுகின்றார். அவர்கள், இகழ்ந்துபேசுவதும் சிலரிடை காணக்கிடக்கும் குற்றத்தை முதலாகக் கொண்டே அன்றோ? குற்றங் களைவதும் கோயிலமர்ந்த கோமானின் குறிப்பன்றோ? அவ்வகையிலும் அவர்களது மறவுரை அறவுரையாகின்றது.

II

அம்மட்டோ! சமணமும், புத்தமும் யார் நிலை நாட்டிய கொள்கைகள்? "அவனன்றி ஓரணு-வும் அசைவதில்லை," என்றால், அவற்றை நிலை நாட்டியவனும் நமது ஐயனேயாகும். பால் குடிக்கும் குழவி, சோறுண்டால் சாகும். சோறுண்ணும் குழவி பாலுண்டால், சவலை போகும். குழவியின் உடலுரத்திற்குத் தக்க உணவினைத் தாயானவள் அறிந்து, ஊட்டுவது போல, ஆண்டவனும் இயற்கையன்னையும், அவ்வவருடைய உள்ள நிலைக்குத் தக்க கொள்கையினை அவ்வம்மக்களிடை பரப்பு-கின்றாள்.

> "ஆயாதன சமயம்பல அறியாத அந்நெறியின்
> தாயானவன்."

என்கிறார் சம்பந்தர். எனவே சமணத்தையும், சாக்கியத்தையும் ஆக்கியோனாய் விளங்குபவன் ஆண்டவனேயாம். புத்தரும், மகாவீரரும் அந்த வகையில் இறைவன் வடிவினரேயாவர்; அவன் ஆட்டஆடியவராவர்; அவன் காட்டக் கண்ட-வராவர்.

> "துணைநன்மலர் தூய்த்தொழுந் தொண்டர்காள் சொலீர்,
> பணைமென் முலைப் பார்ப்பதி யோடுட னாகி
> இணையில்லிரும் பூளையிடங் கொண்ட ஈசன்
> அணைவில் சமண்சாக்கிய மாக்கிய வாறே,"

என வினவுகின்றார் சம்பந்தர். இறைவனே இவற்றை ஆக்கினான் என்பதில் ஒரு வினாவும் எழவில்லை. "இறைவன் இவற்றைப் படைத்தது

ஏன்? ஒரு குறிப்பு இருத்தல் வேண்டும். அக்-குறிப்புத்தான் என்னை?" என்றே வினு எழுகின்-றது. "அக் காலத்திற்கு அவை ஏற்றவையாய் இருந்தது பற்றி இறைவன் ஆக்கினன் போலும்" என்ற குறிப்புப்பொருளும் இவ்வினவுரையில் சுரக்கின்றது. இனிச் சமணர் கொள்கையை உலகிடைப் பரப்பிய மகாவீரர்க்கு வர்த்த-மானர் என்ற ஒரு சிறப்புப் பெயர் உண்டு. ஒரு வகையால் நோக்குமிடத்து அவரே சமண் கொள்கையை ஆக்கியவர் எனலாம். இறை-வனே அவ்வர்த்தமானர் என்பது பட,

"சாமகீதர் வர்த்தமானர் சண்பை நகராரே"

(1.66.10.4)

எனப் பாடுகின்றார் சம்பந்தர். சமண் சாக்-கியமாக்கியவன் இறைவனே என்பதைப் பின்-னும் இவ்வாறே வற்புறுத்துகின்றார்.

அவர்கள் வழிபாடும் சிவ வழிபாடே; அவர்-கள் உரையாடலும் இறைவனுரையே; அவர்-கள் மறவுரையும் அறவுரையே; அவர்கள் கொள்கையை நிலைநாட்டியவனும் ஆண்டவனே! அம்மட்டோ? எல்லாம் இறைவன் வடிவாய போது சமணரும் புத்தரும் மற்றையோரும் அவன் வடிவே அன்றோ?

"போழம் பலபேசிப் போது சாற்றித் திரிவாரும்
வேழம் வருமளவும் வெயிலே துற்றித் திரிவாரும்
கேழல் வினைபோகக் கேட்பிப்பாரும் கேடிலா
ஆழ்வர்பழையனூர் ஆலங்காட் டெம்மடிகளே."

என்று பாடுகின்றார் சம்பந்தர்.

போழும் என்றால் முறைகேடான பிளவுப் பேச்சு. போழ்க்கன் என்பது காண்க. புத்த பெருமானது நல்லுரைகளை மூன்று நூல்களாகப் பின் வந்தோர் தொகுத்தனர். அறவுரைகளாகிய பூக்களைத் தொகுத்து வைத்த பூக் கூடைகள் என்று அந்நூல்களுக்குப் பெயர் வழங்கல் ஆயிற்று. பூக்கூடை என்பதனைப் பாலி மொழியில் 'பிடக்கு' என்பர். அதனால் புத்தர்களுக்குப் பிடக்கர் என்னும் பெயர் வந்தது. புத்தரது அறவுரைகளாகிய போதுகளை உலகினருக்கு விலை கூறித்திரியும் புத்தர்களும் ஆலங்காட்டடிகளே. குறக் கெடுத்துக் (வேழம்) குடையும் வரையில், வெயிலிலே நின்று நோன்பு (தவம்) நோற்றுத் திரியும் சமணர்களும் ஆலங்காட்டிகளே. எருவிற் புரளும் பன்றி (கேழம்) போல, அழுக்கிற்புரண்டு, தீமையே நச்சித்திரியும் இத்தகைய இயல்பு கெட, நல்லுணர்வு கொளுத்தி, அவர்களில் நல்லோரது அறவுரையைக் கேட்பிப்பவரும் ஆலங்காட்டடிகளே ஆவர். இவ்வாறு கேடுள்ள பொருள்கள் போலத் தோன்றினாலும் கேடிலா இன்ப அன்பில் ஆழ்ந்து விளங்கும் தவப்பெரியோர் ஆவர்.

III

எனவே, யாதோ ஒரு குறிப்பினால் இறைவன் படைத்தருளிய கொள்கையை அழித்தலும் இறைவனைப் பழித்தலாக முடியும். அதுபற்றி அன்றே சமணர்களோடு மன்றுடப் புகுந்த போது, இறைவன் இணக்கத்தை விரும்பி நிற்-

கின்றார் சம்பந்தப் பெருந்தகையார்? ஒன்றுக்கு இரண்டாக, "காட்டுமாவதுரித்துரி போர்த்துடல்" என்ற திருக்கடைக் காப்பும், "வேத வேள்வியை நிந்தனை செய்துழல்" என்ற திருக்கடைக்காப்பும் பாடி, ஒருமுறைக்கு இருபது முறை "வாது செயத் திருவுள்ளமே" என்று வேண்டி, ஆண்டவனை விடை கேட்கின்றாரன்றோ? எனவே, அவனருளின்றிச் சமணரோடு மன்றாடுவதும் ஒண்ணாது என்பதாயிற்று. அக்காலத்தில் அறம் பிறழ்ந்தமையால் மன்றாட வேண்டியதாயிற்று. ஆண்டவனருளும் ஆளுடைய பிள்ளையாருக்குக் கை கூடுவதாயிற்று.

இவ்வளவும் கூறியமையால், சம்பந்தர் சமணர்களுடைய கொள்கைகளை ஆக்கப் பிறந்தவரே அன்றி அழிக்கப் பிறந்தவரல்லர் என்பது தெளிவாகின்றது.

## 3. பேய்த்துறவு

I

சம்பந்தர் தனது திருக்கடைக்காப்புகளில் பத்தாவது பாடல் தோறும் புத்தர்களையும் சமணர்களையும் பழித்துரையாடவில்லையா? சமணர்களையும் புத்தர்களையும் அழிக்கவேயன்றோ, அப்பெரியார் தோன்றினார்? சம்பந்தருடைய தகப்பனார் சமணரை அழிக்க ஒரு பிள்ளை வேண்டும் என நோன்பு நோற்றார் எனச் சேக்கிழார் பாடுகின்றார் அன்றோ?

"மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்மிகுத்தே
ஆதிஅருண் மறைவழக்கம் அருகிஅர னடியார்பால்
பூதிசாத னவிளக்கம் போற்றல்பெரு தொழியக்கண்(டு)
ஏதமில்சீர் சிவபாத இருதயர்தாம் இடர்உழந்தார்."

"மனையறத்தில் இன்பமுறும் மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறுமுன் பரசமய நிராகரித்து நீறுக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்
புரிந்தார்"

(திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம் 18, 19) என வரும் பெரிய புராணப் பாடல்களைக் காண்க.

சமணரை அழிக்கவே இறைவன் அருள் வழியே பிறந்தாராஞல், சமணர் இன்றைக்கும் நிலைநின்று விளங்குவது எதனாலே? அன்றியும் அப்பெரியார் தாம் எது பற்றி இவ்வுலகத்தில் தோன்றினாரோ அதனை முடிக்க வில்லை என முடியும். அவ்வாறன்று; சம்பந்தர் செய்ய வேண்டியவற்றை செய்து முடித்தவரேயாவர். செயற்கரிய செய்த இப்பெரியாரது திருப்பணிதான் என்ன?

சமணக் கொள்கையும், புத்தர் கொள்கையும் நாம் முன்னர்க் காட்டியபடி தமிழர் கொள்கையேயாம். அத்தமிழ் வயலில் களைகள் மூடிக் கொண்டன; பைந்தமிழ்ப்பயிர் வாடத்தொடங்கிற்று. அந்நிலையில் அக் களைகளை நீக்கிப் பண்டைப் பைந்தமிழ்ப் பயிரைச் செழித்து வளரச் செய்யவே சம்பந்தர் தோன்றினர். களை கட்டித்

தமிழ் வான் பயிரை தழைத்தோங்கச் செய்தார். அதற்கே பிறந்தார். அதனையே செய்து முடித்தார். இதனைத்தான் சேக்கிழாரும் குறிக்கின்றார். சில கருத்துக்கள் நமக்கு உண்மை அல்லவென்று தோன்றினால், நாம் அவற்றை மறுத்துரையாட வேண்டுவது நமது கடமையாகும். ஈதே இயற்கை வழியே இறைபணி நிற்றலாகும். இவ்வாறு ஒவ்வொருவரும் ஒளியாமல் உண்மையை எடுத்தோதியதால் அன்றோ உலகமும் உண்மை வழியே உலவுகின்றது?

" தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும் "

என்ற குறளுக்கு இவ்வாறும் பொருள் கொள்ள இடமுண்டன்றோ? சம்பந்தர், இவ்வாறு சிலர் கொள்கைகளைக் குறிப்பாலும் வெளிப்படையாலும் மறுத்துரையாடுகின்றார். அதற்கு மேலும் ஒருபடி சென்று சில செயல்களை எள்ளி நகையாடிப் பழித்துரைக்கின்றார். இவ்வாறு பழிப்பதும் அறமேயோ என்பதே கேள்வி.

(சம்பந்தர் காலத்தில் தலைவிரித்தாடியவர்கள் சமணர்களில் சிலரேயாவர். அந்நாளில் புத்தர்கள் அத்துணைச் சீரும் செல்வாக்கும் பெற்று விளங்க இல்லை. எனவே, இப்பெரியார் சமணரோடுதான் பெரிதும் மன்றுடவேண்டியிருந்தது. ஆனால், சம்பந்தரே சமணர்கள் அனைவரையும் பழிக்கவில்லை. அவர்களில் துறவறம் பூண்ட ஒரு சாராரையே பழி தூற்றுகின்றார். அத்துறவினருள்ளும் வெள்ளை உடுத்த சுவேதாம்பரர், உடை-

யிலாது திரிந்த திகம்பரர் என்ற இருவகையின-
ரில், பின்னவரையே இகழ்ந்துரைக்கின்றார்.
இவர்கள் துறவு கடுந்துறவு; பேய்த்துறவு.
இவர்களிடையும் கூடா ஒழுக்கத்தையே பழிக்-
கின்றார். ஒருவகையால் நோக்குமிடத்துச் சமண-
ரது துறவினைமட்டும் இவர் கடிகின்றார் இல்லை.
எவரிடத்துக் காணப்படுவதாயினும் புறத் துற-
வாம் கடுந்துறவினையே கடிந்து பேசுகின்றார்.
இவ்வாறு உடையின்றி உலவி உடலை வாட்-
டியவர்கள், சமணர்களிடை மட்டுமா விளங்கி-
னார்கள்? பண்டை நாள் கதையைப் படிப்போ-
மானால், பாலா கார்கி என்ற இளம் பெண்
கடுந்துறவியாய்ச் சனகனது அரசு மன்றத்தில்
நின்று மறைமுடிவினை (உபநிஷத்) விளக்கிய-
மையும், அவ்வம்மையார் உடையின்றி நிற்ப-
பதைக் கண்ட மற்றை முனிவர்கள், நாணத்-
தால் தலை குனிந்து நின்றமையும் அறிவோம்.
மற்றும் பலர் உடையின்றித் திரிந்தமையும்
நமக்கு விளங்கும். பழைய நாளில் அந்நிலை
தீமை பயவாது சிறந்திருக்கலாம். எல்லோரும்,
உடையணிந்து, உடலை மூடி வாழ்கையில், ஒரு
சிலர் உடையின்றித் திரிவது ஒழுக்க நிலையைக்
குலையச் செய்யும். மலையாளத்தில், பெண்கள்
மேலுடையின்றித்தெருவே திரியும்போது, அத-
னைக் கண்டு பழகிய மக்கள் மனஞ் சிதறுவதில்லை.
ஆனால், பிறநாட்டான் ஒருவன், அங்குச் சென்-
றால், அவன் மனம் கலங்குகிறதன்றோ? அவ்-
வாறே, உடையின்றித் துறவிகள் எனச் சிலர்
மட்டுமே பெண்கள் எதிரே, வெளிவந்தால்,

ஒழுக்கத்தழகால் உயர்ந்தோர், அதனைப்பழிக் கவே புகுவர். எல்லோரும் உடையின்றியே உலவுவராஞல், அது வேருெரு கதை எனலாம். ஆகவே, சம்பந்தர் சமண்மேல் வைத்துக் கூறி-ஞலும், அவர் நோக்கம் புறத்துறவளவில் நின்று விடும் கடுந்துறவனைத்தையும் கடிவதே எனலாம்.

## II

உடையினைத் துறப்பதனைப் பழிப்பது போலப் பெண்களென உடல் முழுவதும் மூடித் திரிவதனையும் பழிக்கின்ருர். அளவுக்கு விஞ்சி-ஞல் அமுதமும் நஞ்சாம். எத்தொழிலையும் மிகுதி செய்தலும் ஒண்ணுது; குறைவாகச் செய்-தலும் ஒண்ணுது. இடை வழியாம் நடுநிலையே உயர்நிலையாம். உடையே இன்றி உழல்வதும் பழி; உடம்பிற்குப் போதியவற்றிற்கு மேல் வறிதே உடைகளைச் சுமத்தலும் பழி. வாழ உடுக்கின்ருேமே அன்றி, உடுக்க வாழவில்லை. அல்லாக்கால் உடைக்கு அடிமையாவோம். அங்-ஙனமே உடைமேல் சினந்து துறந்தால், அதற்கு இல்லாததோர் ஏற்றத்தைக் கொடுத்தவரா-வோம். இருதலையும் புறஞ் செல்லாது, இடை நின்று, நாட்டின் நிலைக்கும், வழக்கத்திற்கும் ஏற்ற அளவு உடலை மறைக்க உடையணிந்தால் போதும் அன்ருே?

உடையினைப் பற்றிப் பேருரை நிகழ்த்தவோ சம்பந்தர் பிறந்தனர் எனச் சிலர் நகைக்கலாம். அஃது அவர் குற்றம் அன்று. அந்நாளைய சம-

ணரும், புத்தரும் உடையைத் துறப்பதாலும், போர்த்துவதாலும் வீட்டு நெறியே போகலாம் என எடுத்துரைத்து, மன்ருடியது பற்றியே பழித்துரையாட நேர்ந்தது. உடை துறந்த நிலையைப் பாவின் நயமெலாம் பரந்து வரப் புனைந்துரைக்கின்றனர், சமணரில் ஒருவராகிய திருத்தக்க தேவர்.

மணியுறை கழிப்பநு போல மங்கலப்
பணிவரும் பைந்துகில் நீக்கிப் பாற்கடல்
அணிபெற அரும்பிய அருக்கனும் எனத்
திணிநிலத் தியன்றதோர் திலகம் ஆயினன்,

எனவரும் சிந்தாமணிச் செய்யுளைக் காண்க.

"பெட்டியில் மறைத்து வைத்த மணியினை, வெளியெடுத்தபோது, விளங்குவது போல, நன்மையமைந்ததாய்க் குறை கூறுவதற்கரிய-தாய்த் தன்னுடலொளியை மறைத்த பைங்-துகிலை, நீக்கியபோது, பாற்கடலில் அழகா-கத் தோன்றிய கதிரவன் உலகத்தினிடை வந்த-னன் என்று கண்டோர் வியக்குமாறு, உலகின் முகத்திற்கே அழகு தரும் திருப்பொட்டாய் விளங்கினன் சீவகன்" எனப் புனைந்துரைக்கின்-ருர். இத்தகைய புனைந்துரைகளைக் கேட்ட சம்-பந்தர் பழித்துரையாட முன்வந்தார்.

உடையினைத் துறப்பதே பெருந்துறவென்ற போது உண்மையினைக் கூறி, அதனை மறுத்-துரையாட வேண்டாவா?

" குறங்காட்டு நால்விரலிற் கோவணத்துக்
கோலோவிப் போய்,
அறங் காட்டும் சமணரும், சாக்கியரும்:"

(திருமுறை 3-பதிகம் 177)

"காட்டுமிராண்டிகளான குறவரும் நால் விரல் அவ்வளவு உடையணிவர். (கோல்-கோலம்) அவ் வொப்பனையையும் துறப்பதே துறவு;அஃதே அறம் என ஒழுக்கம் காட்டுகின்றனரே சமணர்!" என நயம்பட எள்ளி நகையாடு கின்றனர்.

" ஆடை தவிர்த் தறங்காட்டும் அவர்கள் "

[2-204] " உடையைத் துறந்து உடலைக் காட்டுவதே அறங்காட்டுவதாகுமோ? உமது உடலமோ அறப்பேழையாவது" என எவரும் நகை கொள எடுத்துக் காட்டுகின்றார்.

" பெண்ணகத் தெழிற் சாக்கியப் பேய் "

[3-305] என்று பாடுகின்ற சம்பந்தர், புத்தர்கள் பெண்களைப் போல உடலெல்லாம் மூடித் திரி-வதையே பழிக்கின்றார் போலும்! ஒருவர் உடை துறத்தலைப் புகழ, மற்றையார் உடை அணிவதைப் புகழ்வதைக்கண்டு இரு கொள்கையினையும் ஒருங்கே வைத்திகழ்ந்து முரண்-பாட்டை நன்கு விளக்குகின்றார்.

நக்குருவாயவரும் துவராடை நயந் துடையாம்
பக்கர்கள்.' (3-319.)

ஆடை தவிந்தறங் காட்டுபவர்களும்
அந்துவராடைச் சோடைகள்

வேர்த்த மெய்யுருவத் துடைவிட்டுழல்வர்களும்
போர்த்த கூறைப் போதி நீழலாரும்.

துவராடையர் தோலுடையர்கள். (1-36)

"உடற்குடை களைந்த வருடம்பினை
மறைக்கும் படக்கர்கள்" (2-16)

"உண்டுடுக்கை யின்றியே நின்றூர் நகவே திரிவார்
கண்டுடுக்கையின் போர்த்தார்" (1-65)

ஆடையொழித்தங் கமணே திரிந்துண்பாரல்லல் பேசி,
மூடுருவ முகந்தார்.

செந்துவ ராடையினரும் வெற்றரையே
திரிபுந்தி யிலார்களும்.

மிடைபடு உடையினை விட்டு ளோரும்
உடல் போர்த்துளோரும்.

உடை நவின்றருடை விட்டுழல்வார் ;

வெற்றரை யாகிய வேடங்காட்டித் திரிவார் துவராடை
யுற்றரை யோர்கள்.

தூசு புனை துவராடை மேவும் தொழிலாருடம் பினிலுண்
மாசு புனைந்துடை நீத்தவர்கள்.

நீறுமுடை கோவண மிலாமையிலோவிய தவத்தவர்
பாறு முடன் மூடு துவராடையர்கள்.

உடை துறந்தவர்களும் உடைதுவராடையரும்,

துற்றரையர் துவராடையர் துப்புர வொன்றிலா
வெற்றரையார்.

என வருதல் காண்க.

தோலுடையார் 'என்பது நகைச்சுவை ததும்புமொரு சொற்றொடர். உடையைத் துறந்ததாகப் பறைசாற்றி வெளிவந்த இன்-

ஞோர், உண்மையாய்த் தோலுடையினைத் துறக்க-வில்லையே என எள்ளி நகையாடல் காண்க. நாணம் என்பதனைக் கருதாது இவ்வாறு உடை இன்றித் திரிவதைப் பழிக்கின்றார்.

நாணார் அமணர் (2,72.)
நாணதுடை நீத்தோர் (1, 98.)

என வருதல் காண்க. இவர்கள் இவ் வண்ணம் நாணம் என்பது சிறிதுமின்றிப் பெண்கள் எதிர் வருவதே சம்பந்தர் மனத்தில் உறுத்தியது.

பூவையாய்த் தலைபறித்துப் பொறியற்ற சமணீசர்
[சொல்லே கேட்டுக்,
காவிசேர் கண்மடவார் கண்டோடிக் கதவடைக்குங்
[கள்வன்.

என்றும்,

(திருநாவுக்—பழமொழி—பண் காந்தாரம்–8)

பதியொன்று நெடுவீதிப் பலர் காண நகை
நாண துழிதர் வேன்.

(மேற்படி 7)

என்றும் அப்பர் பாடுகின்ற நிலையை நாள் தோறும் கண்டு சம்பந்தர் மனம் புழுங்கியே பாடுகின்றார் போலும்.

தடுக்கினை இடுக்கி மடவார்கள்
இடுபிண்ட மதுஉண்டு உழல் தரும்
கடுப் பொடி உடற் கயவர்.

குருளை எய்திய மடவார் நிற்பவே
குஞ்சியைப் பறித்தும்

என வருதல் காண்க. இத்துறவிகள், நாணம் விட்டவர்களாய் இருந்தால், இவர்கள் அளவி- லேனும் பழி யொன்று மில்லை எனலாம். ஆனல், இவர்களுக்கும் உள்ளுக்குள், நாணம் இருந்தது என்பதனை,

'தடுக்கா லுடன் மறைப்பார்,'

என்றும்,

'பாயுடுப்பார்'

என்றும்,

'பின்னெடு முன்னிடு தட்டை சாத்தி'

என்றும் பாடுகிறுர். உடையைத் துறந்து செல்வோர் பெண்கள் வரின் தம்முடலை மூடிக் கொண்டனர் போலும். அங்நிலையில் அவர்கள் மனம் எவ்வாறிருந்திருக்க வேண்டும்?

III

'கேழல் வினை' எனச் சில துறவிகளது செய- லைப் பழித்தமையை முன்னரே கண்டோம். அத்துறவிகள் உடலையும், கண்ணையும், வாயினை- யும் கழுவாது, மாசு படிந்த மேனியராய்த் திரிந்- தனர்; உடலைக் கழுவுவதும் மேனி மினுக்கென எண்ணி அதனையும் துறந்தனர். குளிப்பதும் காமத்தினைத் தூண்டும் என்பதும் ஒரு கொள்கை. கணவனைப் பிரிந்த கற்புடைய மங்கைமார் குளிப்பதில்லை எனப் புலவர் புனைந்- துரைக்கவில்லையா? இது ஒருவகை நோக்கம். சம்பந்தர் வேறொரு நோக்கத்தில் பாடுகின்றுர். உண்மைத் துறவில் எல்லாம் உண்மையாம்; பிற இடத்திலேயே பழி பேச இடம் உண்டு.

கடுநோன்பிகள் என்ற பழிக்கு மறுப்புரையாக நீலகேசி உரை கூறுவதும் காண்க. "யாங்கள் கொலை முதலாகிய பாவ நிவர்த்த்யர்த்தமாகச் சக்திக்குத் தக்கவாறு அநசனாதிகள் செய்து விஷயானுபவம் துறந்தனம். யாங்கள் பலகாலுண்ணவும், தின்னவும், குளிக்கவும், தாம்பூல சேவை முதலாயின பண்ணவும் புகுவோமாகில் ஆர்ஜனரக்ஷணாதி வ்யாபாரங்களால் கொலை முதலாயின பாவங்களும் ஞானத்யான விக்னங்களும் ஆதலின் 'சக்தி தத் ஸத்யாதபஸி' என்பது எம் ஓத்தாகலின் சத்தியை அதிக்ரமித்து அநசனாதிகள் செய்வதும் இல்லை. வெய்யில் நிலை முதலாயினவும் வனசரராய் நின்று சகல வ்யாபாரங்களும் துறந்து ஒருவழி நிற்றல், இருத்தல் செய்து ஞான த்யானங்கள் பயில்வுழி, வெய்யிலும் மழையும் காற்றும் முதலாயின வந்தால் அவற்றைச் சக்திக்குத் தக்கவாறு பொறுத்தாம். என்னை !

> உற்ற நோய்நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு.

என்பது எம் ஓத்தாகலின். தாமே வந்தன பொறுத்தல் அல்லது வெய்யில் முதலாயினவற்றுள் வருந்துதலே தவம் என்று சொன்னோமோ? இல்வாழ்க்கைக்கண் நின்றாரும் இல்வாழ்க்கைக் காரியங்களுள் ஒன்று செய்வுழி ஒழிந்த காரியங்கள் துறந்து கிருஷி முதலாயின செய்ய அவ்வழி வந்த வெய்யில் முதலாயினவும் சக்திக்குத் தக்கவாறு பொறுப்பதற்காகக் காயம் வருந்தினாராவரோ ?"

எனினும் இத்தகைய நிலைகளின் அடிப்படையை மறந்து புறக் கோலத்தையே வற்புறுத்துவது இயல்பாகிவிடும். புறத்தையே நோக்கினால் அகநிலையின் உண்மை மாறி உள்ளம் வெம்பும். தீயன ஒழியாது உள்ளோடி மறையும்; அற்றம் பார்த்து ஆளைக் கவிழ்க்கும். இந்த நிலையையே சம்பந்தர் மறுத்துரையாடுகின்றார். இந்த நிலை எந்த மதத்திலும் எழலாம். உடல் நலத்தால் மன நலம் சிறுறுவதனை சிலர் அறியார் போலும். இவ்வாறு அழுக்கிற் புரளுவோர், அயலார் அனைவோர்க்கும் நஞ்சாகி அன்றோ முடிகின்றனர்? அழுக்கிலன்றோ பல நோய்களும் விளைகின்றன? இத்தகையார் மக்களனைவர்க்கும் பகையாயினர்; மறலியாயினர். ஊத்தை வாயொடும், பாசிப் பல்லொடும், கொதுகருக் கண்ணொடும், மாசு படிந்த உடலராய் உலவினால் யார் கண்தான் பொறுக்கும்? ஊத்தை ஒழியச் சுக்குங் கடுவுந்தின்றனர்; உடல் நாற்றம் ஒழிய கருப் பொடி பூசினர். இதனால் மாசு கழியுமோ?

மாசேறிய உடலர் அமண் கழுக்கள்,
மூசு கருப்பொடியாரும்,
மாசடைந்த மேனி யாரும்,
கண் தான் கழுவா முன்னே ஓடிக் கலவைக்
கஞ்சியை உண்டாங் கவர்கள்.
தூமெய் மாசு கழியார்
கருப் பொடி யுடற் கயவர்.
ஊத்தை வாய்ச் சமண் கையர்.
மாசுடம்பினர்.
கருகு முடலர்
குளித்துருவமணர்.

என வருதல் காண்க. நகைச் சுவை ததும்ப, இன்னோரை "நீரையும் வெறுத்துத் துறவு பூண்டோர்" எனப் புனைந்துரைக் கின்றார் சம்பந்தர்.

அலையார் புனலை நீத்தவரும்.

என வரும் பாட்டின் நயம் பாராட்டற்பாலதாம். ஒருநாள் குளியாமற் போனால் வீச்ச நாற்றம் வீசும் நம்முடலம், நீர்த்துளியும் மேல் தெறியாதவாறு, நீர்த் துறவு பூண்டால் என்ன நிலையில் புழுங்கும்? இதனினும் எரிவாய் நிரயம் என்பது வேறொன்றுண்டோ?

IV

அம்மட்டோ! சிலர் கடுந்துறவு இருந்தபடி? தம்முடலை ஒறுக்கும் வகையால் எல்லாம் ஒறுக்கினர். வேர்வை அரும்பாதபடி ஓரிடத்தே குந்தி இருந்தாராயின், இவர்களை ஒருவரும் பழித்திரார். "வேழம் வருமளவும் வெயிலே துற்றித் திரிவார்" என முன்னரே அவர்கள் நோன்பினைப் புனைந்துரைத்தமை கண்டோம். உடலைப் பொரித்தெடுக்கும் வெயிலில், புற்றின் மேலேறி மீன் உணங்குவது போல, உணங்கிக் காய்ந்தனர்; உடலெல்லாம் வேர்வை சிந்த நின்றனர்; காலெலாம் குடையும் வரை நின்றபடியே நின்று உடலை வாட்டினர். அழுக்கு மெய் கொண்ட ஊத்தை வாய்க் கொதுகருக் கண்ணிகள், ஒரு நாள் போலப் பல நாளும் கால் வீங்க வேர்த்துடல் விரிய வெயிலில் நின்றால், அவர்களது உடல் நாற்றத்தைப் பிணநாற்றம் என்று

தான் சொல்லக்கூடும். அத்தகைய உடலோடும் பெண்களெதிர் வந்து ஐயம் ஏற்றுண்பதை எவரே கண்டு களிப்பார்?

வேர்த்த மெய்யர் உருவத்துடை விட்டுழல்வார்
தூய வெயினின் றுழல்வார்,
புற்றேறி யுணங்குவார்.
வழியருகு சாரவெயில் நின்றடிசில்
உள்கி வருவார்.
வேர்வந் துறமா சூர்தர வெயில்
நின்றுழல் வார்.

என வருதல் காண்க. இவர்கள் வெறுங் கட்டை போல் வெயிலில் நிற்பது கண்டும் மனம் இரங்குகின்றார் சம்பந்தர்.

தறி போலாம் சமணர்.

எனப் பாடுதல் காண்க.

V

உணவு கொள்வதிலும் சில கட்டுத் திட்டங்களைச் சிலர் ஏற்படுத்தி இருந்தனர். வீட்டு நெறி நிற்பவர் கையிலேயே உண்ணுதல் வேண்டும் என்றனர் சமணர். மண்டையிலேயே (திருவோடு) உண்ணுதல் வேண்டும் என்றனர் பௌத்தர். நண்பகல்(உச்சி) ஆவதற்கு முன்னரே உண்ணுதல் வேண்டும் என்றனர் பௌத்தர். இரவாவதற்கு முன் உண்டால் சாலும் என்றனர் சமணர். எனவே, பகலின் முற்கூறில் புத்தர் உண்டனர்; பிற்கூறில் சமணர் உண்டனர்; வாய் திறவாது தெருவூடே போகையில் யாரேனும் கையில் சோறிடின், அங்ஙனமே நின்று

அதனை உண்டு மேற் செல்வதே எல்லாந் துறந்த பெரியோரின் இயல்பு என்றனர் சமணர்.

"வீங்கிய தோள்களும் தாள்களுமாய் நின்று,
வெற்ற முங்கைகள் போலுண்ணும் மூடர்"

என அப்பர் பாடுதல் காண்க. புத்தர்களோ ஓரிடத்தே அமர்ந்திருந்து உண்பதே மக்கள் இயல்பென வற்புறுத்தினர். உடலினின்றும் உயிர் வலிதே பிரிந்து போகாதபடி, வேண்டிய உணவை உண்ண வேண்டும் என இயற்கை அன்னை ஒரு கட்டுத் திட்டம் ஏற்படுத்தியிருக்கின்றாள். பசி எடுத்த போது உண்ணுவதே முறையாம்.

"அற்றால் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு."

ஆதலின், அவ்வொரு முறையைப் பின் பற்றாது மற்றைய செயற்கைக் கட்டுத் திட்டங்களை அமைத்துக்கொண்டு அவற்றிற்கோர் ஏற்றம் தருவதால் பயன் என்னை? உணவிற்கு அடிமையாவதும் பழியே; செயற்கைக் கட்டுதிட்டங்களுக்கு அடிமையாவதும் பழியே.

## VI

ஆதலின் புறவொழுக்கத்தைப் புகழும் இன்னோரை எள்ளி நகையாடுகின்றார் சம்பந்தர். சமணரும் புத்தரும் முரண்பட்டுக் கிடப்பதையும் சுட்டிக் காட்டுகின்றார். இவை அனைத்தும் அறவொழுக்கத்தின் அடிப்படை அல்ல எனத் தெள்ளிதின் விளக்குகின்றார்.

மண்டைக் கையர்,

கையுண லுடையர்,

நின்றே தம் கையினி லுண்போர்.

கால் நிமிந்துண்ணும் கையர்.

நின்றுண் சமணர் இருந்துண் தேரர்.

அண மிகு செல்கு சோறு கொணர் கென்று
கையிலிட உண்டு பட்ட அமணும்,
மணமிகு கஞ்சி மண்டையதிலுண்டு தொண்டர்
குணமின்றி நின்ற வடிவும்

காலையிலுண்பவரும் (புத்தர்) சமண் கையரும்
முடிசீ வரத்தர் முன் கூறுண்டேகுதலும் பின் கூறுண்டு,
காடி தொடு சமண்.

ஒண்துவரார் துகிலாடை மெய்போர்த்து உச்சிகொளாமை
உண்டே உரைக்கும்,

குண்டர்களோ டரைக் கூறையில்லார்.

எனப்பாடுதல் காண்க..

கடுக்கள் தின்று உடலை வருத்துவதனையும் கூறுகின்றார் சம்பந்தர். ஊத்தை யிருப்பதை உணராதிருக்கச் சுக்குத்தின்பதனை முன்னர்க் கண்டோம். பலநாள் பட்டினி கிடக்கையில் நாவில் அழுக்கேறுதலினால் சுவை உணர முடியாமற் போகின்றதன்றோ? தண்ணீர் குடித்தாலும் குமட்டுகின்றது. அந்நிலையில் சுக்கு முதலியன தின்றால்தான் தண்ணீரைச் சுவையுணர்ந்து குடித்தல் கூடும். இவர்களோ பட்டினி நோன்பிகள். பட்டினி கிடந்தே உயிர் விடுவோர் பலர்.

''பகடூர் பசிநலிய நோய் வருதலாற் பழிப்பாய
வாழ்க்கை ஒழிய, நோன்பு நோற்பவர்.

என அவர்களைச் சம்பந்தர் பாடுவது காண்க. அத்தகையார் சுக்கும் கடுவும் தின்னவேண்டாவா? அல்லாக்கால் தண்ணீரும் அருந்தாமல் தனியே சாக வேண்டுவதுதான்.

இலைமருதே யழகா நாளுமிடுதுவர்க்காயொடு
சுக்குத் தின்னும் நிலை யமண்.
கடுக்கள் தின்று

என்றும் பாடுவது காண்க.

துணியையும் புனலையுமே துறந்தோர், மற்றோர் நாட்டிற்குப் புறப்பட்டுச் செல்வாரைப் போலப் பல பொருள்களை உடன்கொண்டு திரிதல் என்னே வியப்பென நகையாடுகின்றார் சம்பந்தர். அவர்களோ கொல்லாமை என்னும் பேரறத்தைக் காக்கத் துணையாக அவற்றைக் கொண்டு சென்றனர். கொல்லாமை என்பது புறவொழுக்கமாகவும், எதிர்மறை வடிவாகவும் தோன்றினும், உண்மையில் நோக்குமிடத்து அன்பு என்னும் உடன்பாட்டு நிலையாம் அகவொழுக்கமாகவே அமைகின்றது. ஆதலின், அதனைப்புறப்பொருள்களே துணையாக வளர்ப்பது எஞ்ஞான்றும் இல்லையாம். அன்றியும் அவர்கள் உடன் கொண்டு செல்லும் பொருள்களே வீட்டிற்கு வழிகாட்டிகள் எனச் சிலர் வற்புறுத்தியபோது அக் கொள்கையைச் சம்பந்தர் மறுத்துரையாடி நகையாடுகின்றார். இது நிழல், இது முதல்; இது முடிவு, இது வழி; இது இன்றியமையாதது, இது

துணை என வேற்றுமை யறியாது இடர்ப்படுவ-தால் அன்றோ உலகில் வந்த பெரியோர்கள் காட்டிய வழியில் உலகம் செல்லாது இடர்ப்படுகின்-றது? கண்ணனும், புத்தரும், மகா வீரரும், சம்-பந்தரும், சங்கரரும், மெய்கண்டாரும், இராமா-னுசரும், கிறித்துவும், மகம்மதுவும், இராம-கிருட்டினரும், இராமலிங்கரும் முதலான கட-வுட்பேரறிவாளர், அவ்வக்காலத்து வழக்கங்-களை எடுத்துக் காட்டாகவும் உவமையாக-வும் எடுத்துக் கூறி, உண்மையை விளக்கி-னார்கள். அவ்வுண்மையை மறந்து எடுத்துக்காட்டையே மெய்ப் பொருள் எனக்கொண்டு வழக்காடத் தொடங்கினர் பின் வந்தோர். ஏசு-கிறித்துப்பெருமான்,உலகில்இருவாள்கள்நிலவு-கின்றன என்றும், இரண்டு அரசியல்கள் உள்-ளன என்றும் நயம்படப் பேசினார். ஒன்று உல-கத்தரசியல்; மற்றொன்று கடவுள் அரசியல் என்பது அவர் கருத்து. இவ்வுண்மையை மறந்து உவமையையே உண்மை எனக் கொண்டு கிறித்தவத் தலைவர்கள் வாளேந்திப்போர் புரிந்து கடவுள் அரசியலை நிலை நாட்ட முயன்ற கதை உலகறிந்தது ஒன்றேயாம். இவ்வாறே சிலர் மயிர், பீலி, குடம், உறி, குடை, தடுக்கு முதலியனவற்றையே வீட்டு வழி என மயங்கி எண்ணி, அவற்றை என்றும் பிரியாது சுமந்து வாழ்ந்தனர். தமிழர் இந்நாளில் இத்-துணை நீளமுள்ள கொம்பு கொண்டுதான் பல் விளக்க வேண்டும்; இத்துணை முறை வாய் கொப்பளிக்க வேண்டும்; இத்துணை முறை

மூழ்க வேண்டும்; ஈதே வீட்டு நெறி எனச் சொல்லித் திரிந்து அறங்களாம் உண்மைகளை மறந்தமை போல வேறு சிலர்களும் அந்நாளில் வழியையே முடிவென எண்ணி மயங்கினர். எல்லாம் துறந்து போகின்ற வழியில், வேண்டிய பொருள் தரவோ, தம் செலவுக்குத் துணையாகவோ இவற்றைக்கொண்டு செல்கின்றார்கள் என நகையாடுகின்றார் சம்பந்தர்.

இயல் வழி தர இது செலவுற இனமயிலிறகுறு தழையொடு,
செயல் மருவிய கடமுறியடை கையர்

எனப் பாடுகின்றார்.

பிச்சக்குடை நீழற் சமண்—
தாறிடு பெண்ணைத் தட்டுடையார்—
தட்டிட்டே முட்டிக் கைதடுக்கி நின்றுண்ணுத்
தாமே பேணுதே நாணும் சமணெடு வாழ்பவரும்—
உறித்தலைச் சுமையொடு குண்டிகை பிடித்துக்—
குண்டமணராகி ஒரு கோல மிகு பீலியோடு
குண்டிகை பிடித்து,

என வருதலும் காண்க.

## VII

உடலை ஒறுத்தல் இம்மட்டோடும் ஒழியவில்லை. துணியைத் துறந்து அலையார் புனலை நீத்துப் பாசிப் பல்லும், ஊத்தை வாயும், கொது கருக் கண்ணும், மாசு மேனியுமுடையராய்க் கால் கை வீங்கிக் குடையவும் வேர்த்துடல் விரியவும், புற்றேறி வெயில் உணங்கிக் கால் நிமிர்ந்து கையி லுண்டு முகங் கோணிக் கடுத்தின்று பீலியும்

தட்டும் கையேந்தித் தடுக்கைக் கையிலிடுக்கிப் பிச்சக் குடை ஏந்திக்குடமும் சுரையும் வைத்த உறியையும் சுமந்து குறங்காட்டிக் காட்டு மிராண்டிகள் போல வருதல் எல்லார்க்கும் நகையை ஒரு புறமும், வருத்தத்தை மற்றொரு புறமும் விளக்கும். அதோடு அவ்வுருவினர் தங்கள் தலைமயிரினைக் கண்ணழலப் பறித்தெதிர் நின்றால் நம் மனம் என்ன பதை பதைக்கும்!

VII

தலை பறித்தலையே பேரொழுக்கமாகக் கொண்டாராதலின் அதனைப் பெரு விழாவாகக் கொண்டாடிப் போற்றிப் புனைந்துரைக்கின்றனர் திருத்தக்கதேவர்.

திருந்திய கீழ்த் திசை நோக்கிச் செவ்வனே
இருந்ததோரிடிக்குரற் சிங்கம் பொங்கி மேற்
சுரிந்த தன் உளை மயிர் துறப்ப(து) ஒத்தனன்
எரித் தெழும் இளஞ்சுடர் இலங்கு மார்பினன்.

[ஒளி மிக்குத் தோன்றுவதற்குக் காரண-மான இளஞ்சுடர் போல் இலங்கு மார்பினன், மயிர் களைதற்கிருந்த பொழுது, திருந்தின கீழ்த்-திசையினை நோக்கி நேரே இருந்ததோர் சிங்கம் தன்னுளை (பிடரி)யின் மயிரினைத் துறக்குந்-தன்மையை ஒத்தான்.]

அஞ்சுடர் தாமரைக் கையினால் மணிக்
குஞ்சி வெண் படலிகைக் குமரன் நீப்பது
செஞ்சுடர்க் கருங்கதிர்க் கற்றை தேறுநீர்
மஞ்சுடை மதியினுள் சொரிவ(து) ஒத்ததே.

[குமரன் (சீவகன்) தாமரை போலுங் கையினுலே நீலமணி போலுங் குஞ்சியை வாங்கி வெள்ளித் தட்டிலே இடுகின்ற தன்மை, செஞ்ஞாயிற்றினிடத்து உண்டாகிய கருங் கதிர்க் கற்றையை அஞ்ஞாயிறு தான் வாங்கித் தெளிந்த நீர்மையையுடைய மதியிடத்தே இடுகின்ற தன்மை போன்றது.]

மேலே, பெண்கள் தலைமயிர் பறித்தலையும் இவ்வாறே புனைந்துரைக்கின்றூர்.

முன்னுபு கீழ்த்திசை நோக்கி மொய்ம்மலர்
நன்னிறத் தவிசின் மேலிருந்த நங்கைமார்
இன்மயிரு குக்கிய இருந்த தோகைய
பன்மயிற் குழா மொத்தார் பாவைமார்களே.

[தவிசினைப் பொருந்தி அதன்மேலே, கிழக்கு நோக்கியிருந்த தாயரிவரும் (சீவகனின் ஈன்ற தாயும் வளர்ப்புத் தாயும்) அல்லாத மகளிரும் மயிருகுத்தற் கிருந்த மயில் திரளை ஒத்தார்.]

மணியியல் சீப்பிடச் சிவக்கும் வாணுதல்
அணியிருங் கூந்தலை ஔவை மார்கள் தாம்
பணிவிலர் பறித்தனர் பரமன் சொன்ன நூற்
றுணி பொருள் சிந்தியாத் துறத்தல் மேயினுர்.

[இறைவன் கூறிய ஆகமத்தில் துணியும் பொருளைச் சிந்தித்துத் துறத்தலைச் செய்ய மேவினவர் கூந்தலை மணியாலியன்ற சீப்பிட அது பொருமற் சிவக்கும் நுதலைச் சேர்ந்த கூந்தலை — ஆரியாங்கனைகடாம், ஒன்றிற்றும்விலராய்ப் பறித்தார்.]

கன்னிய ராயிரர் காய்பொற் கொம்பனார்,
பொன்னியற் படலிகை யேந்திப் பொன்மயிர்
நன்னிலம் படாமை யேந்தியே யடக்கி நங்கைமார்,
தொன் மயிர் உகுத்த நன் மயிலிற் ரோன்றினர்.

[அங்ஙனம் பறித்த அழகிய மயிரினைக் கொம்பனாராகிய கன்னியர் ஆயிரவர் பள்ளியில் விழாமற் படலிகையிலே, ஏந்திக் கொண்டு போய் அடக்க அந்நங்கைமார் பழைய மயிரை உகுத்த மயிலிற் றோன்றினர்!]

நறும்புகை நான நாவிக் குழம்பொடு பளிதச் சுண்ணம்,
அறிந்தவர் ஆய்ந்த மாலை அணிந்தபைங் கூந்தல் ஆய் பொன்
நிறந்தரு கொம்பு நீலக் கதிர் கற்றை யுமிழ்வ வேபோற்,
செறிந்திருந் துகுத்துச் செம்பொற் குணக்கொடி ஆயினரே.

[(சீவகன் மனைவியர்) கற்பகக் கொம்பு, நீலக்கதிர்த் திரளைக் கழிப்பவை போல நாவியினது நானக் குழம்போடே புகையையும், கருப்பூரப் பொடியையும், மாலையையும் அணிந்த கூந்தலை, மனோவாக்குக் காயங்களால் அடங்கியிருந்து, உகுத்து, நற்குணத்தையுடைய செம்பொற் கொடியாயினர்.]

என வரும் சிந்தாமணிச் செய்யுள்களால் இத் திருவிழாவின் பெருமையும் முறையும் நன்கு விளங்கும். மயிலானது பழைய மயிரை உகுத்துப் பொலிவு பெறுவது போல இப் பெண்களும் தலைமயிரை நீக்கி விளங்கினர் எனத் தேவர் புனைந்துரைப்பது காண்க. உலகத் தழகை உள்ளவாறறியும் பாவலர் பெருமானாகிய தேவரே ஒரு கோட்பட்டால் இதனைப் புகழத்

தொடங்கினல் உலகம் உய்ந்து போவது எங்ஙனம்? வேலியே பயிரை மேய்ந்த கதை-யன்றோ ஈது! அது பற்றியன்றோ சம்பந்தர் பழிக்கின்றார்.

இதனை "உலோச்சு" என்ற பேரறம் என்பர். பாவலர் கண்ணுக்கு இவ்வளவு அழ-காக விளங்கிய இவ்வொழுக்க இன்பம் அதனைத் துய்த்துணர்ந்தாருக்கு எவ்வாறு விளங்கியது?

"நீராடாப் பெண்கள் முறை முறையால்
நம் தெய்வமென்று தீண்டித்,
தலை பறிக்குந் தன்மையர்களாகி நின்று
தவமென்று அவஞ் செய்து தக்க(து)ஓரார்,"

என அப்பர் பாடுகின்றமை காண்க.

"கதி யொன்று மறியாதே கண்ணழலத் தலை பறித்து"

என இவ்வொழுக்கத்தின் கொடுமையைப் பாடு-கின்றார் அப்பர் பெருமானார். இதன் கொடு-மையை உணர்ந்தே எல்லா அறத்திலும் ஈதே தலை சிறந்த தென்னப் போற்றினர், திருத்தக்க தேவர்.

மணித் துணரனைய தங்குஞ்சி வண் கையாற்
பணித்தனர் பறித்தலின் பரவை மாநிலந்
துணித்தொரு துணி சுமந்தனைய திண் பொறை
அணித்தகு முடியினய் ஆதியாகவே!

[அணித்தகு முடியினய்! சீவகா! நீலமணி அனைய கொத்தாகிய குஞ்சியைத் தங் கையாற் பறிக்கையினலே இத் திண்ணிய பொறை-யுடைமை நிலத்தை இரு கூறுக்கி அதில் ஒரு கூற்றைச் சுமந்து பொறுத்த தன்மையை ஒத்தது

என்று கருதி அச்சிலங்களுள் இதனை ஆதியாகக் கொண்டு பணித்தார். மற்றைய அறங்கள் ஒரு கூறு; இது ஒரு கூறு என்றபடி.]

எனப் பாடுதல் காண்க. பிறருக்கு இவ்வறம் எவ்வாறு தோன்றியது என்பதனைச் சம்பந்தர் நன்கு புனைந்துரைக்கின்றார்.

சாம வத்தையினர்கள் போல் தலையைப்
பறித்தொரு பொய்த்தவம்,
வேம வத்தை செலுத்தி மெய்ப் பொடி
யட்டி வாயசத்துக்கு நேராமவர்.

(3-298-)

என்று பாடுதல் காண்க.

தலைபறி செய்து தவமுயல் பவர்,
பகடூர் பசி நலிய நோய் வருதலாற்
பழிப்பாய வாழ்க்கை ஒழியத் தவம்—
முகடூர் மயிர் கடிந்த செய்கையார்.
உறித்தலைச் சுரையொரு குண்டிகை பிடித்துச்சி,
பறித்தலும் போர்த்தலும் பயனிலை.

என வருதலும் நோக்குக.

IX

அவர்கள் பேசிய பேச்சோ இதனினும் நகை தருவதொன்றே. தனித் தமிழும் பேசினர் இல்லை; தனி வடமொழியும் பேசினர் இல்லை. வடமொழிச் சொற்களை மரூஉ மொழியாக்கி வழங்கியமை வடமொழி அறிந்தவர்களுக்கு நகைப்பையே விளைத்திருக்கும். ஆங்கிலேயரிடம் மடையர்களாக அமர்ந்தோர் பேசும் ஆங்கிலத்தையும், கிறிஸ்துவ வெள்ளையர்கள் பேசும் தமிழையும் நாம் கேட்டு நகையாடுவது போல

இன்னேரைச் சம்பந்தர் நகையாடுகின்ருர். அவர்கள் பேசுந்தமிழோ, வடமொழிச்சொற்கள் நிறைந்தவை. இது போது ஆங்கிலம் படித்த சிறுவர் ஆங்கிலச் சொற்களை இடையிடையே பெய்து தமிழ் பேசுவது போல, வடமொழிச் சொற்களே நிறைந்து வரச் சிலர் தமிழ் பேசி–னர் போலும். சம்பந்தரோ, தம்மைத் 'தமிழ் ஞான சம்பந்தன்' என்றும் 'நற்றமிழ் ஞான சம்பந்தன்' என்றும் 'செந்தமிழ் ஞான சம்பந்தன்' என்றும் புனைந்துரைத்துக் கொள்வதில் பெரு–விருப்புடையார். அது பற்றியன்ருே, இவரது திருக்கடைக் காப்பை நன்கு கற்றுணர்ந்த சங்கரரும் இவரைத் "தமிழ்க் குழவி" (திராவிட சிசு) என்றே போற்றுகின்ருர். இறைவனும் தமிழின் இனிமையே பாடி ஆடுகின்ருன் என்று செம்மாந்து பாடுகின்ருர் சம்பந்தர்.

> தமிழினீர்மை பேசித் தாளம் வீணை பண்ணி நல்ல
> முழவ மொந்தை மல்கு பாடல் செயற்கையிடமாவோர்
> குமிழன் மேனி தந்து கோல நீர் மையது கொண்டார்
> கமழுஞ் சோலைக் கானூர் மேய பவள வண்ணரே.

என்று பாடுதல் காண்க. அத்தகையார் தனித் தமிழே நாடுகின்ருர். மறையவர் குடியிற் பிறந்–தும் தனித் தமிழ்க்காக அந்நாளிலேயே போராடிய பெரியார், வடமொழி கலந்த தமிழை விரும்புவரோ? வடமொழியிலும் பிராகிருதத்தி–லும் கல்வெட்டுக்கள் எழுதப் பெற்ற காலத்தில் தமிழில் எழுதும் முயற்சி தொடங்கியது சம்பந்தர் போன்ருர் முயற்சியால் எனலாம்.

சிலர் மணிப்ரவாளம் என்ற புதிய நடையை எழுதத் தொடங்கினர். முத்தும் துகிரும் (பவளமும்) சேர்த்துக் கோத்த கோவை போல வடமொழிச் சொற்களும் தமிழ்ச் சொற்களும் செம்பாதியாக விரவிவரத் தொடுப்பதே அந்த நடையாகும். அவர்கள் மந்திரமும் அத்தகை-யவே. ஐந்தமுதம் என்று புகழப்படுவன.

"ஓம் ணமோ அரஹந்தாணம்-ஒம்ணமோ
ஸித்தாணம், ஒம்ணமோ ஆரியாணம்
ஒம்ணமோ ளேயோ ஸவ்வ ஸாஹூணம்"

என்பவையே யாம். இவை முறையே அருகர், சித்தர், ஆசிரியர், உபாத்தியாயர், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேஷ்டிகளை வணங்கும் பஞ்ச நமஸ்கார மந்திரமாகும். சமணர்களது பெயர்களும் தனித்தமிழாகாது, வடமொழிச் சிதைவாய் விளங்குவனவேயாம். புனைந்துரை-யால் மிக்க தமிழரது பெயர்கள் போலாது பொருள் ஆழமின்றி வெற்றெனத் தொடுக்கப் பட்டிருந்தன. இவற்றை எல்லாம் கண்டு நகை யாடுகின்றார் சம்பந்தர்.

ஆகமத்தொடு மந்திரங்கள் அமைந்த சங்கத பங்கமாப்,
பாகதத் தொடிரைத்துரைத்த சனங்கள் வெட்குறு பக்கமா
மாகதக் கரிபோல் திரிந்து புரிந்து நின்றுணும் மாசுசேர்,
ஆகதர்க் கெளியேனலேன் திருவாலவா யரனிற்கவே.

ஆகமும் மந்திரங்களும் நன் மொழியாகிய (சங்கதம்) வடமொழியில் உள்ளன. அவற்றின் சிதைவாக (பங்கம்) ப்ராக்ருத மொழி (பாகதம்)

ஆகிய மரூஉ மொழியில் இரைந்து பேசுகின்-றனர் இவர்கள். எதிருரைத்து நிற்கும் மக்கள் இவர்கள் வடிவைக் கண்டு வெட்குமாறு சினங்கொண்ட பெரிய யானை போலத் திரிந்து, உண்பதை விருப்போடும் உண்டு, அழுக்கேறிய இவர்களுக்கு நான் பின் வாங்குபவன் அல்லன். திருவால வாயான் எனக்குத் துணையாக நிற்கின்றான்'' என்று அவர்களுடைய மறைமொழியும் (ஆகமம்) நிறை மொழியுமான (மந்திரம்) வடமொழிச் சிதைவாம் மரூஉ மொழிகளை எள்ளி நகையாடுகின்றார்.

பந்தணம் மவை ஒன்றிலம் பரிவொன்றிலம்
மென வாசகம்,

மந்தணம் பலபேசி மாசறு சீர்மை
யின்றிய நாயமே,

அந்தணம் மருகந்தணம் மதுபுத்தணம் மது
சித்தணச்,

சிந்தணர்க் கெளியேனலேன் திருவாலவா யரன்
நிற்கவே.

"கைப் பொருளாய்க் காக்க அரை ஞாணும் (பந்தணம்) இல்லோம்; ஒரு பற்றும் (பந்தணம்) இல்லோம் என்று தாம் கூறுவர். மறைவாக ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்வர். அவர்-களது ஒழுக்க முறையினைக் கண்டு சிறந்ததென மருளலாம். ஆனால், அது குற்றமில்லாத சிறப்-பன்று. அவ்வொழுக்க முறையே நின்று நீத்தாரையும் (அந்தணம்–அந்த ஞமோ; அந்தணர் என்போர்–அறவோர்; சாதுக்கள்); அருகரையும்

(அருகந்தணம்) அறிவுடையாரையும் (புத்தணம்-புத்த நம; ஆரியர்; உபாத்தியாயர்-புத்தர்-அறிவுடையோர்) உயர் நிலையடைந்தோரையும் (சித்-தணம்-சித்த நம சித்தர்) போற்றித் தொழும் உள்ளமுடையார். (சிந்தணர்)போற்றித் தொழும் உள்ள முடையவராஞலும் குற்றமில்லாத சிறப்பு அவர்களுக்கு இல்லை. ஆதலின் திருவால-வாய் அரன் துணை நிற்க, நான் அவர்களுக்கு அஞ்சுபவன் அல்லன்.'' இந்தப் பாடலில் அந்த-ணம், அருகந்தணம், புத்தணம், சித்தணம் என அவர்கள் மறைமொழியை எள்ளி நகையாடல் காண்க.

சந்து சேனனும் இந்து சேனனும் தரும சேனனும்
கருமை சேர்,

கந்து சேனனும் கனக சேனனும் முதலாகிய
பெயர் கொளா

மந்தி போற்றிரிந்து ஆரியத்தோடு
செந்தமிழ்ப் பயன் அறிகிலா,

அந்தகர்க் கெளியேன் அலேன் திருவாலவாய்
அரன் நிற்கவே.

“சந்துசேனன் முதலிய பெயர்களைப் புனைந்-துள்ளார்கள். இவற்றின் முடிபோ தமிழ் முடிபு. இவற்றின் அடியோ வடமொழியடி. ஆனல், இச் சொற்களோ தமிழுமல்ல; வடமொழியுமல்ல. ஆரியத்தின் இனிமையும் அறியார்; தமிழின் இனிமையும் அறியார். கண்ணிருந்தும் குருடர் களே. இவர்கள் வடமொழி நூலும் செந்தமிழ்

நூலும் ஓதுகின்றனர். அவற்றின் உண்மையை உணரகில்லார். தனித் தமிழ்ச் சுவையும், வட மொழி நயத்தையும் இவர்கள் அறிந்ததுமில்லை; உணர்ந்ததும் இல்லை. குரங்கு கைப்பட்ட கோவை பிய்த்துண்டு போவது போல, இவர்கள் கைப்பட்ட வடமொழியும், தமிழ் மொழியும் சிதைவு உண்ணுகின்றன. இத்தகையாருக்கு யான் எளியனே? திருவாலவாய் அரனது திரு- வருள் பெற்றுடையன் அல்லனோ யான்?'' என்று இவ்வாறு பாடுகின்றார் சம்பந்தர். ஈண்டு தனித் தமிழ்ச் சுவையை வற்புறுத்துதல் காண்க.

கனக நந்தியும் புட்ப நந்தியும் பவண நந்தியுங் குமணமா,
சுனக நந்தியும் குனக நந்தியும் திவணநந்தியும்மொழிகொளா
அனக நந்தியர் மதுவொழிந்(து)அவமே தவம் புரிவோ
மெனும்
சினகருக் கெளியேனலேன் திருவாலவா யரனிற்கவே.

என்ற பாடலிலும் அவர்களுடைய பெயரை எள்ளி நகையாடல் காண்க.

இங்குக் கூறியவற்றை ஏழு ஒழுக்கங்கள் எனக்கூறுவர். லோச்சு,(தலைபறித்தல்) திகம்பரம் (உடை நீத்தல்) நீராடாமை, தரையிற் படுத்தல், பல் தேயாமை, நின்று உண்ணல், ஒருபோதுண் ணல் என்பவையே அவை. வடமொழிச் சுவை- யும் தென்மொழிச் சுவையும் இன்றி மூக்காற் பேசும் மொழி போல இவர்கள் மறைமொழியும் நிறை மொழியும் விளங்கியதனைச் சம்பந்தரைப் பின்பற்றிச் சுந்தரரும் பாடுதல் காண்க.

நமண நந்தியும் சரும வீரனிந்தரும சேனனு மென்றிவர்
குமணமாமலைக் குன்று போனின்று

தங்கள் கூறை யொன்றின்றியே

ஞமண ஞாஞண ஞாணஞோண மென்றேதியாரையும்

நாணிலா

அமணராற் பழிப்புடையரோ நமக்கடிகளாகிய அடிகளே.

என வருதல் காண்க. சம்பந்தரும், இவர்களது மொழியாடலை,

விகட மதுறு சிறு மொழி

எனப் புனைந்துரைத்தல் காண்க.

இதுவரை நாம் கூறிவந்ததன் நின்றும் சம்பந்தர் எதனைப் பழித்துரையாடுகின்றார் என்பது தெளிவாக வில்லையா? அவர்களில் ஒரு சாராரின் புற நிலையையே இவர் பழிக்கின்றார்; பயனிலாத புற ஒழுக்கத்தால் உடலை வாட்டுவதனையே பழிக்கின்றார்.

மனத்தகத்து அழுக்கு அறுதபோது, புற ஒழுக்கத்தால் ஆய பயன் என்னை?

மாமாங்க மாடல் மணற்குவித்தல் கல்லிடுதல்,
தாமோங்குயர் வரைமேற் சாவீழ்தல்—காமங்கொண்
டாடோ டெருமை யறுத்தல் இவை யுலக
மூடம் என உணரற் பாற்று (அறநெறிச்சாரம்.)

என்றும்,

தோல் காவி சீரை துணி கீள்விழவுடுத்தல்
கோல்கா கரகங் குடை செருப்பு—வேலொடு
பல்லென்பு தாங்குதல் பாசாண்டி மூடமாய்
நல்லவரான் நாட்டப் படும் (அறநெறிச்சாரம்.)

என்றும் புறவொழுக்கத்தை இப்பெரியார்களே கடிந்துரைக்க வில்லையா? மாமாங்கம் ஆடாது கருப்பொடியாடினுல் அறம் வளருமோ? தோலும் துணியும் செருப்புங் குடையும் நீத்து, உறியும் பீலியும், தடுக்கும் தட்டும் கைக்கொண்டால் கற்ருேர் என விளங்குவோமோ? மணற்குவித்தலும் கல்லிடுதலும் பழியாஞல் போதிநீழலிலும் பிண்டி நீழலிலும் அமர்ந்திருந்து, அந்த ஆல மரத்தினையும் அந்த அசோக மரத்தினையும் சுற்றிச் சுற்றிப் போற்றினுல் அம்மரத்தடியில் புத்தர் பெருமானும், மகா வீரரும் உயர் நிலை அடைந்தது போல, நாம் உயர் நிலை பெறுவோமா? எல்லாவற்றையும் இல்லை இல்லை எனப்புறத்தே ஒதுக்கியவர்கள், மரத்தையா கட்டியழ வேண்டும்.—"போதியாரும் பிண்டியாரும்" என்று இக்குறிப்புப் படவே சம்பந்தர் பல முறையும் இவர்களை இழித்துரைக்கின்ருர்.

## 4. போலித்துறவு

### I

உலகம் பழிக்கும் செயல்களை ஒழித்தலே வேண்டற்பாலது. அதை ஒழித்து, மயிரை நீட்டியும் மழித்தும் ஒழுகின் பயன் ஒன்றும் இல்லை.

> மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
> பழித்த(து) ஒழித்துவிடின்.

என்பதன்ருே திருக்குறள்? இதனையே சம்பந்தரும்,

மண்ணுதல் பறித்தலும் மாயம் இவை
எண்ணியக்கால் அவை இன்பம் அல்ல,

எனப் பாடுகின்றார். உடையணிந்து கோடலும் தலைமயிர் பறித்தலும் ஒழுக்க நிலையல்ல; அவ்வவ்வூர் வழக்க நிலையே.

மனத்தகத்து மாசிலனாதலே அனைத்தறன்;
ஆகுல நீர பிற.

மனத்தது மாசாக மாண்டார் நீராடி;
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

என்பர் திருவள்ளுவர். திருவள்ளுவரையும் இவர்கள், தமது கொள்கையினராகக் கொள்கின்றனர் அன்றோ? ஆதலின், வள்ளுவனாரது கொள்கையை வற்புறுத்திய சம்பந்தர், அவ்வகையில், சமணர்களது உண்மைக் கொள்கைகளை வற்புறுத்துகின்றவரே ஆவர். சமணப் பயிரை மேயவந்த பட்டி மாடல்லர் அப்பெரியார்; களை கட்டி வளர்க்க வந்த பேருழவர் ஆவர்.

## II

"மனத்தது மாசாகப் புறவொழுக்கம் பூண்டொழுகுதலை அன்றோ திருவள்ளுவர் பழிக்கின்றார்? சம்பந்தர், சமணர்களது மனத்தகத்தே என்ன மாசு காண்கின்றார்?" எனச் சிலர் வினவலாம். இப் பெரியாரும் அக்காலத்திலிருந்து சிலரிடம் கூடாஒழுக்கம் குடி இருப்பது கண்டே அவர்களைப் பழித்துரையாடுகின்றார்.

இவர்கள் உடையைத் துறந்தும் நாண-மேலீட்டால் தடுக்கால் உடல் மறைப்பதை முன்னரே கண்டோம்.

> வானுயர் தோற்றம் எவன் செய்யும்? தன் நெஞ்சம்
> தானறி குற்றப் படின்.

இவர்களே தம் ஒழுக்க நிலையின் இழிவை அறியாரோ? இன்னோருக்கு உணவின்மேல் இருந்த பற்று நகைப்புக்கே இடமாயது. ஒரு வேளையே உண்டு, பட்டினி கிடப்போர்கள், இரவில் உண்ணு நோன்பு பூண்டு ஒழுகுகையில், "எப்போது பொழுது விடியுமோ" என்றே எதிர்பார்ப்பர். அங்ஙனம் விடிந்ததும் இத் துறவிகள் கண்ணும் கழுவாது கஞ்சிமேல் நாட்டமாய் ஓடினார்களாம்.

> "கண்தான் கழுவா முன்னே ஓடிக் கலவைக் கஞ்சியை
> உண்டாங்கவர்கள்"

> "கஞ்சி நாட்காலே—ஊணுப்
> பகலுண்டோதுவார்கள்" (1. 98, 10. 1)

எனப் பாடுகின்றார் சம்பந்தர்.

இவர்கள் ஒரு வேளை உண்டாலும், வேளை தவறாது உண்டு கொழுத்த உடலினர் என அவர் காட்டுகின்றார்;

> "போதியர்கள் பிண்டியர்கள்
> போது வழுவா வகையுண்டு ஓதியவர்,"

என்று பாடுகின்றார்; உண்டிமேல் நாட்டமாய் உடலைக் கொழுக்க வைக்கின்றனர் என்றும் பாடுகின்றார்.

"மாகத கரிபோற் றிரிந்து புரிந்து நின்றுணும்
ஆகதர் வீங்கிய உடலினர்."

'பண்டியைப் பெருக்கிடும் பளகர்'
'உண்டி வயிறர்'
'அடிசில் உள்கி வருவார்'

'கஞ்சி
நேசடைந்த ஊணினரும்'

என வருதல் காண்க. உண்டியே நாட்டமாய் நிற்றலால் அறிவு நிலை கலங்கியவர்கள் என்றும் அவர் எடுத்துக் காட்டுகின்றார்.

'பிண்ட முன்னும் பிராந்தர்'
என வருதல் காண்க.

கொல்லாமையைப் பேரறமாகக் கொண்ட இவர்கள் கொலைக்கு அஞ்சினர் இல்லை. புலாலுண்ணப் பின் தயங்கினர் இல்லை. புலாலுண்டு வந்த தமிழர் நிலை எவ்வாறாயது? சம்பந்தர் போன்ற பெரியோர், சமணர்களிடம் காணப்படும் நல்லொழுக்கங்களை யாவரும் கைப்பற்றினால்தான் தமிழ்க்கொள்கை சிறக்கும் என்பதை எடுத்துக் காட்டித் தூவுணவையே எங்கும் பரப்பினர்.

"ஊனொடு உண்டல் தீது" ஆன
" ஊனொடு உண்டல் "நன்று" என
ஆன தொண்டர் அன்பினால் பேச நின்ற தன்மையான்,
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னி நின்று
ஆனே(டு) அஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே.

பழைய வழக்கத்தைப் பின்பற்றி ஊனொடு உண்ணுதல் நல்லதே எனச் சிலர் கூறினர்;

கொலையுண்ணும் உயிர்களின் வருத்தங்கண்டு அன்பினால் வாடிய மனத்தவராகிய தொண்டர்கள் "ஊனோடு உண்ணுதல் தீதே" என்று பேசப் புகுந்தனர்; இவர்கள் இருவரிடையே இறைவன் நடுநிலையாய் நின்றான். பால், தயிர், நெய், எரு, சிறு நீர் என்ற ஐந்தையும், ஆனினிடம் நின்றும் பெற்று நாளும் ஆடுகின்றான் ஆனைக்காவான். அவ்வாறு அவனுக்கு உதவும் ஆனினைக் கொன்று அதன் ஊனை உண்ணுவது எங்ஙனம்? "ஆனைந்தாடியே ஊன் தீதென்ற வாய்மையை மன்னி நின்று விளக்கினான்"–இதற்கு இவ்வாறு பொருள் கொள்ளாது "ஊன் உண்டல் தீது" என்றும் "நன்று" என்றும் அன்பர்கள் மன்றாடி நின்றனர் என்று பொருள் கொண்டால் "அன்பினால் பேச" என்பது வெறுஞ்சொல் தொடுத்தலாகவும் முரண் சொல் தொடுத்தலாகவும் முடிவது காண்க. அன்பினாலேயோ ஒருவர் "ஊன் உண்டல் நன்று" என்பர். அவ்வாறே பொருள் கொண்டாலும் சமணரும் புத்தரும் அல்லாதாரிடை "ஊன் உண்பது நன்றா, தீதா?" என்ற வழக்கு எழுந்தது என்று ஏற்படும் அன்றோ? முன் ஊனுண்ட அன்னோர் அவ்வாறாக, முன் ஊன் உண்ணாத இன்னோர் என் செய்தனர்?

விடக் கொருவர் நன்றென விடக் கொருவர் தீதென
உடற் குடை களைந்தவர் உடம்பினை மறைக்கும்,
படக்கர்கள்-

எனப் பாடுகின்றார் சம்பந்தர். கொல்லா அறமே மேற்கொண்ட சமணரும் புத்தரும் புலால் உண்ணாமையைப்பற்றி எதிர் வழக்கிடத் தொடங்கினராம். எதிர் வழக்கோடு நின்று விட்டால் பழியொன்றுமில்லையே? வாயைக் கட்டமுடியாத சில துறவிகள் தங்களுடைய தவப்பள்ளிக்கருகே ஓடும் கழியில் ஒருவரும் அறியாதபடி மீன் பிடித்துத் தின்றனராம்.

> கழியருகு பள்ளியிடமாக அடுமீன்கள் கவர்வாரும் (3)
> கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார்கள். (2)

எனச் சம்பந்தர் பாடுகின்றார். வெளியே கடுத் தின்பது போல் உலகை மருட்டி உள்ளே மீன் தின்றால் என் என்பது? இவர்கள் புத்தர்கள் மட்டுமே என்று கூறுவதற்கு இல்லை.

> வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்,
> ஐந்தும் அகத்தே நகும்.

என்றபடி இவர்கள் உள்ளமேனும் இவர்களைப் பழித்திராதோ! அம்மட்டோ! கொல்லாமை என்பது உண்மையில் கசிந்து கரைந்து உருகும் அன்பே அன்றோ?

> உருகு சிந்தை இல்லார்.

எனல் காண்க.

இவர்கள் அந்த அறவழி நிற்பது எங்ஙனம்? ஆடும் பிறவும்கண்டு, இரக்கம் உடையார்போல அறம் பல எடுத்துரைத்துத் தனிவழியே தம் பள்ளியருகே அவை வரின் அவற்றின் புலாலை விரும்பி, அவற்றைக் கவர்ந்தனராம்.

பல்லறம் காட்டியே வரு மாடெலாம்
கவர்கையரைக் கசிவொன்றிலாச் சேட்டைகள்.

எனச் சம்பந்தர் பாடுதல் காண்க.

வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்று.

என்றும்,

தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

என்றும் கூறும் வள்ளுவர் திருக்குறள்கள் இவ் இடத்திற்கு ஏற்றவை அன்றோ?

துறவினையும் மறந்தனர் என்றும் குறிப்பிடுகின்றார் சம்பந்தர். புத்தரிடையும் சமணரிடையும் பெண்களும் துறவிகளாயினர். சிலப்பதிகாரத்தில் கவுந்தியடிகளும், சிந்தாமணியில் விஜயையும் சமணராய்ப் பெருந் துறவிகளாய்ச் சிறந்து விளங்கக் காண்கின்றோம். மணிமேகலை புத்தர் கொள்கையைத் தழுவி அறங் கேட்டுத் துறவுபுகுந்தமையைச் சீத்தலைச் சாத்தனார் பாடுகின்றார். ஆரியாங்கனைகள் என்றும், குரத்திகள் என்றும் இன்னோர் பெயர் பெற்றனர்.

நாணார் அமணர் நல்லதறியார் நாளுங்
குரத்திகட் பேணார்.

என்று பாடுகின்றார் சம்பந்தர். பேணுதலாவது விரும்புதலும் போற்றுதலுமாம். அவர்களை உண்மையில் விரும்பிப் போற்றுவதாவது, அவர்களது துறவினைக் காத்தலாம். துறவினைப்

போற்றிக் காத்திலர் என்கின்றார் சம்பந்தர்; இடக்கரடக்கலாகக் குரத்திகட் பேணார் என்று பாடுகின்றார் என்றும் சிலர் கூறுவர்.

> பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
> றேதம் பலவும் தரும்.

என்றபடி அகத்துறவு இல்லாரின் புறத்துறவு என்ன என்ன தீமைகளை விளைத்தது? ஆனால், காமத்தால் கண்ணழிந்தார்கள் இவர்கள் எனக் கொள்ள வேண்டுவதில்லை. திகம்பர சமணத்தின் அடிப்படையையே இங்கு சம்பந்தர் எதிர்க்கின்றார் என்பதே மேல். ஆண் மக்களே வீடு பேற்றிற்குரியர் என்பதே அக்கொள்கை. ஆதலின், பெண்கள் துறவு பூண்டாலும் வீடு பேற்றிற்கு உரியர் அல்லர் என்பர். ஆதலின், ஆண் துறவிகளைப் போலப் பெண் துறவிகளை இச்சமணர்கள் பேணிப் போற்றுவது எங்கே?

'என் செய்வர்! காதலையும் வாயினையும் அடக்க முடியாது கெட்டனர்! உள்ளத்தினும் உடலமே வலியதாயிற்று' என்பர் சிலர். ஆனால், அம்மட்டோடு எதிரிகள் நின்றார் இல்லை; கொலைப் பழியும் பூண்டனர். சம்பந்தர் அடியாரோடு கூடியிருந்த இடத்திற்குத் தீயிட்டனர்—பலர் கூடியிருந்த இடத்திற்குத் தீயிட்டனர்—பொது இடத்திற்குத் தீயிட்டனர்—பலராய் வந்து தீயிட்டனர்—பிறர் வந்து உதவா வகையும் உள்ளிருப்போர் அறிந்து தப்பிப் பிழையா வகையும் நள்ளிருளில் தீயிட்டனர்—வஞ்சனையால் தீயிட்டனர்: இவர்கள் எண்ணம் என்ன?

பலரையும் கொல்வதன்றி வேறென்ன? ஏன் கொல்ல எண்ணினர்? தம் கொள்கையை உடன்படாத ஒரு பெரும் பழியை எண்ணியன்றோ? இவர்களது கொல்லாமை எனும் பேரறம் இருந்தபடி என்னே, என்னே! தீயிடுவதைத் திருவருளால் அறிந்து பிழைத்த சம்பந்தர்:

பொய்யராம் அமணர் கொளுவுஞ் சுடர்
எத்தராம் அமணர் கொளுவும் சுடர்
எக்கராம் அமணர் கொளுவும் சுடர்
துட்டராம் அமணர் கொளுவும் சுடர்
எண்ணிலா அமணர் கொளுவும் சுடர்
வஞ்சஞ் செய்தமணர் கொளுவும் சுடர்
கங்குலார் அமண்கையர் இடுங்கனல்
ஏத்திலா அமணர் கொளுவுஞ் சுடர்
தூவிலா அமணர் கொளுவும் சுடர்
குண்டராம் அமணர் கொளுவும் சுடர்.

என்று பாடுகின்றார். இவர்களிலும் வன்கணார் யார்? அமணர் என்பதன்று பழி; சுடர் கொளுவுதலே பழி; அமணராய் இருந்தும் இவ்வாறு செய்வதே பெரும்பழி;

நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து,
வாழ்வாரின் வன்கணார் இல்.

என்பர் திருவள்ளுவர். இத்தகையாரைச் சம்பந்தர் 'எக்கர்' என்றும் "எத்தர்" என்றும் 'பொய்யர்' என்றும் 'வஞ்சர்' என்றும் 'தூவிலார்' என்றும் 'குண்டர்' என்றும் 'மிண்டர்' என்றும் 'கள்வர்' என்றும் பழிப்பதும் பழியோ? திருவள்ளுவர் இத்தகையாரைப் பழிப்பதில் இப்பழி கால் கூறுகுமோ?

இவையனைத்தும் சமணர்க்கே சிறப்பாய் உரிய குறைகள் அல்ல. இக்காலத்தில் எத்துணைத் துறவிகள் கள்ளுண்டு, புலால் தின்று, பொது மகளிரையும் துறவிகளென உடன் கொண்டே ஏகுகின்றனர். தவப் பள்ளிகளில் அறவணவடிகள் பலர், தலைமைநிலை அடைய வேண்டித் தமக்கு வழிகாட்டிய முன்னோர்க்கு மறலியாகிக் கொலை புரிய இல்லையா? அத்தகைய வழக்குகள் இன்றும் வழக்குமன்றங்களில் நடைபெறவில்லையா? எனவே, இஃது எக்காலத்தும், சில மாக்களது இயல்பாக விளங்கும். இதனை எடுத்துக் கூறிய சம்பந்தர் பொய் கூறுகின்றவரும் அல்லர். சமணரை மட்டுமே பழி கூறுகின்றவரும் அல்லர். கூடா ஒழுக்கம் பூண்டு கொடுமை பல புரிந்து புற நிலையளவில் கடுந்துறவு பூண்டார் அனைவரையும் அவர் பழிக்கின்றார். (பேய்த் துறவினையும் போலித் துறவினையும் அவர் இழித்து உரைக்கின்றார். சமணர்களும் அவர் செய்த நன்றிக்குக் கடமைப் பட்டுள்ளார்கள். சமணரில் பழியுடையாரைப் பழிப்பது அமணர்கள் கடமையன்றோ? சம்பந்தர் இல்லறத்தில் நின்ற சமணரைப் பழிக்கவில்லை. வேறு வகையில் துறவு பூண்ட சமணரையும் பழிக்கவில்லை. சம்பந்தர், இடித்துரைத்த பழியுரையால் அன்றோ சமணரிடம் அக்கடுந்துறவு அருகுவதாயிற்று? அதற்கவர்கள் நன்றிபாராட்ட வேண்டாவா? அதனை மறந்து, அப்பெரியார் சமணர் அனைவரையும் பழி தூற்றுகின்றார் என மனம் புழுங்கி அவரை இழித்துரைப்பதால் என்

பயன்? சம்பந்தர் சைவர்க்கே உரியவர் அல்லர்; சமணருக்கும் உரியர்—உலகனைத்திற்கும் உரியவர். உலகம் முழுவதனையும் ஒரு முதல்வனின் ஒப்பற்ற வடிவமாகக் கண்டவர் அவரே அன்றோ?)

இவ்வாறு ஒழுகிய சிலர் தம் கொள்கை-களையே எங்கும் பரப்ப வேண்டினர்; பிற கொள்கையினரைக் கண்டால் மனம் எரிந்து புழுங்கினர். அப்பர், சைவரான பிறகு அவர்கள் பகைமை எல்லாம் சைவர் மேலேயே திரும்பி-யது. சைவர் காற்றுப் பட்டாலும் அவர்கள் பொறார் ஆயினர்.

> நீற்றுமேனி யராயினர் மேலுற்ற காற்று
> கொள்ளவு நில்லா அமணர்

எனப் பாடுகின்றனர் சம்பந்தர்.

இவர்கள் மன்றாடுவதில் சிறந்தவர்கள். பலரை மன்றாடி வென்றனர் இன்னோர். பெரும் பேச்சாளிகளாய்த் தமது புகழைத் தாமே பறைசாற்றித் திரிந்தவராய் என்றும் இவர்கள் சினந்தே மொழிந்தனராம். செத்தாலும் தமது வழக்கினை இவர்கள் மறப்பதில்லையாம்.

> விருது பகரும் வெஞ்சொற் சமணர்
> வஞ்சச் சாக்கியர் பொருது பகருமொழி—
> பெருக்கப் பிதற்றும் சமணர்—
> சாவாயும் வாதுசெய் சாவகர்—

என வருதல் காண்க.

அத்தகு பொருள் உண்டும் இல்லையும் என்று
நின்றவர்க்கு, அச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்து வாதிலழித் தெழுந்த கவிபெயர்ச்
சத்திரத்தில் மடிந்தொடிந்து சனங்கள் வெட்குற நக்கமேனி,
சித்திரர்க் கெளியே னலேன்
திருவால வாயரனிற்கவே.

எனப் பாடுகின்றார் சம்பந்தர்.

"ஒரு பொருள் 'உண்டா?' என்றால் 'உண்டு' என்றோ, 'இல்லை என்றோ கூறாது, "ஒரு வகையால் உண்டு ஒரு வகையால் இல்லை" என்று ஒத்ததும் ஒவ்வாததும் ஒன்றாய்க் கூறி எதிர் நின்று உரையாடுவர். இவர்களது பேருரை கண்டு அச்சம் கொள்ள மொழிவர். கவி எனும் பெயருடைய சத்திரத்தில் பன்முறை எதிருரை- யாடுவர். இவர்களது உரையினைக் கேட்டு மக்கள் சோம்பி நிலைகெட்டு வெட்குற, உடை- யிலாத ஒரு வடிவினை உடையவர். இவர்களுக்கு நான் தோற்பவன் அல்லேன்" என்று சம்பந்தர் பாடுகின்றார். இவ்வாறு உறுதி கொண்டு வந்- தமை நோக்கியே இவர் தங்கிய இடத்தில் தீ வைத்தார்கள் எதிரிகள்.

இவற்றை எல்லாம் கண்ட சைவர்கள் மனம் எவ்வாறு புழுங்கியிருக்கும்? ஆனால், சம்பந்தரோ "சமணர்கள் அறியாமையால் இங்- ஙனம் ஒழுகுகின்றனர். இது கேட்டு வெகுளா தீர்கள். சிவனடியாருக்கு ஒரு குறையும் இல்லை. உங்கள் வேலையைச் செய்யுங்கள்" என அவர் கள் சினத்தை ஆற்றுவிக்கின்றார். இப்பெரி யாரின் அன்பிருந்தபடி என்னே! என்னே!

குண்டருங் குணமிலாச்சமண் சாக்கிய
மிண்டர்கண் மிண்டவை கேட்டு வெகுளன்மின்
விண்டவர் தம்புர மெய்தவன் வெண்ணியில்
தொண்டராய் ஏத்தவல்லார் துயர் தோன்ருவே.

என்றும்,

சாவாயும் வாதுசெய் சாவகர் சாக்கியர்
மேவாத சொல்லவை கேட்டு வெகுளேன்மின்
பூவாய கொன்றையினுனைப் புனற்காழிக்
கோவாய கொள்கையினுன் அடி கூறுமே.

என்றும் பாடுதல் காண்க.

"அயிலால் போழ்ப அயில்"

என்றபடி அவர்கள் வழியே சென்று அவர்களோடு எதிருரையாடி வென்று அவர்களது தீயொழுக்கத்தை அழிக்கக் கடவுளை வேண்டுகின்ருர் சம்பந்தர். அதற்கும் திருவருள் விடை தர வேண்டுமென எண்ணி முன் கூறியபடி ஒரு முறைக்கு இருபதுமுறை இறைவனை வேண்டி நிற்கின்ருர். அருகர்களோடு எதிருரையாட, இறைவனது திருவுள்ளத்தை அறிய நின்ற அந் நிலையில் யாது வேண்டுகின்ருர் சம்பந்தர்?

'எய்தி வாதுசெயத் திருவுள்ளமே'

என்று விடை கேட்கின்ருர். அவர்களை அடைதற்கும் விடை வேண்டும். அவர்கள் ஒருபுறம் நிற்க அவர்களோடு பேச்சென்ன என்பதே இவர் எண்ணிய பொதுநிலை. அன்னோர் செய்யும் கொடுமையை நினைந்து அவற்றைச் 'சீறி வாது செயத் திருவுள்ளமே' என மேல் வினவுகின்ருர்.

பழிப்பான செயல்களின் மேல் சீறியே விழுதல் வேண்டும். பழியாளருக்கு இரங்குவது போலப் பழிக்கும் இரங்கினுல் உலகம் என்னுகும்? ஆதலின் தீமையைச் செறுத்தல் வேண்டும்.

'செறுத்து வாது செய்த் திருவுள்ளமே ?

என்று சம்பந்தர் வேண்டுகின்றுர். அவர்களின் பொய்த் திறங்கள், அவர்களுக்குப் பயன்படாது ஒழிய வேண்டும். செறுத்தலும் சீறுவதும் எதற்கு? அவர்களுடைய தீயொழுக்கம் சிதையவே அன்ருே? ஆதலின், அவர்களுடைய தீத்திறங்கள் சிதறவே வேண்டுகின்ருர். ஈதும் அவர்கள் மேல் இருந்த அன்பே அன்ருே?

திறங்களைச் சிந்த வாது செயத் திருவுள்ளமே
திறம் கழல வாது செயத் திருவுள்ளமே.

எனவே சம்பந்தர் வேண்டுகின்ருர். சமணர்களாகிய அவர்கள் சைவராகித் தம்மை வெல்லவோ இவர் விரும்புகின்ருர்; இல்லை. எதிருரையாடுகையில் அவர்கள் முறியடிக்கப்பட்டு, உரை குழறித் தோற்று ஓடி ஒளிந்து மனமழியத் தாம் அவர்களை வெல்ல வேண்டும் என்றே இவர் விரும்புகின்றனர்.

ஓட்டிவாது செயத் திருவுள்ளமே
சித்தரை அழிக்கத் திருவுள்ளமே
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
வாதினில் செண்டடித்துளறத் திருவுள்ளமே.

காக்கவாது செய்யத் திருவுள்ளமே.
அழிப்பரை அழிக்கத் திருவுள்ளமே.

முறிய வாது செயத்திருவுள்ளமே.
தென்றவாது செயத் திருவுள்ளமே,

எனப் பாடி வெற்றியே வேண்டுகின்றார் சம்பந்தர். அழித்தல், முறியடித்தல், செண்டடித் துளறல், ஓட்டல், கரக்கவைத்தல், வெல்லுதல் முதலிய சொற்கள் போரில் வழங்குவனவே ஆம். இங்கு "வாது செய்ய" என்பதால் எதிருரையாடல் குறிக்கப்படுகின்றதே அன்றிப் போரொன்றும் குறிக்கப்பட இல்லை. ஆதலின், முறியடித்தல் முதலான சொற்கள் உவமையாக வந்தவையே அன்றி போரைக் குறிக்க வந்தவை அல்ல. எதிருரையாடலில் முறியடித்தலையும் செண்டடித்தலையும் எங்குக் கண்டுள்ளோம்? ஆதலின் அழிதலாவது மனம் அழிதலே ஆம். அழிந்த குடி என்பது நிலைகெட்ட குடி என்று பொருள்படுதல் போல அழித்தல் என்பது நிலை கெடச் செய்தலையும் குறிக்கும்.

இவ்வாறு வெற்றி வேண்டி எதிருரையாடுகையில், தாம் எடுத்துரைக்கும் அறிவுரைகள், அவர்களுடைய உள்ளத்தே புகவேண்டுமானால், வாழைப் பழத்தே ஊசி நுழைப்பது போல மெல்ல மெல்ல அவர் உளங்கொள எடுத்தோத வேண்டும்.

'பையவே வாது செய்யத் திருவுள்ளமோ'

என வேண்டுகின்றார். ஏன்? அவர்கள் மனத்தை விளக்கி அவர்களையும் தம்முடன் கொண்டு செல்ல வேண்டாவா? அவர்களது அறிவை

விளக்கி எதிருரை ஆடலையே இப்பெரியார் விரும்பி நிற்கின்றார்.

'தேற்றிவாது செயத் திருவுள்ளமே.'

என விடை கேட்கின்றார். இவ்வாறு அறிவை விளக்கி எதிருரை ஆடுகையிலும், சிலபோது, சில பெரியோர், எதிரிகளை வெல்வதொன்றையே பொருளாகக் கொண்டு உண்மை விளக்கத்தைப் புறக்கணிப்பர். நெஞ்சாரப் பொய்யென அறிந்த-வற்றையும் எதிரியின் ஏழ்மையறிவை அறிந்து தம்மறிவுச் செருக்கால் உண்மை என நிலை நாட்-டப் புகுவர். ஆனால், அஃது இறைவன் வழி நின்ற ஒழுக்கமாகாது. சம்பந்தர் இறைவன் வழி நின்ற ஒழுக்க நெறி சென்றே வெல்ல விரும்புகின்றார்:

அமணர் திறத்து நின் சீலம் வாது செயத் திருவுள்ளமே.

என வேண்டுகின்றார். சமணர்களை நல்நெறியில் திருப்புவதே சம்பந்தர் நோக்கம். அழித்தல் என்பதன் உண்மைப் பொருளை இப்பெரியாரே குறிக்கின்றார்.

'தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே.'

எனப்பாடி விடை கேட்கின்றார். சமணர்களு-டைய கற்பாவது யாது? அவர்களுடைய கொள் கைப்படி துறவினை வழிபடுவதன்றோ அவர்களுக் குக் கற்பாவது. அக் கொள்கையை மறந்து சிவனை வழிபடத் தொடங்கினால் அவர்கள் கற்-பழிவர் அன்றோ? ஈதே இப்பெரியார் வேண்-டியது என்பதாயிற்று. இவர்களைக் கொன்-

றழிக்க இவர் வேண்டுகின்றார் இல்லை. இவ்வாறு செய்தனர் ஆயின், தாம் வேண்டியபடி அருள் பெறவில்லை என்று முடியும். அப்பழி அவருக்கேன்? சமணர்களது வாழ்க்கையில் காணக் கிடக்கும் குற்றங்களைக் களையவே இப் பெரியார் இறைவனை வேண்டுகின்றார்.

"அமண் ஆசற"

என்று பாடுதல் காண்க. பாடி விடை கொண்டு அங்ஙனமே எதிருரையாடி வெற்றி பெறுகின்றார்.

## 5. கழுவேற்றிய கதை

இவ்வாறு பிறருடைய சினத்தைத் தணிவித்துச் சிவனது திருவருள் வழியே நின்ற இப் பெரியார், சமணர்களைக் கழுவேற்றினர் என்று சிவனை வழிபடுவோர் சிலர் களிப்புறுகின்றார்கள். சம்பந்தர் பாடிய பாடல்கள் அருள் வழியில் நிற்க, அவர் செயல் மருள் வழியில் நிற்குமோ? அவர் சொல்வது ஒன்று; செய்வது வேறோ என ஐயம் எழுகின்றது. திருஞான சம்பந்தரது பாடல்கள்என இப்பொழுது அகப்பட்டுள்ளனவற்றை நாம் ஆராய்ந்த வரையில், கழுவேற்றிய குறிப்பு ஒன்றேனுமில்லை. உள்ள குறிப்புக்களனைத்தும், நாம் எடுத்துக் காட்டியபடி, அக்கதையை மறுத்து உரையாடுகின்றன.

'தெண்ணர் கற்பழிக்கத் திருவுள்ளமே'

என்று வேண்டுகின்றாரே அன்றி,

" கழுவேற்றத் திருவுள்ளமே "

என்று வேண்டவில்லை. ஆனால், ஞான சூரியன் என்ற நூல் ஒன்று,

அந்தணாளர்
புரியுமருமறை சிந்தை செய்யா அருகர்
சிரங்களைச் சிந்தவாது செயத் திருவுள்ளமே.

என்று சம்பந்தர் பாடுகின்றதாக எழுதுகின்றது. யாம் கண்ட திருமுறைப் பதிப்புகளில் எல்லாம்,

அந்தணாளர்
புரியுமரு மறை சிந்தை செய்யா அருகர்
திறங்களைச் சிந்தவாது செயத் திருவுள்ளமே.

என்றே இப்பாடல் காணப்படுகின்றது. " சிரங்களைச் சிந்த " என்பது அச்சுக் கோத்தவனின் கைத்தவறே. ' திறங்களைச் சிந்த ' என்பதே பாடல் என்று ஞான சூரியனை எழுதியவரே ஒப்புக் கொண்டதாகத் திருவாளர். திரு. வி. கலியாண சுந்தர முதலியார் தெரிவித்துள்ளார். " சிரங்கள் சிந்த "த் திருவருளை வேண்டி நின்ற கதை எந்த நாளிலும் திருமுறையில் வழங்கியதில்லை என்பதாயிற்று. திரிவுகளை என்றும் ஆம்.

சம்பந்தர் காலத்திருந்த திருநாவுக்கரசரும், இக்கதையைப் பற்றிக் கூறுகின்றார் இல்லை. அப்பர் காலத்திருந்த அரசன் 'குணபரனே' என்று பெரிய புராணத்தினின்றும் அறிகின்றோம். கல் ஏட்டினின்றும், குணபரன் என்பது மஹேந்திர வர்ம பல்லவனே என்பது தெளிவாகின்றது. கருங்கற் கோயில்கள் அவன் நாளிலிருந்தே

தென்னாட்டில் எங்கும் எழத் தொடங்கின ; அவ்வகையால் கல்லேடுகள் நிலைபெற்று விளங்கத் தொடங்கின. அவனுடைய காலத்தில் இருந்து-தான் தமிழ் நாட்டு வரலாறு, ஏறக்குறைய ஒரு கோவையாகக் கல் ஏட்டின் நின்றும், செப்பேட்-டின் நின்றும் பலராலும் கற்கப்படுகின்றது. அவ்வேடுகளிலும், இக்கழுவேற்றியகதை குறிக்-கப் படவில்லை. எண்ணாயிரவரைக் கழு ஏற்றி-யமை, குறித்து வைத்துக் கொள்ளத் தக்க-தன்றோ! அதைப்பற்றிய குறிப்பொன்றும் காணக் கிடைக்கவில்லை என்றால், 'அது நடக்க வில்லை' என்றே முடிவு செய்ய இடமில்லையோ? சம்பந்தர் காலத்தில் 'ஹியூன்ஸியாங்' என்ற சீன நாட்டுப் புத்தர் ஒருவர் நம் நாடு முழுதும் நேரே சுற்றிப் பார்த்துத் தாம் கண்டவற்றை ஒரு நூலாக எழுதி வைத்துப் போயினர். ஹியூன் ஸியாங், புத்தர் கொள்கை அதன் தாயகமாகிய நமது நாட்டில் எவ்வாறு வழங்கி வருகிறது என்பதை நேரே அறியவும், அதைப்பற்றிய நூல்-களைத் தேடி எடுத்துச் செல்லவும் வந்தவர். புத்-தர்களது நிலையை எடுத்து நன்கு அவர் கூறு-கின்றார் ; அவர் நாளில் புத்தர்கள் நிலை சீர்கெட்-டிருந்ததை விளக்குகின்றார்; பிற கொள்கையினர் சிறப்புடன் விளங்குவதை எடுத்துக் காட்டுகின்-றார் ; அப்பிற கொள்கையினரது தீச்செய்கை-களையும் தீய வழக்கங்களையும் குறிப்பிடுகின்றார் ; வங்க நாட்டில் காளியை வழிபடுவார் தம் கட-வுட்கு மக்களையேகொன்று மகிழ்வூட்டுவதை

எடுத்துக் காட்டுகின்ருர். எண்ணுயிரவர் இறந்ததைக் கேள்வியுற்றிருந்தால் அவர் அதனையும் எடுத்துக் காட்டி இருப்பர் அன்ருே?

அப்பெரியார் தமிழகத்தில் தொண்டை நாட்டின் முடிவு வரை வந்து போயினர். மஹாபலிபுரத்தருகேதான் அவர் கப்பலேறித் தம் ஊர்க்குப் போயினர். அத்தொண்டை நாட்டை ஆண்ட நரசிங்கவர்ம பல்லவனைப்பற்றி அவர் கூறுகின்ருர்; காஞ்சியின் நிலையை நன்கு விளக்குகின்ருர். நரசிங்கவர்மன் புலிகேசனை வென்ருன். புலிகேசன் ஹர்ஷனை வென்ருன். அந்த ஹர்ஷன் பன்னிரண்டாண்டிற்கு ஒருமுறை தன் பொருளை எல்லாம் ஏழைகட்கும், பெரியோருக்கும், கற்ருேருக்கும் கொடுத்துவிடுவதனை இச்சீனர் குறிக்கின்ருர்; அவன் வழிபாட்டினையும் விரித்துரைக்கின்ருர். அங்கங்கே அவர் கேட்ட கதையினையும் எழுதி வைக்கின்ருர். கழுவேறிய கதை உண்மையாக நடந்திருந்தாலும், அக்கதை அந்நாளில் வழங்கி இருந்தாலும் அவர் காதில் விழுந்திராதா? அவர் இதைப்பற்றிய ஒரு குறிப்பும் எழுதுகின்ருர் இல்லை. அக்காலத்தில் எழுந்த வேறு எந்த நூலும் இக்கதையைக் குறிப்பதாகக் காணேம். அந்நாளைய சமணர் நூல்களேனும் இதைப்பற்றிக் கூருவா? இல்லை! எனவே, அந்நாளில் இச்செய்தியும் நடைபெற இல்லை; வரலாருகவும் வழங்கவில்லை என்பதாயிற்று.

சுந்தரரது திருப்பாட்டிலும் இக்கதை காணக் கிடையாமையால், அவர் நாளிலும் இது

வழங்கவில்லை போலும்! ஆனால், சுந்தரர் திருப்பாட்டிற்கு உரை வகுத்த பெரியார் ஒருவர், (இராமாநந்த யோகிகள்)

> கரியமனச் சமண்காடி யாடு கழுக்களால்,
> எரியவச வுணவும் தன்மையே? இமவான்மகள்
> பெரியமனந் தடுமாற வேண்டிப் பெம்மான்மதக்
> கரியினுரி அல்லதில் லையோ எம்பிரானுக்கே?

என்ற திருப்பாட்டுக் கழுவேற்றிய கதையையே குறிக்கின்றது எனப் பொருள் காண்கின்றார். "கருமனத்தையுடை சமணர் நெய்யாடிய கழுமரங்களில் எரியவும், வைவுண்ணவும், தகு- தியோ? உமாதேவி, பெரிய மனம் கலங்க விரும்பிப் பெருமானாகிய எம்பெருமானுக்கு மதயானைத் தோலன்றி வேறொன்றும் இல்லை- யோ" என்று அவ்வுரையாளர் பொழிப்புரை கூறுகின்றார். (பக். 316) 'கழுக்களால்' என்பதற்குக் 'கழுவில்' என்றும், 'எரிய வசவும்' என்பதற்கு 'எரியவும் வசவுண்ணவும்' என்றும் அவர் வலிந்து பொருள் கொள்ள வேண்டி நிற்- கின்றது. அதுவும் அன்றி, சமணர்களுக்காக இரங்கிப் புகழ்ந்து, கழுவேற்றியவர்களை இகழ்- வதாகவும் அன்றோ இவ்வுரையின் குறிப்புள்- ளது? இதற்கு வேறு பொருத்தமான பொருள் இல்லையோ? சுந்தரர்,

> "நல்லிசை ஞான சம்பந்தனும் நாவினுக் கரசரும்
> பாடிய நற்றமிழ் மாலை,
> சொல்லி யேத்து கந்தானை"

என்று தம்மைப் புனைந்துரைக்கின்றார். ஆத-லின், அவர் பாட்டில் வருஞ் சொற்களை அம் முன்னோர்களது பாடலைக் கொண்டே பொருள் கொள்ளுதல் வேண்டும். "கழுக்கள்" என்ற சொல் சம்பந்தர் திருக்கடைக் காப்பிலும் பயின்று வருகின்றது.

"மாசேறிய உடலார் அமண் கழுக்கள்"

(1—9—10—1)

என்று பாடுதல் காண்க.

இங்குக் கழுக்கள் என்பது எவ்வகையாலும் கழுவினைக் குறிக்க முடியாது; கழுக்குன்றம் என்பதில் போலக் கழுகு என்றே பொருள்படும். கழுகு போலக் கசிவிலாத மனத்தோடு தீனிமேல் நாட்டமாய் எதிரிகள் மேல் பாய்வது கண்டு சம-ணர்களையும் கழுகுகள் என்றே சம்பந்தர் இழித்-துரைக்கின்றார். "காடி" என்ற சொல் "நெய்" என்ற பொருளில் எந்தப் பத்துப் பாட்டில் பயின்று வருகின்றதோ, அந்தப் பத்துப் பாட்டி-லேயே, 'கஞ்சி' என்ற பொருளிலும் நெடுநல் வாடையில் "காடிகொண்ட கழுவுறு கலிங்கத்து" எனப்பயின்று வருகின்றது. அக்கஞ்சி என்ற பொருளிலேயே சம்பந்தரும்,

"காடிதொடு சமணைக் காய்ந்தார்"

முதலிய இடங்களில் காடி என்ற சொல்லைப் பயன்படுத்திக்கொள்கின்றார். காடியாடுதல் என்பது "உண்டாட்டு" என்பது போல வரு-கின்றது. எனவே, இப்பாட்டின் பொருள்

யாது? "இருண்ட மனத்துச் சமணர் கஞ்சி உண்டு மகிழ்ந்தாடும் கழுகுகள்—இவர்களாலே, அடியார் மனமெரியச் சிவ பெருமான் வசவுண்ணுதல் தன்மையோ? இயல்போ? முறையோ?" என்று பொருள் படுதல் காண்க. ஆதலின் இங்கும் கழு ஏற்றிய கதை கூறப்படவில்லை என்பதாயிற்று. "கழுக்கையர்" என்பதற்கு மயிலிறகுக்குப் பதிலாகக் கழுகு இறகினைக் கொண்டு செல்வோர் என்ற பொருளும் கொள்ளலாம்.

சங்கரர், தமது 'சிவாநந்த லஹரி'யில் சம்பந்தர் திருப்பாலுண்ட சிறப்பினைப் புகழ்ந்துபாடித் 'தமிழ்க் குழவி' என அவரை ஏத்தெடுக்கின்றார். அவரும் கழுவேற்றிய கதையைக் கூறவில்லை. பட்டினத்தடிகளும் கழுமல மும்மணிக் கோவையில் பாலுண்ட கதையைப் பாடுகின்றார்; கழுவேற்றிய கதையைப் பற்றிய குறிப்பொன்றும் அவர் நூல்களில் காணேம். நம்பியாண்டாருக்கு முன்னர் இச்செய்தியை எவரும் குறிப்பிட இல்லை. குறிப்பிடாமையாலே நடக்க இல்லை என்றுகொள்வது அத்துணை வலிவுடைய முடிவு அன்று என்பதனை யாம் அறிவோம். சம்பந்தர் பாட்டின் போக்கிற்கு இக்கதை முரண்படுகின்றது என்பதோடு பிறர் இக்கதையைக் குறிப்பிடாமையையும் ஒருங்கு வைத்து நோக்கினால், இச்செய்தி நடக்கவில்லை என்ற நமது முடிவு வலிவுடைய இல்லையா? ஒருவனுயிராக இருக்கின்றானா என்பது கேள்வி. அவனைப் பல நூறு

மக்கள் காணவில்லை என்ற ஒன்றினாலேயே அவன் இறந்து பட்டான் என முடிவு கட்ட முடியாது. ஆனால், கடலில் சென்று வீழ்ந்திறப்பதாகச் சென்றான் என்பதை நாமறிந்து வைத்த பின், அவனை நாளும் கண்டு குலாவ வேண்டிய நெருங்கிய சுற்றத்தாரும், அண்டை அயலாரும், நண்பினரும் அவனைப் பற்றி ஒன்றும் அறியாமல் பல ஆண்டு கழியுமானால் அவன் தற்கொலை உண்டான் என்ற முடிவு வலிவடைய இல்லையா? அங்ஙனமே இந்த எதிர்மறைச் சான்றும் என்க.

பின்வந்த நம்பியாண்டார் நம்பியே திருமுறை கண்டு தொகுத்தவர். அப்பெரியார் சுந்தரர் பாடிய திருத்தொண்டத்தொகையின் வழிநூலாகத் திருத்தொண்டர் திருவந்தாதி ஒன்று பாடியுள்ளார். அந்நூல் திருத்தொண்டர்கள் வரலாறு ஒவ்வொன்றையும் தனித் தனியே சுருக்கிக் கூறுவதாகும். அவர் திருஞானசம்பந்தர் வரலாற்றை இரண்டு பாட்டால் பாடுகின்றார்; ஒன்றில் பாலுண்ட கதையைப் பாடுகின்றார்; மற்றொன்றில் சம்பந்தர் செங்கட் சோழனையும், முருக நாயனாரையும், திருநீலநக்க நாயனாரையும் திருக்கடைக் காப்பில் வைத்துப் பாடியதையும் தாம் அப்பெரியாருக்கு ஓர் அந்தாதி மாலை சூடியதனையும் குறித்துப் பாடுகின்றார்.

வைய மகிழ யாம்வாழ அமணர்வலி தொலைய,
ஐயன் பிரமபுரத்தரற் கம்மென் குதலைச் செவ்வாய்ப்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையலருள் பெற்றனன் என்பர் ஞான சம்பந்தனையே.

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகன்நல்ல
சந்தா ரகலத்து நீலநக்கன் பெயர்தான் மொழிந்து
கொந்தார் கடையார் பதிகத் திலிட்டடியேன் கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான்அருட் காழியர் கொற்றவனே.

என்று பாடுதல் காண்க. ஆனால், நம்பிகள் கழு ஏறிய கதையை அறியாமல் இல்லை; எனினும் திருவருட் பெருமையால், அப்பெரியார் இங்கு வரலாறு கூற வந்த இந்த ஓரிடத்தில் குறிக்காது போகின்றார் அன்றோ? மேலே, இரண்டாவது பாட்டில் குறிக்கப்பட்ட திருஞான சம்பந்தர் திருவந்தாதியில்,

தொண்டினம் சூழச் சுரிகுழலார் தம்மனந் தொடர
வண்டினஞ் சூழ வரும்இவன் போலும் மயிலுகுத்த
கண்தினஞ் சூழ்ந்தவனைப் பிரம்போர் கழுவா வுடலம்
விண்டினஞ் சூழக் கழுவின வாக்கிய வித்தகனே.

என்று பாடுகின்றார்.

கழுவா உடலம் கழுவின வாக்குதல்.

என முரண் தொடைபடப் பலமுறை பாடுகின்றார். பின்னும் அவர்,

கெழு
குண்டர்க்கு வைகைக் கரையன்று
வான்கொடுத்த கலிகெழு
திண்டோட் கவுணியர் தீபன்.

என்றும்,

தொழுநீர் வைகைக் குழுவாயெதிர்ந்த உறிக்கைப்
பறித்தலைக் குண்டர் தங்கள்,
கழுவா உடலங் கழுவினமாக்கிய கற்பகமே.

என்றும்,

அமண் கணங் கழுவேற்றி

என்றும்,

நீதிகெட்டார் குலையக் கழுவின் குழுக் கண்டவன்

என்றும்,

வாதினில் வல்லமணைப் பண்ணைக் கழுவினுதி
வைத்தெம் பந்த வினையறுக்கும் கண்ணை

என்றும் பாடுதல் காண்க. திருஞான சம்பந்தர் மும்மணிக் கோவையிலும்,

கண்டது,
உறியொடு பீலி ஒருகையிற் கொள்ளும்,
பறிதலைச் சமணைப் பல கழுமிசையே.

என்று அவர் பாடுகின்றார். 'பல கழுமிசையே சமணைக் கண்டது' என்று கூட்டுக. திருஞான சம்பந்தர் திருவுலா மாலையிலும், இச்செய்தியைப் பன்முறை புனைந்துரைக்கின்றார் அவர். சமணர் தம் செங்குருதி ஆறோடுமாறு கழுவேற்றினார் சம்பந்தர் எனக் குருதியாட்டத்தில் களிக்கின்றார் நம்பிகள்.

சூழொளிய,
கோதை வேல்தென்னன் கூடற் குலநகரில்
வாதில் அமணர்வலி தொலையக்—காதலால்,
புண்கெழுவு செம்புனல் ஆறோடப் பொருதவரை
வண்கழுவில் தைத்த மறையோன்.

என்று அவர் பாடுகின்றார். உலாவாவது, தலைவன், ஊரிலுள்ள தெருக்கள் வழியாக உலாப்போகையில் பல நிலையிலுள்ள பெண்களும் அவன் அழகில் ஈடுபட்டுப் புலம்பும், ஒரு நூலாகும். அங்ஙனமே, பெண்கள் சம்பந்தர்

வடிவழகில் ஈடுபட்டு மெய்ம் மறந்து, நாணொழிந்து புலம்புவதை இந்த உலாவும் புனைந்துரைக்கின்றது. சில பெண்கள் என்ன என்று புலம்புகின்றார்கள்? "இவன் நமக்கு இரங்கி அருள் செய்வான்; நம்மை இவன் சேர்வான்; இவன் தண்ணருளுடையான்; நாம் நோவப் பாரான் என்று எண்ணுவது என்ன பேதைமை. இவனன்றோ சமணர்களைக் கழுவேற்றிய கன்மனக் கொடியோன்; இவன் மனமோ இரங்கும்?" என்று கூறிப் புலம்புகின்றனராம்.

"நங்கைமீர்,
இன்றிவன் நல்குமே; எண்பெருங் குன்றத்தில்
அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப்— பொன்ற
உரைகெழுவு செந்தமிழ்ப் பாவொன்றினால் வென்றி
நிரைகழுமே லுய்த்தானை நேர்ந்து—விரைமலர்த்தாள்
பெற்றிடலாம் என்றிருந்த நம்மிலும் பேதையர்கள்
மற்றுளரோ?"

என்று வருத்துரைப்பர் என்று பாடுதல் காண்க. திருஞான சம்பந்தர் திருக்கலம்பகத்திலும்,

அமணரைக் கழுநுதிக்கண் உறுத்தவனும் நீ.

என்றும்,

அறிவாகி இன்பஞ் செய்தமிழ் வாதில்
வென்றந்த அமணரை வன்குண்டர் கழுவேற
முன்கண்ட செறிமாட வண்சண்பை நகராளி.

என்றும்,

அருகர்தர் குலமொன்றி முழுதும்
கழுவிலேறக் கறுத்தது...

என்றும் நம்பியாண்டார் பாடுகின்றார். திரு ஞான சம்பந்தர் திருத்தொகையிலும்,

பாழியமணைக் கழுவேற.

என்று அவர் பாடுகின்றார்.

நமக்கு எட்டிய நூல்களில் முதன் முதலில் நம்பியாண்டார் நம்பியே இதனைப் பாடுகின்றார்; ஆதலின், அவர் புனைந்துரை அனைத்தையும் இங்கே தொகுத்துக் கூறுகின்றோம்: " கூடல் நகரில், சுற்றிலும் உள்ள எண்குன்றங்களின் நின்று குழுமிவந்த அருகரோடு, தமிழ் வழக்கிட்டு வென்று, அவர்கள் வலிதொலையக் கழுவேற்றி அவர்கள் செங்குருதி ஆறுகப் பெருகி ஓடச் செய்தனர் சம்பந்தர் " என்பதே நம்பிகள் பாடும் கதை. புனல் வழக்கும் அனல் வழக்கும் வெப்ப மொழிக்கும் வழக்கும் இவர் பாடுகின்றார். பின்வந்த பெரிய புராணக் கதையை ஆராய்வதற்கு முன், நம்பிகள் கதைப்படி, சம்பந்தரே அமணர்களைக் கழுவேற்றினர் என்பது தெளிவாதலைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். உலாவில் வரும் பெண்கள் சம்பந்தரை ஒருவகையில் கன்மனக் கொடியோன் என்ற குறிப்புத் தோன்ற இகழ்வதையும் இங்கு நாம் உய்த்து நோக்குதல் வேண்டும்.

திருத்தொண்டத் திருவந்தாதியின் சார்பு நூலாகப் பெரிய புராணம் பாடவந்த சேக்கிழார், அவ்வந்தாதியில் காணக் கிடக்கும் கதை ஒன்றையே அன்றித் திருஞான சம்பந்தர் திரு

அந்தாதி முதலியவற்றில் குறிக்கப்பட்ட கதை-களையும் ஒரு கோவை செய்து பாடிப் புனைந்-துரைக்கின்றார். திருஞான சம்பந்தர் புராணத்-தில் கண்ட கழுவேற்றிய கதையை மட்டும் இங்கு எழுதுவோமாக: நம்பியாண்டார் நம்பி-யைப் பின்பற்றி எழுதினாலும், கதை எவ்வளவு மாறிவிட்டது என்பதை உற்று நோக்குக.

ஆளுடைய அரசும், ஆளுடைய பிள்ளையா-ரும் திருமறைக் காடு வந்து சேர்ந்தார்கள். அப்-பொழுது பாண்டி நாட்டில் சமணரே எங்கும் ஆயினர். நெறிதவறி நடந்த அவர்களால் நாடு கலங்கியது. அரசனும் தீவினைப் பயனாலே, அந்-நெறியே சார்ந்தான். பறிமயிர்த்தலையும், பாயும், பீலியும், தடுக்கும், மேனிலாச் சொரியும் முக்குடை-யும் ஆகித் திரிபவரே எங்கும் ஆயினர். பாண்டி-யனுக்கு ஓர் உய்வழியாகச் சோழனின் செல்வப் பெண்ணும் மங்கையர்க்கரசியார் பாண்டியன் மனைவி ஆயினர். குலச்சிறையார் அமைச்சர் ஆயினர். பாண்டி நாட்டில் இந்த இருவரே சிவனை வழிபடுபவராய் எஞ்சி நின்றார்கள். ஆனால், இவர்களும் பாண்டியன் அறியாத வகையில்தான், சிவனை வழிபட்டு வந்தனர்; செங்நெறி விளக்கும் ஞான சம்பந்தப் பிள்ளை-யார், திருமறைக்காடு சேர்ந்தமையைத் தம் நல்வினைப் பயத்தாற் கேள்விப்பட்டனர்; மகிழ்ச்சி பொங்கியவர்களாய்த் தம் பாண்டி நாடு சமணப் பாழியாய் அழிவதை அப்பெரி-யாருக்கு அறிவுறுத்த ஆட்களை அனுப்பினர். அவர்களும், அருமறைத் தலைவனார் அங்கு

மறைக்காட்டில் அமர்ந்திருந்தருளும் செல்வப் பெருமடத்து அணைய வந்து, வாயில் காவலர்க்-குத் தாங்கள் வருமுறை தன்மை எல்லாம் அறி-வித்தனர். வாயில் காவலரால் அறிந்த பிள்ளை-யார் அவர்களை உள்ளழைத்துக் கன்னிநாடு அமணர் தம்மாற் கட்டழிந்தமை அறிந்தனர். வந்-தவர்களும் "அமணர் தம்மை வென்றருள வேந்-தனை வெண்ணீறு இடுவித்துச் சிவநெறியைத் தென்பாண்டி நாட்டில் நிலைநாட்ட வேண்டும்," என வேண்டினர். பிள்ளையார் இச்செய்தியை ஆளுடைய அரசுக்கு அறிவிக்க, அவரோ சம்பந்தர் மேல் வைத்த அன்பினால், "அமண் கையர் வஞ்சனைக்கு ஒரு முடிவில்லை. உறு-கோள் தானும் தீய; எழுந்தருள ஒண்ணாது." என்று தடுத்தனர். பிள்ளையாரோ "சிவனது திருவடியைப் போற்றுவாருக்குத் தீங்கு ஏது?" என்று உறுதி கூறி,

"ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே,......
ஆசறு நல்லநல்ல அவைநல்ல அடியாரவர்க்கு மிகவே"

என்று பாடிப் பாண்டி நாட்டிற்குப் புறப்பட்-டார். ஆளுடைய அரசும் அதற்குடன்பட்டுத் தாமும் உடன் புறப்பட, பிள்ளையார் அவர் வருதலைக் கைகுவித்து இறைஞ்சித் தவிர்த்து ஆலவாய்க்குப் போயினார்.

அவர் வந்த பொழுது அமணர்கள், தீக்-கனவும் தீப்புள்ளும் கண்டார்கள். பள்ளி, பாழி, உணவறை, அசோகம் என்ற இவற்றின் மேல்

கூகையோடு ஆந்தை பூசலிட்டு அழிவு சாற்றின. அவர்கள் பீலியும் பாயும் வழுவி வீழ்ந்தன; கால்கள் தடுமாறின; கண்களும் இடத்துத் துடித்தன. தவப் பெண்களும், துறவிகளும் ஒருவரோடு ஒருவர் கலாம் விளைத்து மாறு-கொண்டு ஊறுசெய்து திக்குணம் தலைநின்-றார்கள். ஒவ்வோர் ஊரிலும் இவ்வாறு நடக்-கவே எல்லோரும் பாண்டியனிடம் சென்று இவற்றை எடுத்தியம்பினர்; அசோகும் முக்குடையும் தலைகீழாக வீழக்கண்ட கன-வையும், குண்டிகையைத் தகர்த்துப் பாயும் பீறி ஓர் குரத்தி ஓடிய கனவையும், சமண-ருடைய பாழி நின்றும் அறக்கடவுள் கழுதை மேற்படர ஊளையிட்டுப் புலம்பியோடிய கன-வையும், சிவனடியார் மதுரைக்குள் புகுந்த கனவையும், ஒரு கன்று, சமணர் கழகந் தன்னை உழறிடச் சிதறியோடி, ஒருவரும் தடுக்க அஞ்சி நிழலிலா மரங்கள் ஏறி நின்றிடக் கண்ட கன-வையும் எடுத்துரைத்தனர்; இடர் உழன்று உண்ணாது வருந்தினர். குலச்சிறையார்க்கும் மங்கையர்க்கரசியார்க்கும் நல்ல புட்கள் தோன்றின.

பிள்ளையார் வந்தமை அறிந்து, ஆலவாய் அமர்ந்தானைக் கும்பிடவேண்டும் எனக்கொற்ற-வனுக்கு அறிவித்து விடைகொண்டு, பிள்ளை-யாரை எதிர் கொள்ள வந்தனர், மங்கையர்க் கரசியார். பல்லியம் முழங்க, எல்லோரும் களிக்க, அறிவுமணிவிளக்காம் பிள்ளையார் வந்து அருளினர். "ஆலவாய் எங்கு?" என்று வினவிச்

சென்று, மங்கையர்க் கரசியார் சைவப் பற்றி-னையும், குலச் சிறையார் திருத்தொண்டினையும் புகழ்ந்து, அவர் இறைவனை ஏத்தித் தொழுதனர். பின்னே, கோயிலினுள் புகுந்து, நீலமாமிடற்று ஆலவாயிலரனைப் புகழ்ந்து போற்றி, அவர் வெளியேற, மங்கையர்க்கரசியாரும் எதிர்வந்து, மனமுருகி அடி வீழ்ந்து, பானலங்கண்கள் நீர்மல்கப் பவளவாய் குழறி, "யானும் என் பதியும் செய் தவம் என்கொல்?" என்றார். பிள்ளையாரும் "சூழும் ஆகிய பரசமயத்திடைத் தொண்டு வாழும் நீர்மையீர்! உம்மைக் காண வந்தனம்," என்று விடை பகர்ந்தனர். பின்-னர்ப் பிள்ளையார் ஒரு திருமடத்தில் இனிது அமர்ந்தார்.

பகல் வரக்கண்ட இருள்போல, இவர் வரவு கண்ட அமணர்கள், ஒன்றாய்க் கூடி மன்னன-னிடம் ஓடினர்; "சைவன் வந்தமையைக் கண்ட-தால் யாம் கண்டு முட்டு," என்றனர். "அதனைக் கேட்டதனால் யானும் கேட்டு முட்டு," என்றான் அரசன். "வழக்கிட வந்தவர் யார்?" என அறிந்து சினந்து "செய்யலாவது என்ன?" என வினவி-னான். "மடத்தை மந்திரத்தால் தீக்கு இரையாக்கு வதே முறை," என்று அவர்கள் சூழ்ச்சி சொல்ல, அரசனும், "ஆவதொன்று இதுவேயாகில் அத-னையே விரைந்து செய்யப் போங்கள்," என வழி அனுப்பினான்; முகம் புலர்ந்திருந்தான். மங்கை-யர்க்கரசியார் அது கண்டு, "வென்றவர் பால் சேர்வோம்; இதற்கு ஏன் வருந்த வேண்டும்?" என்று ஆறுதல் கூறினர். குலச்சிறையார்

இவை எல்லாம் அறிந்து, "மற்றினிச் சமண் செய்யும் வஞ்சனை அறியேம்!" என உள்ளம் உடைந்தார். மங்கையர்க்கரசியாரும் "ஞான சம்பந்தர் தம்பால் நன்மையல்லாத செய்யும் ஊனம் வந்தடையில் யாமும் உயிர் துறந்து ஒழிவது!" என்று உறுதி கூறினர்.

சென்ற சமணர்கள், தமது மந்திரத்தால் தீக்கொளுவ மாட்டாதவராய் வருந்தினர். "நீண் முடி வேந்தன் ஈதன்றி நம் மேன்மை உளங் கொளான்; நம் பிழைப்பும் ஒழியும்!" என்று உணர்ந்து, பொதி தழல்கொடு புக்கு அந்தண் திருமடத்துப் புறத்து அயல் இருள்போல் வந்து தம்தொழில் புரிந்தனர். வஞ்சனை மனத்தார் அத்தொழில் வெளிப்படுத்தும் அடியார், மனம் கலங்கிப் பிள்ளையாருக்கு அத்தீங்கினைச் சொன்ன பொழுது, அவர் பரிந்தருளி "இது கோல் வழு" எனக் கண்டு, அத்தீ அரசனை அடையுமாறு "பையவே சென்று பாண்டியற்காகவே" என்று பாடி வேண்டினர்.

பாண்டிமா தேவியார் தமது பொற்பிற் பயிலுநெடு
மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பி னாலும் அரசன்பால்
அபராதம் முறுத லாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடையன் ஆத லாலும்
தீப்பிணியைப் பையவே செல்க என்றார்.

அத்தீயும் தென்னனை 'மேவிப் பெருந் தழற்பொதி வெதுப்பு' எனப் பெயர் பெற்றது.

குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் மடம் எரிவது கேட்டு, "நாம் இனி மாய்வதே முறை!" என உறுதி கொள்கையில், அத்தீயடங்கியது கேட்டதும், மனம் மகிழ்ந்தனர். ஆனால், உடனே அரசன் வெப்பு நோயால் வருந்துவது கேட்டு மனம் மாழ்கினர்.

வேந்த னுக்குமெய் விதிர்ப்புற வெதுப்புறு வெம்மை
காந்து வெந்தழற் கனலென மெய்யெலாங் கவர்ந்து
போந்து மாளிகைப் புறத்துநின் றவர்களும் புலர்ந்து
தீந்து போம்படி எழுந்தது விழுந்துடல் திரங்க.

மருத்துவ நூலினர் செய்வன யாவும் அதனை மிகுதியே படுத்தின. அமணர் அது கேட்டு மன்னன் மாட்டணைந்தார். தமது மறை மொழியால் பீலி கொடு தைவர எடுத்தபோது, அவை தீய்ந்து போயின.

குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் "இந்த அமணர்கள் நேற்றிரவு செய்த தீங்கே இவ்வாறு வெப்பு நோயாக மூண்டது," என்று கண்டு, அரசனுக்கு அறிவித்தார்கள். அவனும் "பிள்ளையார் வந்தால் இந்த நோய் ஒழிகின்றதா பார்ப்போம். என் பிணியைப் போக்குவாரை யானும் சேர்வேன்," என்று சமணரை நோக்கிக் கூறினன். குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் பிள்ளையாரை உடனழைத்து வரப் போயினர். பிள்ளையாரும், அவர்களைக் கண்டு "அமணர் தம்மை வென்று வேந்தனுக்கு வெண் ணீறிடுவேன்," என உறுதி கூறிப் பின்னர், "அமணரை நோக்கும் பழுதுடன் நீங்கி வெல்லச்

சேவுயர் கொடியினர் திருவுள்ளம் அறிவேன்" என்று திருவாலவாயினுட் புகுந்தார்; ஆண்டவனைப் பாடி அருள் விடை கொண்டு அரண்மனைக்குப் போயினர். குலச்சிறையார் சென்று அவர் வரவை முன்னக அரசனுக்கு அறிவித்தனர். அமணர்கள், மன்னவனை நோக்கி, "இதுவோ நம் சமயத்தை நாட்டுமாறு? அவரால் தீர்ந்தது எனினும் யாமுந் தீர்த்தோம் ஆகவும் இசைவாய்" என்று வேண்டினர். அரசனுக்கு நல்ல நாள் பிறந்ததால், "இரு திறத்தாரும் தீர்மின்; கைதவம் பேச மாட்டேன்." என்று மறுத்தான். பிள்ளையாரும் வந்தார். அவர் வந்திருந்ததைக் கண்டதும் அரசனுக்கு வெம்மை நோய் சிறிது நீங்கியது. அரசன் அவரை "எவ்வூர்" என்று வினவப் "பிரமனூர்" என்ற பதிகம் பாடி விடை அருளினர்.

அமணர்கள் பிள்ளையாரைக் கண்டு, வாய்வழக்கால் வெல்வதனுக்கு எண்ணித் தாம் கோலும் நூல் எடுத்தோதித் தலை திமிர்ப்ப உரைத்தார்கள். மங்கையர்க்கரசியார் அது கண்டு பொருது, "இவரோசிறுவர்! அவர்களோ பலர்! வெப்பினை முன்நீக்கட்டும்! பின்வாய் வழக்கு ஆடலாம்!" என்றனர். அரசனும் "வேறு ஒரு வழக்கு எதற்கு? என்னுடைய வெப்பு நோயை நீக்கி அவ்வவர்கள் கொள்கையின் சிறப்பை இரு திறத்தாரும் காட்டட்டும்" என்றனன். பிள்ளையார், மங்கையர்க்கரசியாரின் மனம் நடுங்கக் கண்டு "அஞ்சாதீர். அமணருக்கு இளைத்தேன் அலேன்." என்று பதிகம் பாடி வற்புறுத்தினர்.

அமணர் இடப்புறத்து வெப்பு நோயை நீக்க உடன்பட்டனர். பிள்ளையாரும் வலப் புறத்து நோயை ஒழிக்க, "மந்திரமாவது நீறு" என்ற பதிகம் பாடினார். வலப்புறம் பொருவரு வெப்பு நீங்கிப் பொய்கையிற் குளிர்ந்தது. அமணரோ இடப்புற வெப்பை நீக்கஇயலாது, வெப்புறு தீத் தம்மை எரிப்ப மாசு உடலம் கன்றி, அருகு விட்டேறி நிற்பார், அறிவுடையாரை ஒத்தார், அறிவிலா நெறியில் நின்றார்.

மன்னவன் மொழிவான் "என்னே மதித்த இக்கால மொன்றில்
வெந்நரகொரு பாலாகும் வீட்டின்ப மொருபாலாகும்
துன்னு நஞ்சொரு பாலாகும் சுவையமு தொரு பாலாகும்
என் வடிவொன்றிலுற்றேன் இருதிறத் தியல்பும்

என்றான்.

"வெந்தொழில் அருகர் தோற்றீர்! என்னை விட்டு அகல நீங்கும்! வள்ளலாரே! இந்த வெப்பு அடைய நீங்க எனக்கருள்புரிவீர்" என்று சிந்தையால் தொழுதுசொன்னான் பாண்டியன். பிள்ளையார் இறைவனைப் போற்றிப் பின்னுமொருமுறை தைவர, வெப்பொழிந்தது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பிள்ளையாரை வணங்கி உவகை பூத்தனர்.

அன்னோர், பிள்ளையாரை வாய் வழக்கால் வெல்ல முடியாதென்று நினைந்து, தீயில் நீரில் வெல்ல எண்ணினர்; தம் கொள்கையின் உயர்வைக் கட்புலனாகக் காட்ட முற்பட்டனர். "என் வெப்புநோய் ஒழிக்க முடியாதவர்களுக்கு என்ன பேச்சு?" என்றான் அரசன். அவர்களோ

"தத்தம் கொள்கையின் உண்மையை ஏட்டிற்பொறித்துத் தீயிலிட்டபோது எவர் ஏடு நெருப்பில் வேவுறுது நின்றதோ அவரே வென்றவர் ஆவர்!" என்றனர். அரசன் அதை மறுப்பதற்கு முன், பிள்ளையார் அதற்கு உடன்பட்டார். ஏவலாளர் தீமூட்டினர்; சம்பந்தர், திருமுறையினைப் போற்றித் திருக்காப்பு நாண் அவிழ்த்தார்; அவிழ்த்த இடத்தில் திறந்து பார்த்தபோது "போகமார்த்த" என்ற நள்ளாற்றுப் பதிகம் வரக் கண்டனர். அதனைத் தனியே எடுத்துத் "தளிரிளவளரொளி" என்றபதிகம் பாடி இறைவனை வேண்டி, எரியினில் இட்டனர் சம்பந்தர். அஃதும் பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கியது; அமணர்களோ, அஞ்சி நடுங்கித் தமது மறைமொழி பொறித்த ஏட்டைப் பட்டது படக் கண்டனர்; நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர் நின்றார். இடைநின்றார், பிள்ளையார் இட்ட ஏட்டினை எடுத்தனர். அரசன், சமணர்களைநோக்கி, "நீர் இட்ட ஏட்டினைக் காட்டுமின்" என்றான். தீயை நீரிட்டு அவித்தனர் ஏவலாளர். திரண்ட சாம்பலைக் கையினால் பிசைந்து தூற்றிப் பார்த்தனர் அமணர். மன்னன் நகைத்து "இன்னும் அரித்துக் காணும்! பொய்யினால் மெய்ம்மை ஆக்கப் புகுந்தீர் போமின்! இன்னமும் நீர் தோற்கவில்லையோ?" என எள்ளினான்.

முக்கால் வழக்குச் செய்யவேண்டும் என மன்றாடினர் அன்னோர். மன்னவன் மறுக்கவும் பிள்ளையார் உடன்பட்டு "மூன்றாவது வழக்குத்

தான் யாது?" என வினவினர். "அவரவர்கள் உண்மைப் பொருளை ஏட்டிலே எழுதி நீரிடை இட்டால் எவர்களுடைய ஏடு நீரோட்டத்திற்கு எதிர் ஓடுகின்றதோ அவரே வென்றூர்" என்றனர் அன்னோர். குலச்சிறையார் "இவ்வழக்கில் தோற்றவர் செய்வது யாது?" என்று அரசனைக் கேட்டார். அவர்கள் அதனைக் கேட்டு, வெகுளியும் பொருமையும் கொண்டு தங்கள் வாய் சோர்ந்து தாமே, "வழக்கினில் அழிந்தோமாகில் வெங்கழு ஏற்றுவான் இவ்வேந்தன்." என்று சொல்லினர்.

அனைவரும் வைகை ஆற்றங் கரைக்குப் போயினர். அவர் 'அஸ்தி நாஸ்தி' என்று ஓலையில் எழுதி ஆற்றிலிட, ஆறும் இதனைக்கடலுக்கு அடித்துக் கொண்டு ஓடிற்று. பிள்ளையார் "வாழ்க அந்தணர்" என்ற பதிகம் பாடி ஏட்டில் பொறித்து வைகையிலிட "மருவிய பிறவி யாற்றில் மாதவர் மனஞ் சென்ருற்போல" எதிர்த்து நீர் கிழித்துப் போனது. "வேந்தனும் ஓங்குக" என்று பாடியதன் பயனுகப் பாண்டியன் கூனும் நிமிர்ந்து நின்றசீர் நெடுமாறனுயினன். குலச்சிறையார் குதிரை மேலேறி ஏட்டைத் தொடர்ந்து சென்ருர். பிள்ளையார், அவ்வேடு குலச்சிறையாருக்கு அகப்படுமாறு "வன்னியும் மத்தமும்" என்ற ஏடகத் திருப்பதிகம் பாடினர். குலச்சிறையாரும் ஏட்டினை எடுத்துத் தலைமேல் வைத்து வந்து அரசன் முதலானோர்க்குக் காட்டினர். தொண்டர் எல்லாம் "ஹரஹர" என்று முழங்கினர்.

அரசன் அதனைக் கண்டு, அமைச்சரை நோக்கித் "தோற்ற இவர் முன்னரே பிள்ளையாருக்கு அவரிருந்த மடத்தில் தீவைத்துத் தீங்கு செய்துள்ளார்கள்; இதுபோதும் தோற்றனர். இவர்கள் வாய் மொழிப்படியே இவர்களைக் கழுவிலேற்றிச் செங்கோல் முறையைச் செய்வித்து இனிநிறைவேற்றுக" என்றான். பகை என்பது சிறிதுமில்லாத பிள்ளையார் அது கேட்டனர் "எனக்கு மட்டும் தீங்கு செய்திலர்; சைவர் பலரையும் கொல்ல வேண்டித் திருமடத்திற்குத் தீயிட்டனர். அக்கொலையாளிகளுக்கு இது தகும். செங்கோல் முறையில் நாம் இடையிடுதல் ஆகாது" என வாளா இருந்தனர். அமைச்சரும் அவர்களைக் கழுவிலேற்றினர். அக்கழு மரம் பகைவரது தோல்வி மரமாகும்; சிவனன்றி வேறில்லை என எழுந்த கொடிமரமாகும்; பிள்ளையாருடைய வெற்றி மரமாகும்.

ஈதே திருவருண்மொழித் தேவர் கண்ட கதை. இதனைப் பின்பற்றியே திருவிளையாடற்புராணங்கள் பாடுகின்றன. பின் தொடர்ந்து பாடினாலும் கதையை முழுதும் அவை மாற்றிவிடுகின்றன. அவற்றையும் சிறிது ஆராய்ந்து காண்போம், கதை முழுதும் பெரிய புராணத்தையே பின்தொடர்ந்து போவதால் விரித்து எழுதாது வேற்றுமையை மட்டும் குறித்துப் போவோமாக.

திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் பாடிய வேம்பத்தூரார் என்னும் பெரும்பற்றப் புலியூர் நம்பி வெப்புத் தீர்த்த திரு

விளையாடலிலும் கழுவேற்றிய திருவிளையாடலி-லும் இக்கதையைக் கூறுகின்றார். திருமறைக்-காட்டில் எழுந்தருளியிருந்த சம்பந்தருக்கு மங்-கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருமுகம் அனுப்பினர்.

''அருண்ஞான சம்பந்தர்க் கடிமை யாற்று
வலமானி குலச்சிறை விண்ணப்ப மின்று
பெரியோராற் றிருவுள்ளப் பெருமை கேட்டேன்.
பேசரிய திறத்தமணர் தம்மை முற்றும்
விரைவாக எழுந்தருளி வெல்ல வேண்டும்.
வெண்ணீறும் அஞ்செழுத்தும் விளங்க இங்குப்
பரிவோடும் எழுந்தருளா தொழியின் நாடு
பறிதலைய ராற்சாலப் பழுதாம் அன்றே.''

என்பதே அத்திருமுகம். சம்பந்தர் முன்னதாக எதிரோலை விட்டார்.

கழுமலப் பால னோலை கருணைகூர் மானி யோடு
விழுமிய அமைச்சன் காண்க மேதினி முழுது மெச்சக்
குழுவமண் குண்டர் தம்மைக் கூரிய கழுவிலேற்றி
வழுதிநா ட்டடைய நீறு பரப்பிட வருகின் றேமால்,

ஈதே எதிரோலையில் கண்ட விடை.

சம்பந்தர் வெப்பு நோய் ஒழிக்கத் திருநீறு பூசச் செல்கையில் அமணர்கள் "நீ பகை நாடா-கிய சோணாட்டான். அரசனைக் கொல்ல என்ன மருந்து கொணர்ந்து அதனை நீறெனப் பூசுவை-யோ?" என்று தடுத்தனர் எனப் புதியது மொழிகின்றார், பெரும் பற்றப் புலியூர் நம்பி.

" மண்டழன் மாற்ற வல்லையேல் மாற்று
மற்றுநின் வழிகளைக் கொண்டே

பண்டைநின் கரத்துக் கொண்டநீறு ஆகா ;
பகைமருந் திட்டநீ றின்று
கண்டிடிற் சென்னி மண்டலத் தவன்நீ''
என்றுமுன் கண்டது விலக்க,
முண்டக வதனம் அழகெழச் சிறிது
முறுவல்கொண் டுரைசெய்வார் முனிவர்.

''செந்தமிழ் பயிலும் சுந்தரன் கோயிற்
றிருமடப் பள்ளியுட் கிடக்கு
மந்திர நீற்றை நீங்களே எடுத்து
வரினும்ஆம்'' என்றலும் வெகுண்டு,
''வெந்தநீறு யாங்கள் தொடுவமோ'' என்று
விளம்ப. நம் தொண்டர் ''போய் எடுத்து
வந்திடுக'' என்றார். மிண்டர்கள் அதுவும்
விலக்கினர் 'வழக்கல' என்றே.

''மன்னிய விபூதி கொடுவரு வதற்கு
மனத்திலோர் சூழ்ச்சியும் இல்லீர்.
என்னிது பகர்ந்தீர் ? நீங்களோ நணுகீர்.
எம்முளோர் போகவும் ஒட்டீர்.
புன்னெறி யிலாதோர் தமைவிடும்: நுமக்குப்
பொருந்தினோர் எமக்கும் ஆம்''என்ன
மன்னவன் முறையோர் தம்மைமுன் விடுப்ப
வந்தனர் வெள்ளை நீறள்ளி.

## நோய் ஒழிந்தது.

மன்னுநோக் குபதே சத்தால் வழுவுற உபதேசித் தாங்கு
இன்னருள் சுரந்து நீற்றை இருகரத் தாலும் அள்ளி
வெந்நொடு முன்னும் தொட்டுப் பூசுமுன் வெப்புந் தீர்ந்து
முன்னிமி ராத கூனும் நிமிர்ந்த தம்மூர்க்கர் காண.

என்றபடி "வாழ்க வந்தணர்" என்று பாடும் வரை பொறுத்திராமல் நீறு பட்டவுடனேயே கூனும் நிமிர்ந்ததாம்.

பின்னர்க் கழுவேற்றிய திருவிளையாடல் பாடுகின்றார் வேம்பத்தூரார். எல்லோரும் கூடிச் சமணர்க்கு மாறாகச் சூழ்ச்சி செய்கின்றனராம்.

கன்னன்மொழி மடவாரும் அமைச்ச னாரும்
காழிநகர்ப் பெருமானைத் தனிய ழைத்து
முன்னவில்வார் ''உயர்ந்தசிவ சமயங் குன்றி
முழுநிலமுஞ் சமண்மூடிற் றியாவும் வல்ல
இன்னருள்சேர் சைவசிகா மணியே! வெல்வது
எங்ஙன்? அவர் பலர்; ஒருவர் நாம்; ம கிழ்ந்த
தென்னன்எனின் மன்னர்உளம் அறியொ ணாது
திருவுள்ளம் அறியகிலேம்'' எனப் பணிந்தார்.

இத்தகவுஎன் நவில்கின்றீர்? ''இறைஉண்டு. அஞ்சல்!
ஏகும்''என விடுத்துமடத் தமளி மேவி
நத்தநடு எழுந்துணர்வார் ''புகன்ற தொக்கும்
நாம்ஒருவர் அவர்எண்ணா யிரவர் காணின்
மெத்தியசூழ்ச் சியும்வல் லவர்கள் தம்மை
வெல்வதற்குப் பல்புகழ்க்கு நல்ல சொக்கன்
பத்தர்கள்பத் தனைஅல்லால் துணைவே றில்லை.
பரசிஅவன் திருவுள்ளம் அறிவோம்'' என்றே.

புறப்பட்டாராம். வெப்பொழிப்புதற்கு முன்னரே திருவுள்ளம் அறியாது, அமைச்சரும் அரசியும் அஞ்சிய போது தாம் அஞ்சாதவர் போல வெளிக்குக் காட்டி உறுதி கூறிப் பின்னர் நள்ளிருளில் தூக்கங் கொள்ளாராய் நடுங்கிக் காலையானதும் இறைவனது திருவுள்ளம் அறியச் சென்றாராம்.

சோதி வேதியர் துணைசெயு மவரொடும் கூடி,
ஏதம் நீங்கிட விடியுமுன் ஆலயத் தெய்தி,
வேத வேள்விஎன் றெடுத்திசை மேதகு பதிகம்
ஓதும் எல்லைஓம் ஓம்என ஓங்கிய தோர்சொல்.

அனைத்தும் வல்லவன் அருட்டிரு வாக்கெனத் தேறினர் சம்பந்தர்.

கலக வெஞ்சமண் கையரைக் களைந்திடா தொழியி
னிலகு சைவ சித்தாந்தம்முன் இறந்திடும்; இறந்தால்
உலகில் வேதமும் வேள்வியும் அழிந்திடும்; அழிந்தால்,
உலக வேந்தனும் மாரியும் உலகமும் கெடுமால்.

ஐயம் இல்லை என்றனர். அரசனே தீமைக்கும் நன்மைக்கும் உரியான். அவனிடம் சென்று சொல்வோம் எனச்சென்றனர். அவனும் உடன்பட்டான்.

ஐய மில்லென அறைந்திட ஆங்கவர் விரைந்து
வைய மன்னனே வருநலந் தீங்கினுக் குரியான்,
துய்ய காரிய மவன்வயிற் சொல்வமென் றடைந்து
பைய ஓதுமுன் வழுதியும் பழுதிலை என்றான்.

பின்ன மாநெறிச் சமணரைப் பெருந்தண்டஞ் செய்வான்,
கன்னி மன்னவன் இயைந்தது கேட்டலும் கடுகி,
தென்னன் முன்னரின் முன்னையிற் சிறப்பொடும் அடைந்தே,
மன்னு மாசனத் திருந்தனர் வைதிகத் தலைவர்.

என்றபடி அரசன் உடன்படவே முன்னினும் மகிழ்ந்தாராம் சம்பந்தர். அவர்களும் வந்தனர்.

படுவழி நினக்கொ ருக்காற் பலித்தது கொண்டா லித்தாய்,
விடுவிடு காகஞ் செல்லப் பனைக்கனி விழுந்த தொக்கும்,
கடைவழி இதுகொண் டோநீ சாதிக்க வந்தாய் கற்றுப்
புடவியி லெம்மை வெல்வா ரில்லைகாண் புகலுங் காலே.

என்றனர். அவர்கள் தீவழக்கிலும் தோற்ற–னர். ஆனால், புனல் வழக்கு வேண்டினர். "அதி–லும் தோற்றால் அறிவுடையாங்கள் எல்லாம் இன்றுனக்கே அடிமையாகக் கடவேம்" எனச் சூள் மொழிந்தனர். சம்பந்தரோ,

" அடிமையில் ஆசை யில்லை இன்றுநீர் அவையில் சொன்ன
படிபுகழ் வாதுஞ் சொக்கன் பரிவினல் வென்றே மாயிற்,
கடிமையி னும்மை முற்றுங் கழுநுதி ஏற்று தற்கு
முடியவே ஆசை என்றார் ; இயைந்தனர் வினையான் மூடர்.

குலச்சிறையார் முன்னரே செய்தமைத்த கழுவினைக் கொண்டு வந்தார்.

உளப்படு மமைச்ச ரைரை உயிர்க்கழு வினவா முன்னர்
அளப்பருந் தயாவு கூர்ந்திங் கையரே கையர் தம்மைத்
களத்தள வேற்றற் கென்றே கருதியான் முன்னஞ் சேத்திக்
குளத்துற விட்டு வைத்தே னருளினல் எனக்கொ ணர்ந்தார்.

ஆங்கது கண்டு சால அதிசய முற்று மற்றை
பாங்கில்தீ வினையான் மூடும் பாதகர்க் கருள்சு ரந்தே
"ஓங்குநன் னலங்கள் கண்டும் உணர்விலா மூர்க்கர் நீங்கள்
ஈங்கிதற் கியைந்ததென்ன காரியமெடுத்தற் கின்றே."

" நாணிலீர் மன்னன் முன்ன நல்லசொல் கின்றேன் கண்டி
பூணும்வெண் ணீறு பூசும்; போற்றிஅஞ் செழுத்தை ஓதும்,
காணென முத்தி இன்பம் காணலாம்" என்னக் கேட்ட,
கோணுறு சமணர் எண்ண யிர வரும் கொதித்து எழுந்தார்.

புனல் வழக்கிலும் தோற்றனர்.

நேசமார் ஞான வேந்தர் "நெடுங்கழுத் தரித்த போதே
ஆசற இருந்தீர் இன்னும் அறைகுவம் மடிதல் வேண்டா
பூசுமின் இனிய நீற்றைப் போற்றுமின் ஈசன் தாளை
மாசற நீரும் நாமும் வாழலாங் கூடி" என்றார்.

''முன்னையூழ் வினையால் வென்ற முனிவ!கேள், மடிவதல்லாற்
சொன்ன வெஞ்சாம்பல், சீ! சீ! தொடுவமோ''என்று கொண்டு
நன்மைகள் சொல்லா நின்ற ஞானசம் பந்தர் தம்மைப்
புன்மைகள் சொல்லக் கண்டு பொறுத்திலர் பூதித் தொண்டர்;

எல்லோரையும் வலியக் கழுவேற்றி வாட்டினர்.

''கையர் தங்களைக் களையுமின் களையுமின்'' எனவே
துய்ய மன்னவன் சொல்லுமுன் கறுவினர் தொண்டர்
பொய்செய் பாதகக் குழுவெலாந் தொலைந்திமைப் பொழுதில்
வெய்ய நீள்கழு வேறினர் மெலிந்துயிர் பதைப்ப.

கழுவேறியதைப் புனைந்துரைக்கின்றார் பெரும்பற்ற புலியூர் நம்பி.

புகல்வ தேதெதி ரிருந்திடுங் குதவழிப் புகுந்து
பகைகொண் முட்டுடைப் பட்டினி வயிற்றிடைக் குளித்துத்
தகவில் வஞ்சக நெஞ்சகந் தனில்நிணம் அருந்தி
இகழும் வாய்முகங் காட்டிட ஏறினர் கழுக்கள்.

பவமுறு கையர் வெய்ய பாறுசெங் குடர்பி டுங்கச்
சிவையவை சூழக் காகம் நிழலிடத் திரண்டோர் தாளிற்
தவமுயல் அலகை என்னச் சாலவே வாய்அங் காந்து
கவடிவெண் பற்கள் காட்டி இருந்தனர் கழுக்கள் தோறும்.

(பவம் – பிறவி; உறு – அடையும்; கையர் – தீயர்; சிவை – நரி; அலகை–பேய்; கவடி வெண் பற்கள் – பலகறை போன்ற வெண்பற்கள்).

என்று நகையாடுகின்றார் புலவர். சில சமணர்கள் உயிர் தப்பியோடச் செய்த சூழ்ச்சிகள் நகை ஊட்டுகின்றன.

சாணகம் பூசி யேடா சுட்டிடத் தரியேம் என்பார்,
கோணில் கன்றெடுத்து நீறு தருந்திருக் கோயில் என்பார்,
காணநீ றன்றி வெள்ளை கண்டன அணிவா ராகி,
வீணழிந் தொழிந்த கையர் விலாவொடி யாக்கி ஞரால்.

சம்பந்தர் வாதவாரணம் என்ற பேர் பெற்றூர்; அவ்விடமே கழுவர் படைவீடு எனப் பெயர் பெற்றது. ஈதே வேம்பத்தூரார் கண்ட கழுவேற்றிய கதை.

யீமநாத பண்டிதர் பாடியகடம்பவன புராணத்தில் உள்ள இலீலா சங்கிரக அத்தியாயத்திலும் இக்கதை சுருக்கமாகக் கூறப்படுகின்றது.

புகலியினில் வைதிக வாரணமென்றியாரும்
போற்றிய சம்பந்தர் என்ரூர் புதல்வர் தோன்றித்
தகவுமையாள் திருமுலைப்பா லமுதம் உண்டு
தந்தருள் ஞானம்பெற்று மதுரைமேவிப்
பகவனருளால் விட்ட மடத்திலிட்ட படுதழன்
மாறனுக்கே வித்தணியா வெப்புந்
திகையமணர் காணவொழித் தொழியாக் கூனுந்
தீரநிமிர்த்தார் புனிதத் திருவெண்ணீற்றால்,

திரண்டமணர் எரியினினிடை எழுதியிட்டால்
திறல்வேகா ஏடுடையார் வென்ருரென்று
முரண்டருவா துரைத்தேறியழல வன்னி
முடுகி மிசையேடெவையும் வேவ வேவா
தாண்டருநல்லே டெடுத்தார் தம்மோடின்னும்
ஆற்றிலிட வாவென்ருற் றிட்டுத் தங்கள்
காண்டரும் ஏடாழி செலக்காழியாரே
டெதிரேற ஏறினர் கழுவாய் மீது.

என்று பாடுகின்றது. இப்பாடல் கழுவேற்றிய திருவிளையாடலே கூறுகின்றது.

பரஞ்சோதியார், பாண்டியன் சுரந்தீர்த்த படலமும், சமணரைக் கழுவேற்றிய படலமும் பாடுகின்றார். திருவால வாயுடையார் திருவிளையாடலைப் பெரிதும் பின்பற்றிச் செல்கின்றது இவர் கதை.

பாண்டியன் சோழனை வென்றபோது சோழன் அறிவில் மிக்க குலச்சிறையையும் அழகில் மிக்க தன் பெண்ணையும் காணிக்கையாகக் கொடுத்தான்; அன்னோர் அமைச்சனும் அரசியும் ஆயினர். பாண்டியன் சமணனாகவே, இந்த இருவரும் சொக்கனைத் தொழுது "சிவநெறி என்று தழைப்பது?" என வேண்டி நிற்கையில் சோணாட்டில் தில்லையிலிருந்து சொக்கனைத் தொழவந்த மறையவர் ஒருவர், சம்பந்தர் பெருமையினையும் அவர் மறைக்காட்டிற்கு வந்திருத்தலையும் விளங்கக்கூறினார். அதன்மேல் அவ்விருவரும்சம்பந்தர்க்குத்திருமுகம் அனுப்பினர். அவரும் வந்தனர். பலர் சூழப் பேருலா வருகையில் அவரைச் சமணர்கள் தடுத்தனர். "மத்த வேழம் தாமரை நூலாற் கட்டத் தடை படவற்றோ!" வழக்காட இறைவனிடம் விடை கொண்டு சென்று, சம்பந்தர் வெப்ப நோய் ஒழித்தார். பின்னர், "தீயரை ஒறுத்தல் செய்யத் திருவுளம் செய்தி" என இறைவனை வேண்டினார்.

**வெம்மத வேழங்காய்ந்த விடையவர் விசும்பிற் சொர்வார்**
**"எம்மனோ ராவீர்நுங்கட் கிசைந்ததே எமக்கும் வேண்டும்**
**சம்மத மானால் வெல்லத் தக்கவ ராக நீரே**
**அம்மதம் உடையார் தோற்கத் தக்கவாராக" என்றே,**

"அம்மொழி தேறினீர்போய் இறைமகன் அவையத் தேறிச்
செம்மையிலாரை வாது செய்திர்நீர் அனையார் தோற்று
வெம்முனைக் கழுவிலேறி விளிகுவர்" என்னக் கேட்டு
மைம்மலி களத்தான் மைந்தர் தொழுதுதம் மடத்திற்போனார்.

சம்பந்தரும், அமைச்சரும், அரசியும் அரசனும் சூழ்ச்சி செய்தனர். பெண்டு பிள்ளைகள் சமணரைப் பழித்தனர். "திருநீற்றுக்குத் தோற்றீரே" என எள்ளி நகையாடினர். வழக்கிட எழுந்தனர் சமணர். "தீக்கனுக் கண்டோம்,செல்லாதேயும்" எனத் தடுத்தனர் பெண்கள். கேளாராய் அரசமன்றம் வந்தடைந்தனர் அமணர்; தீ வழக்கில் தோற்றனர்; புனல் வழக்கு வேண்டினர்; தோற்றால் கழுவேறவும் உடன்பட்டனர்; உடனே கழுக்கள் செய்யப்பட்டன.

ஊழின் வலியாலமணர் அதற்கு உடன்பட்டார்க ளஃதறிந்து
சூழியானைக் குலச்சிறையுந் தச்சர் பலரைத் தொகுவித்துக்
காழினெடிய பழுமரத்திற் சூலவடிவாக் கழு நிறுவிப்
பாழி நெடிய தோள்வேந்தன் முன்னே கொடுபோய் பரப்பினர்.

சம்பந்தர் அவர்களைச் சைவராய் உய்யுமாறு வேண்டினர். அது கேட்டு அவர்கள் கொதித்து உரைத்தனர்.

முன்பு தீயில் வென்றனமே நீரில் யாதாய் முடியுமென
வன்பு பேசியிணக்கி அகல நினைந்தாய் அல்லதை நீ
பின்புவாது செயத் துணியும் பெற்றியுரைத்தாய் அல்லை புலால்
என்பு பூணியடிமை அடைந்த ஏழாய் போதி எனமறுத்தார்.

புனல் வழக்கிலும் தோற்றனர் சமணர். சம்பந்தர்,

''இன்னம் அறத்தா றிசைக்கின்றேம். நீரேன் வாளா
இறக்கின்றீர் ?
அன்னையனையான் எம்மிறைவன் அவனுக்காளாய்
உய்ம்மின்கள்''
என்ன ''ஏட சிறியாய் ! நீ எவ்வாறெங்கட் கடாத மொழி
சொன்னது'' என மானமுளார் கழுவிலேறத் தொடங்கினர்.

மதத்தினின் மானமிக்கார் தாங்களே வலிய ஏறிப்
பதைத்திட இருந்தார். ஏனைப்பறிதலையரைச் சைவ
விதத்தினு லொழுக்கம் பூண்ட வேடத்தார் பற்றிப் பற்றிச்
சிதைத் திடர் செய் தேற்றிட்டார் திரிதலைக் கழுக்கோல்
தன்னில்.

வழி வழி வருமாணுக்கர் சாதற்கு வருந்தி நெஞ்சம்
அழிபவர் திருநீறிட்டார் அது கிட்டாதயர்வர் ஆவின்
இழிவில் கோமயத்தை அள்ளிப் பூசினர். இதுவுங் கிட்டா
தொழிபவர் ஆவின் கன்றைத் தோளிலிட்டுயிரைப் பெற்றார்.

கூறிட்ட மூன்றுங் கிட்டாதயர்பவர் குற்றந்தீர
நீறிட்டார் நெற்றியோடு நீருடை கோமயத்தின்
சேறிட்டார் நெற்றியோடு நெற்றியைச் செறியத் தாக்கி
மாறிட்ட பாசந்தன்னை மறித்திட்டுப் பிறப்பை வெல்வார்.

மற்றிவர் தம்மை யூற்றம் செய்திலர் மடிந்தோர் யாரும்
சுற்றிய சேனங்காக நரிகள் நாய் தொடர்ந்து கௌவிப்
பற்றி நின்றீர்த்துத் தின்னக் கிடந்தனர்.
ஈதே பரஞ்சோதியார் கண்ட கதை.

இக்கதைகள் ஒன்றோடொன்று முரண்பட்டு நிற்கின்றன. வெப்பு ஒழித்தல், தீயிலேடிடல், நீரிலேடிடல் என்ற மூன்றையும் ஒன்றாகவைத்து எண்ணி, இவ்வழக்குகளாட இறைவனருளை வேண்டி நின்றதாகப் பெரிய புராணம் பாடு-

கின்றது. பெரும்பற்ற புலியூர் நம்பியோ, அனல் வழக்கும் புனல் வழக்குமே வழக்காகும் என எண்ணி வெப்பொழித்த பின்னரே, சம்பந்தர் இறைவனருளை வேண்டி விடை கேட்பதாகப் பாடுகின்றார். "வாது செயத் திருவுள்ளமே" என்ற பதிகங்கள் இரண்டுண்மையால், ஒன்று வெப்பு ஒழிப்பதன் முன் பாடியது என்றும், ஒன்று அதன்பின் பாடியதென்றும் குறிக்கின்றார் பரஞ்சோதியார். சம்பந்தர் பெருமையை, அரசியும் அமைச்சனும், மறையோனால் அறிதல் முதலிய பல வேற்றுமைகளும் காணக்கிடக்கின்றன. ஆனால், இக்கதையின் உயிர்நிலையான கழு ஏற்றிய செய்தியைப் பற்றிய வேற்றுமைகளே இங்குக் குறித்துரைக்கத் தக்கன. இதனையும் ஆராயும் போதுதான் சேக்கிழாரின் பெருமை புலனாகிறது. கழுவேறிய கதை ஒரு கொலைக் கதை. அதனைக் கற்போர் மனம் நோகாதவாறு எங்ஙனம் கூறுவது!

இந்தச் சிக்கலான முடியை எளிதில் அவிழ்த்தருள்கின்றார் சேக்கிழார். நம்பியாண்டார் நம்பி கூறியபடி கழுவேற்றியவர் சம்பந்தரே ஆவர். பெரும்பற்றப் புலியூர் நம்பியும் அவரையே அப்பணிக்குத் தலைவராக்குகின்றார்; கழுவேற்றும் எண்ணம் சம்பந்தர்க்கே முதன் முதல் தோன்றியதெனப் பாடுகின்றார். அரசிக்கும் அமைச்சருக்கும் அனுப்பிய விடையில், கழுவேற்றி விடுவதாக உறுதி கூறுகின்றாரன்றோ சம்பந்தர்? அது நோக்கிக் குலச்சிறையார் கழுமரங்களை

முன் ஏற்பாடாக அமைத்து வைத்தார். "புனல் வழக்கில் தோற்ருல் கழுவேற வேண்டும்" எனச் சம்பந்தரே வேண்டினர். அவர்கள் அதற்கு உடன் பட்டதும் குலச்சிறையார் அக்கழுமரங்களைச் சமணர்கள் முன்னுகக் கொணர்ந்து நிரல் பட நிறைத்து வைத்தார். மன்னவன் அமணர்களை ஒறுத்தற்கு ஒருப்பட்டான் என அறிந்து முன்னைய மகிழ்ச்சியினும் பெரிதும் மகிழ்ந்து திகழ்ந்தாராம் சம்பந்தர். பின்னர்த் தொண்டர்கள் கொலை பழுத்த நெஞ்சினராய் அமணர்களை ஈர்த்து ஈர்த்துக் கழுவிடை நிரைத்தனராம். இக்கதையில் சம்பந்தர் முதலியோரது கொலைச் சூழ்ச்சியே நன்கு விளங்குகின்றது. பரஞ்சோதி முனிவரோ கழுவேற்றும் எண்ணம் சிவபெருமானுக்கே முதன் முதல் தோன்றியதாகப் பாடுகின்ருர்; ''வாதுசெயத் திருவுள்ளமே'' என்று விடை கேட்டபோது சமணர் "கழுவேறுவர்" என்று ஆண்டவன் உறுதிகூறி விடை கொடுத்தனராம். மானமுள்ள அமணர் கழுவேறினர். ஈர்த்து ஈர்த்துக் கழுவேற்றிய சைவரைப் பழிப்பது போல அவர்களை "வேடத்தார்" எனப் பரஞ்சோதியார் தம்மையறியாது புனைந்துரைத்தல் காண்க.

இக்கதையின்படி தமது கொள்கைக்காக உயிர் துறந்த சமணர்களே பெரியோராகின்றனர். கழுவேறியதைப் பல படியாகப் புனைந்து உரைக்கின்றனர், இரு திருவிளையாடற் புராணமுடையாரும். ஆனல் சேக்கிழாரோ, கொலைக்

கதை பாடவரவில்லை. ஆகையால், கழுவேற்றிய-தைப் பல படியாகப் புனைந்துரையார். தம் தலைவராகிய சம்பந்தரையும் தம் இறைவனாகிய கடவுளையும் இழித்துரைக்கும் வகையில் அவர் கதையை எழுதார். சமணர்மீதே அவர் பழியைச் சுமத்துகின்றார். புனல் வழக்கிடச் சம்பந்தரைச் சமணர் அழைத்தபோது குலச்சிறையார் "இவ்-வழக்காட்டத்திற்குப் பணயம் யாதோ?" எனக் கேட்கின்றார். வெகுளியும் பொறாமையும் கொண்ட சமணர், தாம் வெல்வதே துணிவென மருண்டு, சம்பந்தரே தோற்பர் என முடிவு-கட்டுகின்றனர். பொறாமையாலும், வெகுளியா-லும் தீமூட்டிய அமணர் அவரைக் கொல்லவே எண்ணுகின்றனர். தமக்குத் தாமே கேடு சூழ்-தலை மறந்து "தோற்றால் கழு ஏறுவோம்" என்கின்றார்கள். சம்பந்தர் தோற்றாலும் கழு-வேற வேண்டுமன்றோ?

அங்கது கேட்டு நின்ற அமணரும் அவர்மேற் சென்ற
பொங்கிய வெகுளி கூரப் பொறாமை காரணமே யாகத்
தங்கள்வாய் சோர்ந்து தாமே தனிவாதில் அழிந்தோ மாகில்
வெங்கழு ஏற்று வான்இவ் வேந்தனே என்று சொன்னார்.

என வருதல் காண்க. 'பொறாமை காரணமே-யாக' என்பது நோக்குக; உய்த்துணர்க. "மாற்றானுக்கு ஒரு கண் யாதேனும் ஒரு வகை யால் போகுமென்பதற்குச் சிறிது இடமிருப்பி-னும், எனது இரு கண்ணையும் இழக்க முன் வருகிறேன்," என்று கேட்டை விலைக்கு வாங்கிய பொறாமையாளனின் கதையே ஈதாம். கழு

ஏற்றும் எண்ணம் பகைவருக்கே உண்டாகிறது. அவர்களே கேடு சூழ்கிறார்கள். "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழியை இக் கதைமெய்ப்பிப்பதாகப் பாடுகின்றார்சேக்கிழார். பின்னரும், வழக்கில் தோற்றதற்காகப் பகைவர் கழு ஏற்றப்படவில்லை. பல மக்களைத் தீயில் பொறித்தெடுத்தற்குத் தீயிட்டுக் கொலைப்பழி கொண்டவர்களாதலின், செங்கோன் முறைப்படி தீ வைப்போர்க்கு ஏற்பட்ட கழுமரமே அவர்களுக்கு இடமாயிற்று. அவர்களே இந்த முறையை விரும்பியபடியால், விரும்பியபடி இறக்க, இறப்போர்க்கு அரசன் உதவ வேண்டும் அன்றோ ? அவ்வளவிற்கே அவர்கள் சூளுரையை அரசன் பயன்படுத்திக் கொள்கின்றான். இதுவே சேக்கிழார் கதை.

**மன்னவன் மாறன் கண்டு, மந்திரி யாரை நோக்கித்**
**துன்னிய வாதி லொட்டித் தோற்ற இச்சமணர் தாங்கள்**
**முன்னமே பிள்ளை யார்பால் அனுசிதம் முற்றச் செய்தார்**
**கொன்னுனைக் கழுவி லேற்றி முறைசெய்க என்று கூற.**

என வருதல் காண்க. 'முறை செய்க' என்று கூறியதன் பொருள் ஆழத்தை நோக்குக. தமது மறை மொழியால் தீ மூட்டுவதாக அவர்களே அரசனிடம் சொல்லினர். மறை மொழியால் ஒன்றையும் செய்து முடிக்கும் ஆற்றல் இவர்களுக்கு இல்லை என்பது புனல் வழக்காலும், அனல் வழக்காலும் ஏற்பட்டது. ஆதலின், இவர்கள் தீயிட்டதும் மறை மொழியாலன்று ; தீயாலேயே என்பதும் தெளிவாகியது.

இம்முடிவிற்கேற்ப முறை செய்யவேண்டாவா? மற்றைப் புராணங்களில் சம்பந்தர் அவர்களைச் சைவராமாறு வேண்டிக் கொண்டார் என்பதும், சைவராயினுர் கழுவேற வேண்டா என எடுத்துரைத்தார் என்பதும் காணப்படுகின்றன. அவ்வாறு சேக்கிழார் ஒன்றும் கூறவில்லை. குற்றம் செய்தது புலனுனல், திருநீறு பூசிப் பிழைக்க முடியுமோ? அரசன் வெருவந்த செய்யாத வரையில் அவன் செங்கோலனுவன். செங்கோல் நெறி கடவாத போது, சம்பந்தர் எவ்வாறு இடையிட்டுச் செங்கோல் நெறியைத் திரிக்க முடியும்?

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

என்றும்,

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனெடு நேர்

என்றும் வள்ளுவர் கூறுதல் காண்க. பின் கூறிய குறளுக்குப் பரிமேலழகர் "கொடியவர் என்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவார் என்ற இவர் முதலாயினேரை. இவரை வடநூலார் ஆததாயிகள் என்ப. இப்பெற்றியோரைக் கண்ணேடிக் கொல்லாவழிப் புற்களைக்கு அஞ்சாநின்ற பைங்கூழ் போன்று நலிவு பல எய்தி உலகு இடர்ப்படுதலின் கோறலும் அரசர்க்குச்

சாதி தருமம் என்பதாயிற்று" என்று விரிவுரை எழுதுகின்றார்.

ஆதலின், அரசன் செய்வது செங்கோன்முறையாயது. அவன் செய்கையும் மிகையிலா வேந்தன் செய்கையாயிற்று. தன்னை ஒருவன் பழித்தமையையும் ஒரு குற்றம் எனப்பாராட்டாமல் இருப்பது அறமாகலாம். ஆனால், பிறர் பலருக்கு ஊறு செய்தாரது குற்றத்தைக் களையாமல் இருத்தல் குற்றமே யாகும். திருவள்ளுவரைப் பற்றி வழங்கி வருகின்ற கதை ஒன்று இதனை வற்புறுத்துகின்றது. திருக்குறளை ஓதி உணர்ந்த சிறுவன், நாயனார் எழுதியபடி ஒழுகுபவரா என்பதைக் காண வேண்டி ஒரு நாள் அவர் நெய்து கொணர்ந்த ஆடையின் விலையைக் கேட்டான். அவ்விலையறிந்து பின்னர்த் துணியைத் துண்டு துண்டாகக் கிழித்து விலை கேட்டானும். வள்ளுவனார் பொறுத்திருந்தார். மறுநாள் அச்சிறுவன் நாயனாரின் மனைவியாரை வலிந்து சண்டைக்கு இழுத்துத் தொந்தரவு செய்வது கண்டு நாயனார் அவனை நையப்புடைத்தனராம். சிறுவன்,

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

என்று இதற்கோ பாடினீர்?" என்று எள்ளி நகையாடினான். வள்ளுவனார்,

"செய்தக்க வல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

என்ற குறளைப் படித்ததில்லையோ? தன்னை ஒறுத்தலைப் பொறுக்கலாம். பிறரை ஒறுத்தலை எவ்வாறு பொறுப்பது?" என்றனராம். சிறுவன் நாணித் தலைகுனிந்து சென்றானும்.

ஆகையால் சம்பந்தர், பகைவர்கள் தமக்கிழைத்த தீமையைப் பாராட்டாமல் இருக்கலாம். பிறர்க்கு அவர்கள் புரிந்த தீமையை எங்ஙனம் பொறுத்தல் கூடும்? ஆதலின், சம்பந்தர் பகைவர்மேல் பகையில்லாமல் இருந்தும், அரசன் கட்டளையைக் கேட்ட பின்னரும் வாளா இருந்தனர் சேக்கிழார். கதைப்போக்கு இது.

புகலியில் வந்த ஞானப் புங்கவர் அதனைக் கேட்டும்
இகலிலர் எனினும் சைவர் இருந்துவாழ் மடத்திற் றீங்கு
தகவிலாச் சமணர் செய்த தன்மையாற் சாலு மென்ற
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடா திருந்த வேலை.

என வருதல் காண்க.

திருவருண் மொழித் தேவர் பேராராய்ச்சியாளர்; அருள் பழுத்த நெஞ்சினர்; சம்பந்தரது உள்ள நிலையை நன்கு அறிந்தவர்; "இகலிலர்" என்று எடுத்துக்காட்டுகின்றனர் அன்றோ? திருமுறைகளை நன்கு எழுத்தெண்ணி ஓதிய பெரியாரன்றோ இவர்? வெப்பொழித்தற்கும் திருமுறையிலேயே அகச்சான்றுகள் உள்ளன. ஆதலின், அவற்றை விரித்துரைத்தார். தமக்கு முன்வந்த நம்பியாண்டார் நம்பி கழுவேற்றிய கதையைக் குறித்து வைத்தமையால் அதனையும் கூறவேண்டியதாயிற்று.

ஆனால், அவர் திருவருள் திறத்தால் அக்கதை-யைச் சம்பந்தரது திருவுளக் கிடைக்குத் தக்க-வாறு மாற்றிப் பாடுகின்றார். ஈதே அவரது திரு-வருட்சிறப்பு. அவ்வாறன்றி ஒவ்வொரு பாடலை-யும் இறைவனே பாடினான் எனக்கொண்டால் சேக்கிழாரை இழித்துரைப்பதாகும். சேக்-கிழாரே திருஞான சம்பந்தர் புராணத்தின் இறுதியில்,

> " அருந்தமிழாகரர் சரிதை அடியேனுக்கவர் பாதம்
> தரும்பரிசால் அறிந்தபடி துதி செய்தேன்."

எனப்பாடுதல் காண்க.

இவ்வாறு சேக்கிழார் பாடுவதற்கு முன்-னோர் காட்டிய வழியும் உண்டு. சம்பந்தர் சமணரோடு வாதிட்டதனை ஒட்டக்கூத்தர் தமது தக்கயாகப் பரணியுள் பாடியுள்ளார். அதனையும் காணல் வேண்டும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் சைவ அடி-யார்களுடைய வரலாற்றில் தென்னாட்டினர்க்-குப் பெரியதோர் ஈடுபாடு தோன்றியது. இந்த அடியார்களெல்லாம் தமிழ் நாட்டிற் பிறந்தவர்-கள். திருத்தொண்டத் தொகையில் இவர்கள் பெயரை யெல்லாம் சுந்தரர் கோவை படுத்திப் பாடியுள்ளார். அடியார்களின் வாழ்க்கையைச் சுருக்கமாக நம்பியாண்டார் நம்பி திருத்தொண்-டத் திருவந்தாதியில் குறித்துள்ளார். இக் குறிப்-புக்களை விரித்துப் பெரிய வரலாறாகக் கேட்க மக்கள் மனம் இந்த நூற்றாண்டில் துடி துடித்-

தது எனலாம். அடியார்கள் வரலாற்றுக் குறிப்-புக்களை இரண்டாம் இராசராசன் கட்டிய தாரா சுரக்கோயில் (ராஜ ராஜபுரம்) கல்லில் செதுக்கி-யிருக்கக் காண்கிறோம். இந்த இராசராசபுரி வாழும் பொதுமகளிர்க்கே ஒட்டக் கூத்தர் தம் தக்க யாகப் பரணியில் கடைதிறப்புப் பாடுகிறார். இதன் பின்னரே சேக்கிழார் இந்த 12-ஆம் நூற்-றாண்டின் பிற்பகுதியில் பெரிய புராணம் பாடி-னார் எனலாம். பெரிய புராணம் பாடியபின் அதனினும் வேறாகக் கதையை உணர்ந்து இராச ராசபுரத்திற் கல்லிற் செதுக்கியிருப்-பார்களென்று கருதுவதற்கில்லை. ஆதலின் அவ-ருக்கும் முந்தியது அது எனலாம். அடியார்கள் வரலாறு தெலுங்கு நாட்டிலும், கன்னட நாட்டி-லும் சென்று வீரசைவப் பெருமக்கள் உள்-ளத்தையும் மிகமிகக் கவர்ந்தது.

அடியார் வரலாறு ஒட்டக்கூத்தர் உள்ளத்-தையும் கவர்ந்திருத்தல் வேண்டும். இந்த அடி-யார்களில் ஞானசம்பந்தரும் ஒருவர். ஞானசம்-பந்தர் பாலுண்ட கதை எல்லோர் நினைவுக்கும் வரும். சங்கரரும் இதனையே நினைத்துப் பாடு-கிறார். உமையம்மையின் பாலையுண்பவர் யாராக இருக்கக் கூடும்? சிவபெருமானின் பிள்ளை தானே உமையம்மையின் பாலை உண்ணக்-கூடும்? அதிலும் இளையபிள்ளையாகவே இருத்தல் வேண்டும். எனவே, ஒட்டக் கூத்தர் ஞான சம்-பந்தரை முருகனென்றே கருதுகிறார். பரணியில் காளி, கோயிலில் வீற்றிருக்கிறாள்; பாம்பணையின்

மேல் படுத்திருக்கிருள். கடவுள் மகளிர் வருகின்றனர். காளி கலைமகளை நோக்கி, "என் மருமகள் வள்ளி வதுவை மனமகிழ் பிள்ளை முருகன் மதுரையில் வெல்லும் இனியதொருகதை சொல்லு" என்று அக்கதையில் ஈடுபட்டு விரும்பிக் கேட்கிருள். "இந்தக்கதை அமணர் கழுமிசை கொள்ளும் கதை" என்று கூறித் தொடங்குகிருள் கலைமகள். இதற்குப் பொருளெழுதிய பழைய உரையாசிரியர், "கழுமிசை கொள்கையாவது யானைமேல் கொண்டார் என்பது போல உயிர்க்கழு ஏறுகை. இதுதான் அமணர் கழுவைத்தொத்தப் பிள்ளையார் கொல்லாதே விட்டருளினுரென்னுங் கதை. "அமணர்தாம் கழுவேறுதற்குக் காரணம் பொய் சொல்லா விரதமென வுணர்க" என்று எழுதுகிருர்.

இது ஒரு புதிய கோணத்திலிருந்து காணும் காட்சி. ஆதலின், இதனைத் தொடர்ந்து சென்று காண்போம். சீகாழியிலிருந்து மதுரைக்குச் செல்கின்றுர் ஞானசம்பந்தர்; அதன் மதிலுக்குப் புறம்பாக ஒரு மடத்தில் தங்குகிருர். அம்மடத்தை அமணர்கள் கொளுத்துகின்றுர்கள். அந்த நெருப்பு அரசனைச் சுடத் "திருவாய் மலர்ந்தது பிள்ளையே." உரையாசிரியர் இதற்கொரு காரணங் கூறுகிருர். பின்னே வந்தவர்கள் இக்கதையை எவ்வாறு உள்ளத்தே கொண்டார்கள் என்பதற்கு இந்த உரையாசிரியர் குறிப்பே சான்ருகும். "அமணர் நிற்க அரசர் மேலே நெருப்பு ஏவினது இராசாக்கினை இல்லையோவென

நினைத்து இராசாவிற்குணர்த்த அக்கினிதேவனை ஏவினபடியென வுணர்க," என்பது அக்குறிப்பு.

அந்த நெருப்புப் பாண்டியனுயிரைக் கொள்ளை கொண்டு உடலம் கிளர்ந்து கொதிப்ப வந்து கொளுத்துகிறது. பாண்டியனுக்கு வேண்டிய அமணர்கள் ஏவின எந்திரங்களும் மந்திரங்களும் பயன்படவில்லை. பாண்டியனுடைய இரண்டு கண் போன்றவர்கள் அவன் மனைவியும் அவன் அமைச்சரும். அவர்கள் அரசனை விட்டு விலகவேயில்லை. பிள்ளையாரை அழைப்போமாயின் இது நல்லகாலமாம் என்று எண்ணுகின்றார் அதிகாரியாகிய குலச்சிறையார்; வைதிக ராச சிங்கமான பிள்ளையார் இருந்த இடத்திற்குச் சென்று முறையிடுகிறார். முத்துப் பல்லக்கில் ஏறி முத்துக் குடைக்கீழ் வருகின்றது வைதிக வாரணம். பிள்ளையார் எதிரே, "என் காதலர் எம்பெருமான் இவனுக்கிதுவோ தகவு" என்று புலம்புகிறார் பாண்டிமா தேவியார்.

> "மாமான்மர பிற்பகன் மண்டிலமொத்
> தெரிமண்டின னென்னு மகீபதிநின்
> கோமான்மர பிற்சசி மண்டிலநேர்
> குளிரும்படி காணுதி கோமளமே"

என்று உறுதி கூறுகின்றார் சம்பந்தர்.

இது கேட்டு மகிழ்கிறார் பாண்டிமாதேவியார். குலச்சிறையாரும் அம்மையாரும் பாண்டியனருகே ஒரு பீடிகை யிட்டுப் பிள்ளையாரை "இனிதேறி இருந்தருள் செய்க" என வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

"வருவாஞெரு சோழிய வைதிகனும்
வந்தாலிவன் மாளிகை வாயில்தனில்
வெருவாது புகுந்து தொடப்பெறுமோ
மீனச்செழி யன்திரு மேனியையே."

"தண்ணூர்மதி யக்கவி கைச்செழியன்
தனிமந்திரி காண்முனி புங்கவர்ஓர்
எண்ணுயிர வர்க்கும் விடாதவெதுப்
பிவனுல்விடு மென்ப திழித்தகவே."

என்று சீறிவிழுகின்றூர்கள் அமணர்கள். இங்கே உரையாசிரியர் எழுதுங் குறிப்புச்சுவையுள்ளது.

"இதிற் சோழிய வைதிகனென்றது பாண்டிய நாட்டினரைப் பகைத்த நாட்டினன் என்றும் யாகம் பண்ணுபவனென்றும் கூறிய–வாறு. அமணர் தாங்கள் பெரியராதலிற் சமயப் பொருள் பற்றியல்லாது கோபியாரெனவுணர்க. மீனவென்றது மாளிகை வாயிலிலே புகும் இதனுலேயே தோஷம் போதும்! இதுவன்றிப்பாண்டி–யனைத் தீண்டுவதேயென்றவாறு."

"இவர் மேல் சினங்கொள்பவர் அழிந்து போவர்!" என்கின்றூர் குலச்சிறையார். "இது சிவ தருமமென்றும், இவரென்றது மாகேசுவரர் கோபியாமையை விளக்கி நின்றது என்றும், 'நாணீர் – அறியீர் உறிவல்லமணீர் காணீர்' – நாணீர் என்றது மிருகசாதியோ டொப்பீரென்ற வாறு. அறியீரென்றதுஒன்று மறியீரென்றவாறு. பாவாத்துமா ஆன உணர்வத்தனையே யென்று மாம். உறிவல்லமணீ ரென்றது குண்டிகைக்குக் கயிற்றுறி பண்ணவல்லீர் என்றவாறு. இது

பண்ணவா சங்கத்திலும் புக்கீர்? எனலுமாம். காணீர் என்றது 'இனிச் சற்றுப் போதிற் பாரீர்' என்றவாறு," என்பது பழைய உரைக்-குறிப்பு.

குலச்சிறையார் அவர்களைப்பார்த்துக் கூறி விட்டுப் பிள்ளையாரை நோக்கி "சைவ சிகாமணியே திருநீறு நீ யிட்டருள் செய்க" என்று வேண்டிக் கொள்கிறார்.

பிள்ளையார் திருநீறிட்டதும் வெப்புத்தடைபடுகின்றது. பாண்டியன் கீழிறங்கிச் சிம்மா-சனத்தின்மேல் பிள்ளையாரை ஏற்றி மனைவி-யோடும் அமைச்சரோடும் வணங்குகிறான். அமணர்கள் "வெறும் பொடியால் இந்த வெப்-புத் தீருமோ? எம்மந்திரமும் எந்திரமும் இல்லை கொலோ? யாம் யாதும் இதற்குமுயன்றிலமோ?" என்று கூறிக் கொதிக்கின்றார்கள்.

"கெடுவீர் கெடுவீ ரிவைசொல் லுவதே
 கெட்டே னடிகள் ளிவர்கே வலரோ
விடுவீர் விடுவீ ரினியென் னெதிர்நீர்
 வெங்கோ பமுமுங் கள்விவா தமுமே

"நீர்வந்து தொடத்தொட வெந்துருகா
 நெடுவேனில் சுடச்சுட நின்றுலறிக்
கார்வந்து தொடத்தொட வுய்ந்திளகுங்
 காடொத்தனென் யானிவர் கைப்படவே."

என்று பாண்டியன் அவர்களை வேண்டிக்கொள்-கிறான்.

அமணர்கள் நெருப்பிலும் நீரிலும் வாதிட வேண்டுகின்றார்கள்.

"எரியாதன தீயி லிடிற்கொடுபோ
யெறிவைகையி லேயிடில் வைகையுடன்
சரியாதன ஏடுடை யார்தவமே
தவமாவது மேலிது சாதனமே"

"வேமேடுடை யாரையும் வைகையிலே
விட்டாலதன் மீது மிதந்தொழுகிப்
போமேடுடை யாரையும் நீகழுவிற்
புகுவிப்பது தெக்கண பூபதியே."

என்று தாமே கழுவினைப் பற்றிக் கூறுகின்றார்கள். ("தெக்கணம் – தெற்கு. பூபதி - இராசா. இதற்குப் பொருள் தர்மராசாவும் நீயே யென்று பாண்டியனைப் புகழ்ந்தவாறு. இப்பொருளும் அமணர் சொல்லுதற்குக் காரணம் தாம் கொலை செய்வாரல்லர்; தாம் கற்ற மந்திரவாத வித்தை–யாற்கொல்லக்கடவராதலாற் சொன்னாரென்க" என்பது பழைய உரை.)

பாண்டிமாதேவியார் கழுவென்று கேட்ட–தும் திடுக்கிடுகின்றார்; ஞானசம்பந்தர் காலில் விழுந்து சீகாழிக்குத் திரும்பிப் போய் விடும்–படி வேண்டிக் கொள்கிறார்.

"மலைகொண்டெழு வார்கடல் கொண்டெழுவார்
மிசைவந்து சிலாவரு டஞ்சொரிவார்
நிலைகொண்டெழு வார்கொலை கொண்டெழுதற்
கிவரிற்பிறர் யாவர் நிசாசரரே.
குழைதந்தன செந்தமிழ் மண்டலமுங்
கொடிமாநக ருங்குன் றங்களிகூர்
மழைதந்தென வந்தனை வாழியினிப்
பிரமாபுர மேற மறித்தருளே,"

பிள்ளையார் வாது செய்ய முடிவு செய்து கொண்டு பாண்டிமா தேவியைத் தேற்று-கின்றார். எங்கும் சிவன் உள்ளானாதலின் எல்-லாம் சைவமே என்று ஞானசம்பந்தர் பாடிய பாட்டினை மனத்துட் கொண்டு ஒட்டக்கூத்தர் ஞானசம்பந்தரை இவ்வாறு பேசச் செய்கிறார்.

" கனலெங்கன லக்கன லால்விளையுங்
கார்காரவை வந்து தருங்கலுழிப்
புனலெம்புனல் யாமிடு மேடுசுடா.
போகாதிரி யக்கொடு போமெனவே "

அமணர்களோ " அந்நீரையும் நெருப்பையும் நாங்கள் பணிகொள்வதைப் பாராய் " என்று வீரம் பேசுகின்றனர். ஆனால், அவர்கள் எழுதிய ஏடு எரிகிறது; வைகையில் விட்ட ஏடு கடலிற் புகுகிறது. பிள்ளையார் எழுதிய ஏடு நெருப்பில் எரியாது சிறக்கின்றது. அவர் நீரிலிட்ட ஏடு ஆற்றிற்கு எதிர் பிடித்து ஓடுகிறது. எல்லோ-ரும் ஆரவாரிக்கின்றனர். சைவ ஆற்றலைக் காட்ட விரும்புகிறார் பிள்ளையார்.

"வாராயிவ ராகம துல்லபமும்
வருமெங்கள் சிவாகம வல்லபமும்
பாராய்வழு தீ! ஈது பாருருவத்
திருவிக்ரம மின்று படும்படியே."

அவர் கைப்பட்டதும் கூன் பாண்டியன் கூன் நீங்கி நிமிர்கிறான்; முன்னினும் மிக்க அழகு கொண்டு விளங்குகிறான்.

கழுவேறுதல் தொடங்கப்போகும் நிலை-யில் சில பாடல்கள் தக்கயாகப் பரணியில் சிதைந்து போயிருக்கக் காண்கிறோம். ஆனால்,

உரையில் வரும் பகுதிகள் திருவாலவுடை-யார் திருவிளையாடலை நினைப் பூட்டுகின்-றன. "இராசாவை நோக்கி இஃது ஆகாது என்று பிள்ளையார் விலக்கியருள இராசாவை-யும் பிள்ளையாரையும் கூட வைத்து மகேசுவர கணபதித் தொண்டர்கள் அருளிச் செய்வார். பிள்ளையார் கொன்றாராகச் சொல்லியது படை செய்த பராக்கிரமம். அமணர்கள் நரகக் குழியிற் புக்கது, பிராமணச் சிறு பிள்ளை தேசாந்தரத்தில் நின்றும் வந்து மதுரைக்-குப் புறத்தே ஒரு மடத்திலே விட அம்மடத்தின் வாசலிலே அநியாயமாக நெருப்பிட்ட பாவத்-தால் என வுணர்க." என்பது பழைய உரைக் குறிப்பு.

தொண்டர்கள் என்ன பேசினரென அறி-யோம். கழுவேறப் பண்ணினர்கள் போலும். ஆனால், அமணர்கள் தம் பொய்யாமை பொய்-யாத படி தாமே கழுவேறினர்கள் என்பது போல ஒட்டக்கூத்தர் பாடினர்எனக்கருத இடம் உண்டு. "அமணர் தாம் கழுவேறுவதற்குக் கார-ணம் பொய் சொல்லா விரதமென வுணர்க" என்பர் உரை ஆசிரியர். "எண்ணுயிரவர் அம-ணர்கள்; அவர் எதிரே சைவர்கள் நாற்பத் தெண்ணுயிரவர்" என ஒட்டக்கூத்தர் கலைமகள் பாடுவதாகப் பாடி முடிக்கிறார்.

சேக்கிழார் ஒட்டக்கூத்தர் போக்கையும் பின்பற்றுகிறார். ஆனால் கழு ஏறிய கதை நிலை பேறடைந்து விட்டதன்றோ? அவர் என் செய் வார்?

நம்பியாண்டார் நம்பியின் பாடல்களையும் ஆராய்ந்ததால் சேக்கிழார் கழுவேறிய கதை கூறுகின்றார். திருத்தொண்டத் தொகையே முதனூலாகவும், நம்பியாண்டார் பாடிய திருத்-தொண்டர் திருவந்தாதியே வழி நூலாகவும் கொண்டு, தம் பெரிய புராணத்தைச் சார்பு நூலாகப் பாடுகின்ற சேக்கிழார் வழி நூலுடையார் கூறியவற்றை எவ்வாறு புறக்-கணிப்பார்? ஆதலின், இக்கழுவேறிய கதை சேக்கிழார் ஆராய்ச்சியின் பயன் அன்று என்க. அவர் ஆராய்ச்சியின் பயனாயின் அதனை நம்பத் தக்கதன்று என்று எவரும் கூற முன் வாரார்.

ஆனால், நம்பியாண்டார் நம்பியின் பாடல்-படி சம்பந்தரே அமணர்களைக் கழுவேற்றிய-வர் ஆவர். அந்தக் கதையையே திருவிளையாடற்-புராணங்கள் கூறுகின்றன. சேக்கிழாரோ அக்-கதையைக் கூறவில்லை. சமணர்கள் மேல் பழி-யைச் சுமத்துகின்றார். ஏன் இவ்வாறு பாடுகின்றார்? சேக்கிழார் பலமுறையும் திருமுறையை ஓதியிருப்பார். ஆதலின், அதிலே சம்பந்தர் 'வெகுளேன்மின்' என்று பிறருடைய சினத்தை-யும் தணிவித்துப் பாடல் பாடிப் போவதைக் கண்டிருப்பார். ஆதலின் அத்தகையார், கழு ஏற்ற முன் வந்திரார் என முடிவு கட்டியிருப்பர். ஆனால், நம்பியாண்டார் நம்பியே இக்கதை-யைக்கூறுகின்றார். ஆதலின், இக்கதை எவ்வாறு திருமுறைக்கு முரணாகாதபடி நடந்திருக்கலாம் என எண்ணியிருப்பார்.

அதன் பயனுகவே சேக்கிழார் பெருமானும் கதையைத் திருத்தியமைக்கின்றூர். எனவே, கழுவேற்றிய கதை திருக்கடைக் காப்புச் செய்யுள்களின் போக்கிற்கு முரண்படுகின்றது எனக் கண்டறிந்தார் சேக்கிழார் என்பது புலனுகின்றது. திரு அருண்மொழித் தேவரினும் தேவார ஆராய்ச்சியிற் சிறந்தார் உயிர் வாழ்ந்தது இல்லை என்பது ஒருதலை. அப்பெரியாருக்கே அவ்வாறு ஐயம் எழுந்திருக்குமாயின் கழுவேறிய கதை தேவாரத்தில் கூறப்படவில்லை என்ற நமது முடிவு வலிவடைகின்றதன்றே!

சேக்கிழாரைப் போன்ற பேராராய்ச்சியாளர் நம்பியாண்டார் நம்பி அல்லர். அவர் திருவருட் பெரியார் ; சிறந்த பாவலர். ஆதலின், அவர் கூறியமை பற்றிக் கழுவேறிய கதையை உண்மை எனக் கொள்ள இயலாது. அவர் காலத்தில் அக்கதை வழங்கியமையால் அவர் பாடினுர். ஆதலின், அவர் மேலும் குறை இல்லை.

கழுவேற்றிய கதைக்குத் தேவாரத்தே அகச்சான்றுகள் இல்லை; புறச்சான்றுகளும் இல்லை; நம்பியாண்டார் நாளில் தான் அக்கதை வழங்கத் தொடங்கியது ; தேவார ஆராய்ச்சியிற் சிறந்த சேக்கிழாரைப் போன்றூர் அக்கதை தேவாரத்தோடு முரண்படுகின்றமை கண்டு ஐயுற்றூர்கள். அதனுல், அக்கதையை

ஏற்றபடி திருவருட் பெரும்புலவர் என்ற வகையில் மாற்றியமைக்கப் புகுந்தனர் என்பதாயிற்று. இவ்வளவும் கூறிய பின் இக்கதை நடக்கவில்லை எனச் சொல்லவும் வேண்டுமோ?

கழுவேற்றிய திருவிழா நடப்பதனுலும், கழு ஏற்றிய இடத்தை இன்றும் மக்கள் நமக்குக் காட்டுவதனுலும் இக்கதை உண்மையே என்று வழக்காடுவாரும் உள்ளனர். திருவதிகையில் மூவெயில் முருக்கிய திருவிழா ஒவ்வோராண்டும் நடைபெறுகின்றது. தூங்கெயில் எரிந்த இடை வெளியையும் மக்கள் நமக்குக் காட்டுகின்றனர். அப்போரில் சிவனது தேர் அச்சு முறிந்த இடமே அச்சிறுபாக்கமாம். படைகள் அணிவகுத்து நின்ற இடமே பேரணியாம். ஆனல் திருமூலரோ,

அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரம் எரிசெய்தனன் என்பர்கள் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புரம் எரிசெய்தமை யாரறி வாரே.

என்று இக்கதையைப் பொய்யென்று கூறி அக் கதையின் கருத்தை விளக்கிக் கூறுகின்ருர். ஆதலின், திருவிழா நடப்பதனுலும், இடத்தை மக்கள் காட்டுவதாலும், ஒரு கதையை உண்மை என்று துணிந்து உறுதி கூற முடியாது.

மேனுட்டிற்கும் கீழ் நாட்டிற்கும் உள்ள வேற்றுமை ஒன்றுண்டு. கொள்கைகளைப்பற்றி

வாய்வழக்காடுவதோடு நின்று விடுவதே நம் நாட்டவர் இயல்பு. மேனாட்டவரோ கொள்கை வேறுபடுவது ஒன்று பற்றியே பலரைத் தீக்கு இரை ஆக்கினர். அவர்கள் வாயாடாது கை-யாடுவர். "கதிரவன் கோள்களின் நடுவே இருக்-கின்றான். உலகமே அவனைச் சுற்றி வருகிறது" என்ற பெரியானைச் சிறையிலிட்டனர் மேனாட்-டார். ஆனால், கடவுள் இல்லை என்ற சாங்கியம் பூர்வ மீமாம்சை முதலிய நூல்களையும் கடவுள் உண்டென்பவர் பலரும் ஓதுகின்றனர், நமது நாட்டில். ஆனால், நம்மவர் கொலைக்கஞ்சி நடுங்-கினாலும், வாயாரக் கொலைக் கதை சொல்ல அஞ்சுவதில்லை. இராமானுசர் சமணரை வாட்-டினர் என்றும், சமணர்கள் இராமானுசரை வாட்டினார்கள் என்றும் கதை கட்டிவிட்டனர். இத்தகைய கதைகட்கு எண் இல்லை. ஒட்டக்கூத்தர் புலவர் தலையை வெட்டும் கதையை என் என்பது? இவை அனைத்தும் பகற் கனவு என்று அறிஞர் முடிவு கட்டியுள்ளனர். சம்பந்தர் சமணரைக் கழுவேற்றிய கதையும் ஒரு கனாக் கதையே என்க. கழுவேறுவதை முன்னரே கனா வாகச் சமணர் கண்டனர் எனப் புராணங்கள் அனைத்தும் கூறவில்லையா!

எண்ணாயிரவரைக் கழுவேற்றுவது அந்நாளில் இயலுவதொன்றோ என ஆராய்க. ஆலவாயில் எத்துணை மக்கள் வாழ்ந்திருப்பர்? அந்நாளில் மக்கள் தொகை இப்போது இருப்பதை விட

மிக மிகக் குறைந்திருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டுமோ? அன்றியும் இத்துணை மக்களையும் ஒரே பொழுதில் கழுவேற்ற எந்நாட்டில் தான் கழுக்கள் கிடைத்திருக்கும். அரசியல் முறையை அறிந்தவர் எவரும் இக்கதையை நம்பார். மேனாட்டில் மேற்கண்டபடி கொள்கை வேறுபட்டால் பிறரைத் தீக்கு இரையாக்கிய போதும் எண்ணாயிரவரை வாட்டியதில்லை. ஒரு சிலரையே வருத்தினர். அது கண்டே நாடு கலங்கியது. போரும் எங்கும் எழுந்தது.

எண்ணாயிரவரைக் கழுவேற்றுவதை எவர் மனந்தான் கண்டு பொறுக்கும்? அவர்களின் உற்றார் உறவினராய் எத்துணை மக்கள் வந்து குவிந்திருப்பர்! கூட்டம் கூட்டமாகச் சிறைப்பள்ளி புகுவது என்று மக்கள் முன்வந்தால் அவர்களைச் சிறை செய்ய எந்த அரசியலும் அஞ்சும். ஆங்கில அரசியலை உற்று நோக்குங்கள். ஒரு ஜதீந்த்ரதாஸர் சிறையில் பட்டினி கிடந்து இறந்தார் என்றால் அரசியல் எவ்வாறு கலங்கியது? எனவே, எண்ணாயிரவரைக் கழுவேற்றுவது அந்நாளிலும் இந்நாளிலும் கனவிலன்றி நனவில் முடிவது ஒன்றன்றாம்.

காஞ்சியில் விண்ணகரில் பலகைச் சித்திரம் பொதுவாகக் கழுவேற்றும் நிலையைக் குறிக்கிறதாம். "தலையை அறுப்பதே கருமம் கண்டாய்" என்பது தொண்டரடிப் பொடியார் பாடல். ஆனால், இவை எட்டாம் நூற்றாண்டில் எழுந்த கனவுகள்; அப்போதும் நனவில்

நடைபெறவில்லை என்றே கூறவேண்டும். அப்–போதுதான், இந்தக் கதையும் உருவானது போலும். ஆனால், திருநாவுக்கரசர் பிறமொழிச் சமணர்பலர் ஏதோ ஓர் எதிர்பாராத இடையூற்–றால் அழிந்ததனைப் பாடுகின்றார். "வாயிருந்தமி–ழே படித்தாளுறு ஆயிரஞ் சமணும் அழிவாக்–கினான்" எனப் பாடுவதனையே பின்னோர் இந்தக் கதைக்கு அடிப்படை ஆக்கிக் கொண்டார்கள் போலும்!

மேலும் சில குறிப்புக்களை விளக்கினால் மட்டுமே உண்மை விளங்கும். சமுதாயச் சிக்கல் போராட்டமாகவும் வளர்வதனை இந்த நாளில் பலர் ஆராய்கின்றனர். மொழி, மதம், சமயம், தத்துவம், சாதி முதலிய அடிப்படையில் இந்தச் சிக்கல்கள் எழும். இங்கு நாம் கூறிவந்தது அத்–தகைய சிக்கலை ஆராய்வாருக்கும் பயன்படும். ஆதலின், தத்துவத்தின் அடிப்படையில் எழுந்த வேறுபாடுகளையும் விளக்குதல்வேண்டும், இந்த வேறுபாடும் உள் எழுந்த இயற்கை வெறுப்–பிற்குக் காரணம் கற்பிப்பது போலாம் என மன நூல் அறிஞர் கூறுவர்.

## 6. வெறுப்பின் விளக்கம்

### I. பௌத்தரும் சம்பந்தரும்

ஞான சம்பந்தர் சமணர்களையும் புத்தர்களையும் வைதுபாடும் இடங்களும் உண்டு. "அவர்கள் சொற்களைக் கேட்கவேண்டா; அவர்களை ஆண்டவன் அழிக்கின்றார்" என்றெல்லாம் அவர் பாடுகின்றார்; ஆனால், அவர்களிடத்தில் மக்களுக்கு ஈடுபாடு இருந்ததனையும் அவர் தம் பாடல்களில் பல இடத்தும் சுட்டுகின்றார்; அவர்கள் பேச்சு அறவுரைபோல் தோன்றுவதனையும் வற்புறுத்துகின்றார். அவர்கள் பேச்சைக்கேட்டு, "மயங்காதீர்கள்" என்று இதனாலேயே உலகினையும் நெஞ்சினையும் நோக்கிப் பாடுகின்றார். பொதுவாக இவர்கள் வேத வேள்விகளைப் பழித்துரைப்பதனைச் சுட்டிக்காட்டி இவர்கள் கூறும் தலைவர்களும் கடவுளர்களும் சிவபெருமானை வணங்குவதாகவும் அவர் கூறுகிறார்.

> முடிய சீவரத்தார் முதுமட்டையர் மோட்டமணர்
> நாடிய தேவ ரெல்லா நயந்தேத்திய நன்னலத்தான் (3436)
>
> (தேவாரம் சைவசித்தாந்த சமாஜப் பதிப்பு)

> முடிய சீவரத்தர் முதிர்பிண்டிய ரென்றிவர்கள்
> தேடிய தேவர்தம்மா விறைஞ்சப்படுந் தேவர்பிரான் (3447)

பௌத்தர்கள் "எல்லாம் பாழ்" என்று சூனிய வாதம் பேசுபவர்கள். அவர்கள் கூறுவதனை இவ்வாறு விளக்கலாம்:–ஒன்றும் நிலைபேறுடை–

யது இல்லை; இமைக்கிமை மாறிக்கொண்டே வரும். மாவலியைச்சுற்றி விளையாடுகிறார்கள் பலர். அது நெருப்பு வட்டம் போலத் தோன்றுகிறது. மாவலி ஓரிடத்தில் இருப்பது மற்றோரிடத்தில் ஓர் இமைக்குமேல் இல்லாமற் போனாலும் தொடர்ந்து வட்டம் ஒன்று சுழலுவது போல் ஒரு பொய்த்தோற்றம் நம்மை மயக்குகிறது. ஆறு ஓடிக்கொண்டே இருப்பதில் ஓரிடத்திலிருந்தநீர் அடுத்த இமையில் அங்கு இருப்பதில்லை. ஆறெனப் பேசுவது ஒரு பொய்த்தோற்றமேயாம். விளக்கில் உள்ள எண்ணெய்த் துளிகள் ஆவியாக எரிந்து அழிகின்றன. ஓரிமையில் இருந்த ஆவிஎரிஒளி மற்றோர் இமையில் இல்லை. ஆனால், விளக்கின் சுடர் ஒன்றே என்று பேசுகிறோம். இதுவும் கண்மயக்கே ஆம். காரண காரியத் தொடர்ச்சியாம் உலகம் முழுவதும் இத்தகைய பொய்த் தோற்றமேயாம். முதற்கணத்திருந்த காரணம்-சுடரோ, நீர் ஓட்டமோ —மறுகணத்து இருப்பதில்லை. மறுகணத்து எழுகின்ற காரியம் புதியது; காரணத்தில் இருந்தது அன்று. இவ்வாறு இமைதோறும்-கணந்தோறும்—மாறுவதே அடிப்படை உண்மை எனக் கூறுவதால் இவர்கள் க்ஷணிகவாதிகள் என்று பெயர் பெறுவர்.

இதனாலேயே கணிகை நோன்பினர் என்று அவர்களைச் சம்பந்தர் சுட்டுகின்றார் (2832). இந்தப்பாட்டில் கையினில் உண்பவர் எனச்சமணரையும், கணிகை நோன்பினர் என்று பௌத்தர்

களையும் குறிப்பதாகக் கொள்ளுதல் வேண்டும். கணிசேர் நோம்பு (862) என வருவதும் கணிகை நோம்பு என இருத்தல்வேண்டும். அல்லது கணி என்பதற்கு நூல் வன்மையால் அல்லது வெற்று ஊகத்தால் நிலைநாட்டிய நோன்பு என்றும் பொருள் ஆகலாம்.

ஆனால், கணிகை என்பதற்குப் பொதுமகள் என்ற பொருளே காண்கிறோம். உவமம், உவ-மை என அம் ஈறும் ஐ ஈறும் மாறுடுவதுண்டு. ஆகையால், இங்கு க்ஷணிகம் என்பது தமிழில் கணிகம் என்றாகிப் பின் கணிகை என்று வந்த-தாகக் கொள்ளுதல் வேண்டும். "பொது மகளி-ரோடு உறவாடுபவர்" என்றுபொருள் கூறுவது பொருத்தமாகக் காணோம். மகளிரும் துறவு பூண்டு நோன்பு நோற்கும்போது கூடா ஒழுக்-கம் எழ வாய்ப்பு அங்கு உள்ளதனையே இது குறிக்கின்றதென்றால் அஃது அந்த மதத்திற்கு மட்டும் சிறப்பென்று கொள்வதற்கில்லை, எனவே, க்ஷணிக வாதத்தின்படி தியானித்தலையே கணிகை நோன்பு எனக் கூறுகிறார் சம்பந்தர் எனல் வேண்டும். "கணிக நோன்பு" என்ற பாடமே இருந்திருத்தலும் கூடும்.

"குரத்திகட் பேணார்" என்பதனையும் (785) "கணிகை நோன்பினர்" என்பதனையும் ஒருங்கு கொண்டு, பெண் துறவிகளும் ஆண் துறவிகளு-மாக வாழ்கிற வாழ்க்கையில் இக்காலத்தும் எழும் சில கூடா ஒழுக்கத்தையே குறித்துச் சம்பந்தர் பழிக்கின்றார் என்று சிலர் கருதுகின்-

றனர். ஆண் பிறவிக்கே வீடு பேறு உண்டென்றும், பெண் துறவிகள் எத்தனைதான் துறவில் சிறந்திருந்தாலும் வீடுபேறு அடையார் என்றும் கூறும் திகம்பரக் கொள்கைக்கு இணங்கக் குரத்திகளாம் பெண் துறவிகளை அருகநிலை அடைவதாகக் கொண்டு வழிபடுவது இல்லை என்பதே குரத்திகட்பேணர் என்பதால்விளங்குவதாம். எனவே, "கணிகை நோன்பினர்" என்பது க்ஷணிகக்காட்சியையே குறிப்பது எனலாம்.

> "குணமறிவுகள் நிலையில பொருளுரை மருவிய
> பொருள்களுமில திணமெனுமவர்" (226)

என்பது பௌத்தர் கொள்கையைக்குறிப்பதாம். சொல்லால் வழங்கும் பொருள்களெலாம் – நாம் பேசிவரும் பொருள்கள் எல்லாம்—இல்லாதவையே; வெறுந் தோற்றமே. பொருள் என்றும், குணம் என்றும், அவற்றை அறியும் அறிவு என்றும் கூறுவன எல்லாம் இமைக்கிமை தோன்றி அழிகின்ற நிலையிலாப் பொருள்களே யாம். இது முடிந்த முடிபு. இவ்வாறு "எல்லாம் க்ஷணிகம்" என்று அறியும் அறிவே விடுதலை நிலை; வீடுபேறு; இவை க்ஷணிகம் என்று உணராது நிலையானவை என மயங்க அறிதலே கட்டுப்படலாம்.

"சாக்கியர்" எனப் பெறுவதால் பௌத்தர்கள் சாக்கிய முனியைப் பின்பற்றுவோர் என்பதாம். போதியார் என்பது புத்தர்பெருமான் மெய்யுணர்வு பெற்ற அரசமரத்தைப்

போதிமரம் என வழிபடுவோர் என்பதாம். பிடக்கு என்பது அவர்களது திரிபிடகம் என்ற நூல்களைக் குறிப்பதாம். மண்டை என்றும், சுரை ஓடு என்றும் கூறுவன புத்தர்கள் கையில் ஏந்திச் சென்ற உண்கலத்தைக் குறிப்பதாம். புத்தர் என்றும் இவர்களுக்குப் பெயர். தேரர் என்பது தேரவாதத்தைப் பின்பற்றும் ஒரு-வகைப் பௌத்தர்களைக் குறிப்பதாம். இதனைத் திருஞான சம்பந்தர் புராணத்தில்(916 முதல் 924 வரை)சம்பந்தர் புத்தரோடு வாதிப்பதனைச்சேக்-கிழார் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நிலையான ஒரு பொருள் என்றும் மாறாது எல்லாவற்றிற்கும் அடிப்படையாய், எங்கும் நிறைந்த முழுப் பொருளாய், எல்லாவற்றையும் அறியும் பேரறிவே வடிவாக, முடிவிலா இன்-பமே தன் இயல்பாக, அருள் கொழித்து நிற்-கின்றது என்பதே சம்பந்தர் கொள்கை. "நெறி-யில் வருபேராவகை நினையா நினைவொன்று" (193) இதுவே ஆம். இதனை "அறிவில் சமண் ஆதர்" (193) என்பர் சம்பந்தர். சம்பந்தர் கூறும் கடவுளை ஆத்தமாக அவர்கள் அறிய-வில்லையாம். (1882). காரணங்களுக்கு எல்லாம் காரணமான கடவுளை அவர்கள் அறியவில்லை-யாம். (3392)

இந்த உலகம் அத்தனையும் பிராந்தி, பொய்ம் மயக்கம் என்று கூறுகின்றவர்களைக் "பிண்டம் உண்ணும் பிராந்தர்" (292) என்று, சம்பந் தர் கூறுகிறார். "மடங்கொண்ட விரும்பிய

ராய் மயங்கி ஒரு பேய்த்தேர்ப்பின் குடம் கொண்டு நீர்க்குச் செல்வார்'' (1280) என்பர். அருகர்கள் உயிரானது கட்டு நீங்கி அருகனும் கடவுள் ஆம் என்று கொள்வர். பௌத்தர்களும் மெய்யுணர்வு பெற்று நிருவாணநிலை எய்திய புத்தர் பெருமானே வழிபடத்தக்கவர் எனக் கொண்டு அவரைக் கடவுளாகப் போற்றுவர். முன் இல்லாத கடவுள் தன்மை அருகக் கடவுட்-குப் பின் வந்து எய்தியதாம். எல்லாம் பாழ், எல்லாம் க்ஷணிகம் என்று கூறுவாருக்கு எதி-ரில், புத்தர் பெற்ற நிருவாண நிலையும் பாழே (இல்லாதது ஒன்றே) என்று சம்பந்தர் வாதிடு-வதாகச் சேக்கிழார் பாடுகிறார். இக்கடவுளர் சைவர்கள் கொள்கைப்படி கடவுளர்கள் அல்ல-ராயினும் இவர்கள், எல்லாம் சிவனே ஆதலின், சிவனை வணங்குகின்றார்கள் என்று சம்பந்தர் பாடுவதனைக் காண்கிறோம். (3436, 3447). மேலே கூறிய காரணங்களால் அருகரும் புத்தரும் கூறும் கடவுளரைப் பற்றிச் சம்பந்தர்,

"எண்டிசையு மில்லதொரு தெய்வ முளதென்பர்
அது என்ன பொருளாம்" (3666)

என்று பாடுகிறார். இதனாலே, உண்மையான குறிக்கோளை அன்னோர் அறியாதவர் என்றும் உண்மையான சத்து சித்து ஆனந்தமான கட-வுளை அன்றி, அசத்தும் அசித்தும் துக்கமுமாக உலகில் காண்பனவற்றையே பொருள் எனக் கொண்டு ஆராய்கின்றவர்கள் அவர்கள்என்றும் சுட்டுகின்றார். "சடங்கொண்ட சாத்திரத்தார்"

(1280) என்றும் "யாதுமல்லா உரையே உரைத்துப்போய்த் தத்துவம் ஒன்றறியார்" (568) என்றும்சம்பந்தரும், "பொய்த்தவம் பேசுவது"(424) என்றும், "குறியறியாது நின்று கண்டதே கருதுவார்கள்" (4580) என்றும், "கண்டார் கண்ட காரணம் அவை கருதாது கை தொழுமின்" (7951) என்றும் பிற நாயன்மாரும் பாடுவது காண்க.

எனவே, எதிரிகள் கூறுவன எல்லாம் அவர்களே கட்டிக் கூறுவன என்றும், இயல்பாய் இருக்கும் நிலையைக் கூறுவன அல்ல என்றும் குறிக்க, பல முறையும் "பொய்ம் மொழி நூல்" (2013) என்றும் "சொல் அவத்தம்" (2559) என்றும், "கட்டிய கட்டுரை" (1435) என்றும் சம்பந்தரும் "பண்ணிய சாத்திரம்" (5140) என்று சுந்தரரும் பாடுகிறார்கள். அருகர் பௌத்தர் கூறுவது உண்மையானால், எல்லாம் இந்திரசாலமே என்றும் இதில் சொல்லளவன்றி இன்பம் இல்லை என்றும் கருதிச் "செந்துவராடையினாருடைவிட்டு நின்றுழல்வார் சொன்ன இந்திர ஞாலம் ஒழிந் தின்புற வேண்டுதி ரேல்" (1141) என்று பாடுகிறார் சம்பந்தர். "அந்தர ஞானம்" (1131) எனலும் காண்க. "சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமணர் குண்டர் மடங் கொண்ட விரும்பியராய் மயங்கியோர் பேய்த் தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வார்" (1280) என்பதும் காண்க.

## II. ஆரம்பர்

சம்பந்தர் சமணர்களை ஆரம்பர் என்று கூறுகிறார் (106). ஆரம்பர் என்பதனைத்தொடக்க நிலையில் உள்ளார், செருக்குடையார் என்ற பொருளொடு அணுக்களின் கூட்டத்தால் உலகம் உண்டாகும் என்று கூறும் ஆரம்ப-வாதம் எனும் கொள்கையினர் என்ற பொரு-ளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். மாயை, சூன்யம் முதலியவற்றை உலகத்தின் தோற்றத்-திற்கு அடிப்படையாகக் கொள்ளாது ஒவ்-வொரு கொள்ளிடம் (பிரதேசம்) உடைய பரமாணுவினை அடிப்படையாகக் கொண்டு, அவற்றின் கூட்டத்தால் அணுத்திரளும் (ஸ்கந்தமும்), அவற்றின் சேர்க்கையால் பல பல வடிவங்களாம் உலகமும் தோன்றும் என்பர் சைனர். பௌத்தரில் வைபாடிகரும் பர-மாணுக்களின் கூட்டமாய் உலகம் காணப்படு-பொருளாம் என்று கூறுவதால் அந்த அளவில் ஆரம்பர் என அவர்களையும் உட்கொண்டு கூறு-கின்றார் போலும் சம்பந்தர்.

> "வேர் வந்துற மாசூர்தர வெயில் நின்றுழல்வாரும்
> மார்பம்புதை மலிசீவரமறையா வருவாரும்
> ஆரம்பர் தம்முரை கொள்ளன்மின்" (106)

எனல் காண்க.

அணுவினை அடிப்படையாகக் கொண்டு பிறவற்றையும் விளக்குவர் அருகர். பிரதேசம் என்று அவர்கள் கூறுவதனைக் கொள் இடம் எனலாம். ஒரு பரமாணு இருக்கும் இடமே ஒரு

கொள்ளிடமாம். 1. அணுவேயன்றி, 2. உயிர், 3. இயக்கத்தின் ஊடுநிலை, 4. இயங்காமையின் ஊடுநிலை, 5. வான், 6. பொருண்மை (புத்கலம்–சடப் பொருள்)—இவை எலாம் திரிபிலாத பல கொள்ளிடங்களை உடையனவாம்; கொள்ளிடம் அல்லது உடல் (காயம்) உடையனவே ஆம்; அஸ்தி காயங்களாம். இத்தகைய கொள்ளிடம் இல்லாது பல கொள்ளிடங்களை உடையது பரப்புடைப் பொருளாம். கால அணுக்களோ கலவையாகாத ஒன்று. அது பல கொள்ளிடங்களை உடையது அன்று. ஆதலின் அது பரப்பற்றது; உடல் (காயம்) அற்றது; அனஸ்தி காயமாம்.

"மொழி முதற்காரணமாம் அணுத்திரள் ஒலி" என நன்னூலார் இந்த ஆரம்ப வாதமே கூறுகிறார். சங்கர நமச்சிவாயர் இதனை.

"சிதலது நீர்வாய்ச் சிறு துகளால் புற்றுரு அமைந்த பெற்றியது என்ன ஐம்புலப் பேருரு ஐந்தும் ஐந்தணுவால் இம்பரில் சமைவது யாவரும் அறிதலின், அணுதி காரணமாகிய மாயையினை ஈண்டுக் கூருது ஆதிகாரணமாகிய செவிப்புலனும் அணுத்திரளை எழுத்திற்கு முதற் காரணம் என்றார். இவ்வாசிரியர்க்கு மாயை உடன்பாடன்று; அணுத்திரள் ஒன்றுமே துணிவெனின், பிறிதொடு படா அன் தன்மதம் கொளல் என்னும் மதம் படக் கூறினர் என்று உணர்க. "ஈண்டு அணு என்றது ஒலியினது நுட்பத்தை" என்று விளக்குவது காண்க.

எல்லாவற்றிற்கும் முந்துற முந்திக் காரணமாய் இருப்பது கடவுளே என்பது சம்பந்தர் கொள்கை. காரணங்களுக் கெல்லாம் காரணமான அதனை அவர்கள் அறியவில்லை என்பதே இவர் முறைபாடு.

## III "உண்டும் இல்லையும் எனல்"

[ஸ்யாத் வாதம் - முறைமை நிலையுண்மை]

சமணர்களைப் பற்றிச் சம்பந்தர் கூறும் மற்றொரு குறிப்பு அவர்களுடைய தத்துவ சாத்திரத்தின் அடிப்படை நோக்கத்தை விளக்குவதாம்.

"அத்தகு பொருள் உண்டு மில்லையும்" (3213) என்று கூறுபவர் என்றும்,

"உண்டிலை யென்றே தம் கையினில் உண்போர் (1056) என்றும் அவர் பாடுகிறார். பரஞ்சோதியார் போன்று பின் வந்த நூலோர் "அத்தி நாத்தி" என்று இதனையே எள்ளிநகையாடுவர்.

உலகில் உள் பொருள் எவைஎன்று ஆராய்வார் பலவகையினர். தனித்தனியே பொருள்களின் உண்மை நிலையைக் கூறமுடியும் என்று கொள்ளுவோர் கொள்கை தனிநிலைக் கொள்கையாம். ஆனால், பொருள்களோ ஒன்றோடு ஒன்று இயைந்து ஒன்றாய் மயங்கிக் கிடப்பதில் இவ்வாறு தனிநிலைக் கொள்கை கூறுவது பொருந்தாது என்றும், ஒன்றோடு ஒன்று இயைந்த பல இயைபுகளையும் முறைமை-

களையும் அடிப்படையாகக் கொண்டு விளக்கினல் அன்றி ஒவ்வொன்றின் உண்மை நிலையையும் விளக்க முடியாது என்றும் கொள்வோர் முறைமை நிலைக் கொள்கையினர் எனலாம். ஒன்றைப்பற்றிய உண்மை ஒரு நோக்கத்தில் ஒன்ருகவும், வேருெரு நோக்கத்தில் வேருென்ருகவும் தோன்றும் என்பர். ஒருவனே பிள்ளைகளை நோக்கத் தந்தையாகவும், மனைவியை நோக்கக் கணவனுகவும், பெற்ருேரை நோக்க மகனுகவும், பாட்டனை நோக்கப் பேரனுகவும், பேரனை நோக்கப் பாட்டனுகவும், மாமனை நோக்க மருமகனுகவும், மருமகனை நோக்க மாமனுகவும் விளங்கவில்லையா? இங்கே ஒருவன் மருகனுகவும் மாமனுகவும் இருப்பதில் முரண் ஏது?

எனவே, முறைமை நிலைக் கொள்கை பலநிலைக் கொள்கையாகும். தனிநிலைக் கொள்கை ஒரு முடிபுக் கொள்கையாகும். (ஏகாந்த வாதம்) முறைமை நிலைக்கொள்கை பலமுடிபுக் கொள்கையாம்; இதனையே சைனர் அநேகாந்த வாதம் என்பர். இதற்கு ஸ்யாத்வாதம் என்றும் பெயர் உண்டு. ஒவ்வொரு முடிபும் முறைமை நிலைக்கொள்கையை ஒட்டியது என்பதனைக் காட்ட, அத்தகைய ஒவ்வொரு சொற்ருெடரும் வடமொழியில் 'ஸ்யாத்' என்று முடியும். "குடம் உள்ளது" என்பதனைக் "குடம் உள்ளது போலும்" என்று கூறுவதற்கு நேராம் இது. மாறு உண்மை அன்று என்பதனை இச்சொற்ருெடர் அமைப்புச் சுட்டும்.

நோக்கம் வேறுபடும் என்றோம். பொதுவாக இந்த நோக்கங்களை நான்கு வகையில் அடக்கி விடலாம். பொருண்மை, இடம், காலம், வடி-வம் (உபாதி, வகை) என்பவையே அவை. ஒரு பொருள் இருக்கிறது என்று சொன்னால், அது எந்தப் பொருளாக இருக்கிறது என்று கூறல் வேண்டும். குடம் என்றால் பொற்குடமா மட்குடமா என்று நோக்க வேண்டும். பொற்-குடம் இருந்தால், பொற் குடத்தைப்பற்றிய கேள்வி எழும்போது, "உண்டு" என்போம். அந்த நிலைமையில் இருப்பது மட்குடமே ஆனால் ஆராய்ச்சிக்கு எழுந்த குடம் அதாவது பொற்-குடம் "இல்லை" என்போம். இந்த நிலையில் பொருளின் நோக்கத்திற்குஏற்பக் "குடம் உண்டு குடம் இல்லை" என்ற இரண்டும் உண்மையாதல் காண்க. அவ்வாறே இடவகை நோக்கத்தால் பலமுடிபுகள் எழ வழி உண்டு. "ஓர் அறையில் இருப்பது" என்ற பொருளில் "குடம் உண்டு" என்றும் "வேறோர் அறையில் இல்லை" என்ற பொருளில் "குடம் இல்லை" என்றும் கூறுவதில் முரண் ஒன்றும் இல்லை. பல முடிபுடை நிலை-யையே இது விளக்குகிறது. இவ்வாறே குடம் ஒரு காலத்தைக் கருதியபோது "உள்ளது" என்றும்,மற்றோர்காலத்தைக்கருதியபோது "இல்லை" என்றும் பேசுவதும் இயல்பேயாம். அவ்வாறே வடிவத்தினை அடிப்படையாகக் கொண்டு பேசும் போது, நீண்ட கழுத்துடைய குடத்தைப்பற்றிக் கேள்வி எழுந்தால் அந்த வடிவமுடையதாக எண்ணும்போது "குடம் உண்டு" என்றும்

கழுத்துக் குறுகியதாகிய குடம் அந்த நிலையில் "இல்லை" என்றும் கூறுவதில் முரண்பாடு இல்லை. எனவே "குடம் உண்டு; குடம் இல்லை" என்று இவ்வாறு நோக்க வேறுபாடுகளால் ஒரு பொருளைப்பற்றியே கூறுவது உளறல் அன்று; உண்மையைக் கூறலே யாம்.

மற்றொரு விளக்கமும் இங்குத்தருதல் வேண்டும். உள்ளது என்றால் என்றும் மாறாதது என்றும், அழியாதது என்றும் பொருள் கொள்வோர் ஒருவகையினர். உள்ளது என்பதெல்லாம் இமைக்கிமை மாறி அழிவதே ஆதலின், உள்ளது என்பதே இல்லை என்பது மற்றொருவர் கொள்கை. சமணர்கள் இந்த இரண்டினையும் உடன்படாது நடுநிலையில் நிற்பதாகத் தம்மைப் புகழ்ந்து கொள்வர். பொருளின் உண்மை இயல்பு ஒன்று; அதன் இருப்புவகை மற்றொன்று. பொருளின் இயல்பே உண்மைத்தன்மை. அது என்றும் நிலைபேறுடையது. ஆனால், அதன் வகை அல்லது இருப்பு நிலை ஒன்றாக இல்லாமல், தோன்றியும் அழிந்தும் மாறிக் கொண்டே நிற்கும். தீயின் சுடர் இமைக்கிமை தோன்றி அழிந்தாலும், அங்கு ஓர் அடிப்படையாம் உண்மைத்தன்மை விளங்குகிறது. அழிவும் தோற்றமும் இருப்பு நிலையின் வகைகள். ஆனால், அவை எதன் இருப்பு நிலையோ. அதுவே உண்மைத்தன்மையாம். தோற்றமின்றி அழிவில்லை; அழிவை நோக்காதபோது தோற்றமில்லை ; இவை இரண்டுமே, அடிப்படையான உண்மைத்தன்மை இல்லாதபோது இல்லை;

இருப்பு நிலையை நோக்காதபோது உண்மைத் தன்மையும் இல்லையாம்; இவை மூன்றும் ஒன்றற்கு ஒன்று துணையானவை; முரண்பாடின்றி ஓரினமாக நிற்பவை. எனவே, சமணமதத்தின்படி எல்லாம் நிலையாயினவாம்; எல்லாம் மாறுவனவாம்.

இந்த வகையில் எல்லாப் பொருள்களும் ஒன்ருேடொன்று தொடர்புடையனவாம். எனவே, ஒரு பொருளின் சிறப்பு வடிவத்தை அறிய வேண்டுமாஞல், அப்பொருளும் பிற பொருள்களும் ஒன்ருேடொன்று இயைந்த தொடர்பினையும் அறிதல்வேண்டும். ஒரு பொருளைக் குடம் என்று பேசுவோமாஞல் பிற எல்லாவற்றினின்றும் அதனை வேறு பிரிக்கின்ருேம். குடமல்லாத பிறபொருள்கள் குடத்தோடு இயைந்த இபைபு அங்கே விளங்குகிறது. மக்கள் என்ருல் மக்கள் அல்லாதவர் என்ற எண்ணமும் பிறக்கிறது. எனவே, ஒன்றை அறியும்போது அதனை மற்றவற்ருேடு முறைமைப்படுத்தியே அறிகிருேம். "ஒன்றை அறிந்தவன் எல்லாவற்றையும் அறிகிருன். எல்லாவற்றையும் அறிந்தவன் ஒன்றை அறிகிருன்" என்று மகாவீரர் கூறுகிருர். (ஆசாராங்க சூத்ரம் I. 3, 1, 122)

"காரணந்தான் உள்ளது; காரியம் நிலையாக உள்ளது அன்று, புதிதாக எழுவது" என்று கூறுவோர் சாங்கியர் முதலானேர். "காரியம் முன் இல்லாதது; அசத்து" என்று கூறுபவர் புத்தர் முதலானேர். காரியமும் காரணத்திலே-

யே உள் அடங்கிக் கிடக்கிறது. கிணற்றை வெட்டினால் நீர் புலப்படத்தோன்றுவதுபோலக் காரணத்தில் உள் அடங்கிக் கிடப்பது, பின், முயற்சியால் வெளிப்பட்டுத் தோன்றும். பொன்னில் அணிகள் உள் அடங்கிக் கிடக்கின்றன. ஆனால், பொற்கொல்லனின் முயற்சியால் வெளி வருகின்றன. பொன்னில் துணி உள் அடங்கிக் கிடவாமையால், என்ன முயன்றாலும் துணி பொன்னின் காரியமாக வெளிவருகிறதில்லை. துணியாகிய காரியம் நூலாகிய காரணத்தில் தான் உள் அடங்கிக் கிடக்கிறது. இவ்வாறு "காரியம் என்றும் உள்ளது—சத்தானது" என்று கொள்வோர் சத்காரிய வாதிகள். இவ்வாறு "காரியம் காரணத்தில் முன்னரே உள்ளது அன்று" என்று கொள்வோர் அசத்காரிய வாதிகள். சமணர்கள் "இரண்டும் உண்மை அன்று; ஆனால் இரண்டிலும் உண்மை உண்டு" என்று கொள்கின்றனர். உண்மைத் தன்மையாம் இயல்பு வகையால் நோக்கும்பொழுது காரியம் காரணத்தில் அடங்கிக் கிடக்கின்ற சத்தேயாம். ஆனால், வகையாம் இருப்பு நிலையைக் காணும் போது, அது காரியத்தில் அடங்கிக் கிடவாத அசத்தேயாம். பல அணிகளையும் காரியங்களாகக் காண்கிறோம். பொன் என்ற இயல்பினை நோக்கும்போது அணிகளான காரியங்கள் அக்காரணத்திலே அடங்கிக் கிடத்தலின், சத்தேயாம். ஆழி என்றும், வளை என்றும், மாலை என்றும் வரும் பல பல அணி வகைகளின் இருப்பு நிலைகளை நோக்கும்போது, அவை பொன்னில்

அடங்கிக்கிடவாது, அப்போதப்போது புதியன புதியனவாகத் தோன்றும் அசத்தேயாம். ஆத-லின், "சத் அசத்காரியவாதிகள்" என்று சமணர்கள் பெயர் பெறுவார்கள்.

எனவே, "ஒரு பொருள் உண்டா இல்லையா" என்றபோது, தனிநிலைக்கொள்கையாக "உண்டு" என்றோ "இல்லை" என்றோ ஒரு முடிபாகக் கூறு-வதற்கில்லை. உடன்பாட்டு நிலையால் "உண்டு போலும்" எனலாம். (குடம் உண்டு போலும்) எதிர்மறை நிலையால் "இல்லை" என்றும்கூறலாம். (குடம் இல்லை போலும்). இரு நிலையையும், ஒரு பொருள் ஓர் இடம் ஒரு வடிவம் ஒரு காலம், என்ற வெவ்வேறு நோக்கத்திற் கொண்டு "உண்டு ; இல்லை" என நிரல்நிறை நிலையாகக் கூறலாம்.(குடம் உண்டும் குடம் இல்லையும் ஆம் போலும்) இவ்வாறு அன்றி உண்மையையும் இன்மையையும் ஒரே காலத்தில் உள்ள ஒருங்கு நிலையாகக் கூறும்போது, அதனை உணர்வது அருமை. ஆதலின், அதனைக் கூறமுடியா நிலைமை என்றே கூறவேண்டும். (குடம் கூறமுடியாத நிலையினது போலும்) இந்த நான்கு நிலைகள் அடிப்படைகளாம். நான்காவதாகக் கூறிய ஒருங்கு நிலையாம் கூறமுடியாமையோடு முதல் கூறிய உடன்பாட்டு நிலையையும் சேர்த்துக் கூறுவது ஐந்தாவதாம். (குடம் உள்ளதும் கூற முடியாததும் ஆம் போலும்). ஒருங்கு நிலையோடு இரண்டாவது கூறிய எதிர்மறைநிலையையும் சேர்த்துத் கூறுவது ஆறுவதாம். (குடம் இல்லதும் கூற முடியாததும் ஆம் போலும்)

ஒருங்கு நிலையோடு மூன்ருவதாகக் கூறிய நிரல் நிறை நிலையைச்சேர்த்துக்கூறுவது ஏழாவதாம். (குடம் உள்ளதும் இல்லதும் கூறமுடியாததும் ஆம் போலும்.) இவ்வாறு ஒன்றனைப்பற்றிக் கூறும் கூற்றுக்கள் ஏழு கூருக விளங்குவதால் எழு கூற்றுக் கொள்கை (ஸப்தபங்கி) என்று இதனைக் கூறுவதும் உண்டு.

இப்படி உண்மையை விளக்கக் கூறுவது இயல்பாகலாம். ஆனால், பேசுவோரை மயக்க இவ்வாறு கூற முற்படுவது குழப்பத்திலேயே சென்று முடியும் என்பர் சிலர். இரண்டுபடப் பேசுவதனைக் "கவர்வாய் மொழி" (391) என்பர் சம்பந்தர்."ஒள்ளியர் தொழுதெழஉலகினிலுரை, செய்மொழிபல கொள்ளிய களவினர் " (3754) எனலும் காண்க. சமணர்கள், உண்மையில் அன்றி, வாதத்திலேயே ஈடுபட்டவர்கள்என்பது சம்பந்தர் கூறும் குறைபாடு. "சாவாயும் வாது செய் சாவகர்" (1558) என்கிருர். சாவகர் இல்லறச் சைனரே. மேலும். "தர்க்க சாத்திரத்தவர் கள் சொல் இடுக்கண் வருமொழி" (676) என்று சம்பந்தர் பாடுகிருர். இது பௌத்தரைக் குறித் தாலும் சமணருக்கும் ஏற்றதேயாம்;பின் "வாது செய் சமண்" (848) எனல் காண்க. கீழ்வரும் பாடல் அதனையே வற்புறுத்துகிறது.

அத்தகு பொருளுமுண்டு மில்லையுமென்று நின்றவர்க்கச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்து வாதிலழிந்தெழுந்த கவிப் [பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க் கெளியேனலேன் திரு ஆலவாயரன் நிற்கவே"
(3213)

## IV. புலவரைப் பழித்தல்

" தங்களுக்கு மச் சாக்கியர்க்குந்
தரிப் பொணுத நற் சேவடி
எங்கள் நாயக னேத் தொழிந்திடுக்
கே மடுத் தொரு பொய்த்தவம்
பொங்கு நூல் வழி யன்றியே புல
வோர் களைப் பழிக் கும் பொலா
அங்கதர்க் கெளியே னலேன் திரு
ஆல வாயரன் நிற்கவே. " (3220)

என்ற பாடலின் குறிப்பினைக் காணவேண்டும். அங்கதச் செய்யுள் என்பது ஒன்று தொல்—காப்பியர் கூறுகிருர். கீழ் வெட்டாகப் பாடும் பாடல் அங்கதம். மேல் நோக்காக ஒரு பொரு—ளும் அடிப்படையாக ஒரு பொருளும் தோன்—றும். இவ்வாறு வசைபாடுவதும் அங்கதமே—யாம். கலைஞர்களை இழிக்கின்ற நிலையினையே சம்பந்தர் இங்குச் சுட்டுகின்ருர் எனலாம்.

சமணர்களும் கற்றவர்களே. "கற்றமணர்" (1784) என்பர் சம்பந்தர். சமணர்களும் கலையை வளர்த்தவர்களேயாம். சீவகன் இசையில் வல்ல ஒரு சமணத்தலைவன்; இவன் மணந்த காந்தரு—வதத்தையும் யாழில் வல்லவளே. சமணராகிய கொங்கு வேள் பாடுகின்ற உதயணனும் தன் இசையால் மதயானையை அடக்கி வாசவதத்—தைக்கு இசை கற்பித்து அவளை மணக்கின்ருன். ஆனுல், இவர்களுடைய கொள்கையில் இசையும் பிற கலைகளும் வீட்டுக்கு வழி அல்ல. இந்து மதத் துறவிகளும் இவ்வாறு சில போது கூறு—

வது உண்டு. ஆனால், நாயன்மார்களும், ஆழ்வார்களும் எழுப்பிய பக்திப் புரட்சி, கலைகளுக்கு உயர்ந்ததொரு நிலையைத் தந்தது. அழகினை ஆண்டவன் அவதாரமாகக் கொண்டது.

"மாசறு வீணையும் மாலை மதியமும்,
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே,
ஈச னெந்தை இணையடி நீழலே" (6112)

என்ற பாடலே ஒரு புரட்சியாம். இறைவன் இன்பத்தைப் பிற இன்பங்களுக்கு உவமை காட்டுவதற்கு மாறாக, இயற்கையின் இன்பத்தினையும் கலையின் இன்பத்தினையும் திருவடி இன்பத்துக்கு உவமை கூறுகின்றார் திருநாவுக்கரசர். உலகம் ஆண்டவனாரின் அருளம்மையது வடிவம்; ("உமையலாது உருவம் இல்லை" 4559). அதனை அவ்வாறு காண்பதே காட்சி; அதனை மாறிக் காண்பதாலேயே மயக்கமெல்லாம் வருகின்றன. அழகு ஆண்டவன் இயல்பு. அழகிய வடிவங்களில் ஆண்டவன் அவதாரஞ் செய்கின்றான் என்று இராமானுசர் ஆழ்வார்களைப் பின்பற்றி விளக்குகின்றார்; அழகு அனைவர் மனத்தையும் கவர்வதாகலின், அழகுவழிபாடு ஆண்டவனை அடைவதற்கு எளிய வழி என்று அர்ச்சாவதாரத்தின் பெருமையை அவர் பரக்கப் பேசுகிறார். கலை வழிபாட்டின் வழியே கடவுளைக் காணும் நெறியைத் "திரு நெறிய தமிழ்" (11) என்றும், "ஒளிநெறி" என்றும், "பாடல் நெறி" என்றும், ஆடல்நெறி"

என்றும் ஞானசம்பந்தர் பேசுகின்றூர். கோயில் வழிபாடு புத்தர் சமணர் வழியே தோன்றியிருந்தாலும், தமிழ் நாட்டில் இது எல்லாமாய் ஓங்கியது ஆழ்வார்கள், நாயன்மார்கள் கொண்ட புது நோக்கத்தாலேயாம்.

இசையினைக் காமத்தை விளைக்கும் வீணைச் செல்வம் எனத் திருத்தக்க தேவர் பாடுகிறூர். களங்கமற்ற தாயன்பு இயற்கை இசையாகப் பொங்கி வழிவது கேட்ட தேவரும் விமானமும் தம்மையும் அறியாது கீழ் இழிந்தனர்என இசையைப் புகழ்கின்றூர் சம்பந்தர்; இங்கே இசையின் தூய நிலை விளங்கக் காண்கிறூர்.

> "பண்ணமரும் மென் மொழியார்
> பாலகரைப் பாராட்டும் ஓசை கேட்டு
> விண்ணவர்கள் வியப் பெய்திவிமானத்தோடும்
> இழியும் மிழலையாமே" (1425)

என வரும் பாடல் காண்க.

இசை ஆனது உள்ளத்தை உருக்கித்தூயது ஆக்குகிறது. "இசையாய் விம்மி அழுமாறு வல்லார்" (1677) என்பர். இசையாலே அறுவகையான உட்பகையும் அழிய அன்பே ஞானமாய் மலர இறைவன் தோன்றுவதனை ஞான சம்பந்தர் பாடுகிறூர்.

> "வஞ்சமணர் தேரர்மதி கேடர்த
> மனத்தறிவி லாதவர் மொழி
> தஞ்சமென என்று முணராத அடியார்
> கருது சைவனிடமாம்

அஞ்சு புலன் வென்றறுவகைப் பொருந்
தெரிந் தெழு இசைக்கிளவியால்
வெஞ்சின மொழித்தவர்கள் மேவிநிகழ்
கின்றதிரு வேதிகுடியே'' (3644)

''குறிகலந்த இசை பாடலினனசை
யாலிவ் வுல கெல்லாம்
நெறிகலந்த தொரு நீர்மையன்'' (12)

என்று கூறுவதும் காண்க.

"தானலா துலகமில்லை" (4551) "உலகலா துடையதில்லை" (4560) என்ற கொள்கைக்கு இணங்க இயற்கையை இறைவனுகக்கண்டு பதிகங்கள் தோறும் இயற்கையையே பாதிக்கு மேல் பாடி வருகின்றார் ஞானசம்பந்தர்.

இயற்கையையும் உலகத்தையும் பாடும் போக்கினை—வெறும் நிலையினையே—புலவோர்களை வெறுக்கும் அங்கதமாகச் சமணர்கள் பாடினார்கள் எனலாம். இனி அவ்வாறன்றி உலகத்தவர்களைப் பாடுவதனையே சமணர்கள் பழித்தார்கள் என்றும் கொள்ளுதல்கூடும். இப்படியானல் சுந்தரர் முதலோரும் (7564–7574) இவ்வாறு பாடுதலின் சமணர்களை மட்டும் பழிப்பதில் பொருளில்லை எனலாம்.

## V. கழி மீன் கவர்தல்

சமணர்கள் ஊன் உண்ணுதவர்கள். தாம் கொலை செய்யாதபோது பிறர் கொணர்ந்த ஊனை உண்ணுதல் தவறு அன்று எனப் பௌத்தர்கள் கொண்டார்கள் என்பர் சமணர். இவர்களை நோக்கியே திருவள்ளுவர்,

தினற் பொருட்டால் கொல்லாதுலகெனின் யாரும்
விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல்

என்று பாடினூர் என்பர் சமணர். ஊன் உண்டு பழகியவர்களுக்காக இவ்வாறு பௌத்தர்கள் இரண்டாந்தரமாகக் கூறினூர்களே அன்றி, ஊன் உண்ணவேண்டும் என்று பௌத்தர்கள் வற்புறுத்தியவர்கள் அல்லர். மணிமேகலையில் சாதுவன் நக்கசாரணர்களைத் திருத்திய கதையினைக் கூறும் பகுதி இதனை வற்புறுத்தும். எனினும், புத்தர்களோடு வாதிட்ட சமணர்கள், புத்தர்கள் ஊனுண்ண விரும்புதலையும் பள்ளியருகாகக் கழிமீன்கள் கவருதலையும் சுட்டிக் காட்டுகிறூர்கள். பௌத்தர் வாழும் இடத்தை "செம்படர்கள் இறைவன் உறையும் இடம்" (464) என்றும், "கயன் மீனிரியக் கழிநீர் வரியும் வயன் மாண்புடைய வளமைத்து" (467) என்றும் நீலகேசி கூறுவது காண்க. ஞானசம்பந்தர் மூன்றிடங்களில் கழிமீன் கவருவதனைக் குறிப்பிடுகின்றூர்.

"கடுக்கள்தின்று கழிமீன் கவர்வார்கள் மாசுடம்பினர்,
இடுக்கணுய்ப்பாரல ரெய்த வொண்ணு இடமென்பரால் (2712)

இங்கே கழிமீன் கவர்வதைப் புத்தரைத் குறிப்பதாகவும் பிற சமணரைக் குறிப்பதாகவும் கொள்ளுதல் கூடும். கடுக்கள் தின்பதை அமணருக்கு ஆக்கவேண்டும் போலும்.

" கட்டமண் தேரருங் கடுக்கடின் கழுக்களுங்
கசிவொன்றில்லாப் பிட்டர்தம் மறவுரை (3786)

என்ற இடத்தில் காண்க. "துவர்க்கா-யொடு சுக்குத் தின்னும் நிலை அமண்" (63) என்று கூறுவதும் காண்க. ஆனால் "கருகுமுட-லார் கஞ்சியுண்டு கடுவே தின்று உருகு சிந்தையில்லா." (2165) என்று பாடுவதில் முதல் வரும் குறிப்புச் சமணரைப்பற்றியது என்றும் இரண்-டாவது பௌத்தர்களைப் பற்றியது என்றும் கொள்ளுதல் கூடுமோ? அவ்வாறானால் கடுத்-தின்னுதல் இருவர்க்கும் அன்றோ ஆம். இவர்-களை வேறு பிரியாது ஒன்றாக்கிப் பழிக்கின்றார் சம்பந்தர் என்று கொள்ளுதலும் கூடும்.

" கழியருகு பள்ளியிடமாக வருமீன்கள் கவர்வாரும்
வழியருகு சாரவெயினின் றடிசிலுள்கி வருவாரும். (3683)

என்பது மீன் கவர்வதைப் பற்றிய இரண்டா-வது குறிப்பு. இங்கே முதல்வரி பௌத்தர்களை-யும் இரண்டாவது வரி சமணர்களையும் குறிக்கும் என்பதில் ஐயமில்லை. மூன்றாவது குறிப்பு.

" கழிக்கரைப் படுமீன் கவர்வாரமண்
அழிப்பரை யழிக்கத் திருவுள்ளமே
தெழிக்கும் பூம்புனல் சூழ்திரு ஆலவாய்
மழுப்படை யுடை மைந்தனே நல்கிடே. (3307)

இந்தப் பதிகம் முழுவதிலும் ஞானசம்பந்தர் அமணரோடு வாதிடுவதற்கு ஆண்டவன் திரு-வுள்ளம் ஒவ்வுமோ என அவன் அருட்குறிப்பை நாடி நிற்கின்றார். எனவே, இப்பாடல் முழுவதும் அமணர்களையே குறிப்பதாகக் கொள்ள இடம் உண்டு. என்றாலும், இதுவோ பதிகத்தின் பத்-தாம் பாடல். பத்தாம் பாடல்கள் தோறும்

சமணர்களையும் பௌத்தர்களையும் குறிப்பது சம்பந்தர் வழக்கு. ஆதலின், இங்கும் கழிமீன் கவர்வார் பௌத்தர் என்றே கொள்ளலாம். இப்பதிகத்தின் மூன்றும் பாடலில் சமணரை–யும் சாக்கியரையும் மயங்க வைத்து,

" பெண்ணகத் தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர்கற் பழிக்கத் திரு வுள்ளமே." (3300)

என்று பாடக் காண்கிறோம். ஆனால்,சில பதிகங்–களில் பௌத்தரை மட்டுமோ அமணரை மட்டு–மோ குறிப்பதும் உண்டு. (990, 1001, 1346)

இனி, வைதிக சமயத்தில் அவிப்பலி, கொலைப்பலி முதலியவற்றின் பயனாக ஊன் உண்ணல் வழங்கி வந்தாலும், பௌத்தர் சம–ணர்கள் கொள்கை பரவியதன் காரணமாக,

" அவி சொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத் துண்ணாமை நன்று "

என்பது போன்று மனு தர்மமும் கூறலாயிற்று. கண்ணப்பர் போன்றார் நிலையிலேயே ஊனொடு–உண்டல் நன்றாவதனையும், அதனைக் கண்டு சிவ–கோசரியார் முதலியோர் நடுங்குவதனையும் கண்–ணப்பர் வரலாறு சுட்டுகிறதாம். சைவர்களும் ஊன் உண்ணாமையை விரும்பத் தொடங்கிய காலம் அது.

ஊனொடுண்டல் நன்றென வூனொடுண்டல் தீதென,
ஆனதொண்டரன்பினாற் பேசநின்ற தன்மையான் (3369)

எனச் சம்பந்தர் கூறுவது இந்த நிலையையே சுட்டும். இதை முன்னருங் குறிப்பிட்டோம்.

ஆனால், சமணர்களும் பௌத்தர்களும் இதனைப் பற்றி வாதிடுவதனையும் சம்பந்தர்' இருவரையும் குறித்துப் பாடும் பத்தாம் பாட்டொன்றில் குறிப்பிடுகின்றார்.

விடக்கொருவர் நன்றென விடக் கொருவர் தீதென
உடற் குடை களைந்தவ ருடம்பினை மறைக்கும்
படக்கர்கள் பிடக்குரை படுத்துமை யொர் பாகம்
அடக்கினை புறம்பட' மமர்ந்த வுரவோனே. (1795)

எனவே சம்பந்தர் கூறும் பழிவுரைகளெல்லாம் ஆசிவகர், சமணர், சாக்கியர் என்று பிரித்து எத்தனையோ கவடு விட்டு வளர்ந்த எதிர்ப்பினை எல்லாம் ஒருங்கு மயங்க வைத்துக் கூறுவனவே போலும்.

## VI. ஆசீவகரும் சம்பந்தரும்

ஆசிவகம் என்பது தனி ஒரு சமயம். இதனைப் பின்பற்றியவர் ஆசிவகர். இவர்கள் துறவினை வற்புறுத்தியவர்கள். திகம்பரராய் ஆடையில்லாராய்த் திரிந்தவர்கள். புத்தர் காலத்தும் மகா வீரர் காலத்தும் அவர்களோடு ஒருங்கு வாழ்ந்த ஒருவர் இம்மதத்தினைக் கண்டவர். இவர்பெயரை மஸ்கரி புத்திரர் என்றும், முக்கலி புத்திரர் என்றும் சமண பௌத்த நூல்கள் கூறும். மற்கலி என்பது தமிழ் நாட்டில் வழங்கிய பெயர். நவகதிர் என்பது அவர்களுடைய மறைநூல்.

இவர்கள் கொள்கையைச் சுருக்கிக் கூறலாம்:—நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்ற ஐந்து

வகை அணுக்களும் மூர்த்தத்திரவியங்கள் அல்லது வடிவுடை அடிப்படைப் பொருள்கள். இவற்றின் கூட்டமே உலகம்; உள்ளது போகாது இல்லது வாராது. தோற்றம் என்பது உள்ளாழ்ந்தது மேல் வந்து மிதப்பதாம். அழிவது என்பது மேல் மிதந்தது புலப்படாது கீழ் ஆழ்ந்து போவதாம். பொருள்கள் எல்லாம் மாறுது நிலை பேறுடையவை. காலத்தைப் பற்றிப் பேசினாலும் காலம் என்பது ஒரு தத்துவம் அன்று; வெறும் வழக்கே ஆம். மேலே கூறிய ஐந்து பொருள்களும் தத்தமக்கு ஏற்ற இயல்புடையவேனும் குணம் என ஒன்றோ காரணம் என ஒன்றோ கொண்டவை அல்ல. இவையே உள்ள பொருள்கள்; காலம், குணம், காரணம் என்பவை வெறும் சொல்லே ஆம். இவர்கள் ஏக தண்டிகளாய் வாழ்ந்தார்கள். குணமிலாதர் (416) குணமில்லர் (5812) குண மிலிகள் (118) குண்டர் குணமிலிகள் (535) என்று தேவாரம் கூறுவது குணம் என்பது ஒரு தத்துவம் அல்லது உள் பொருளாக, இயல்பு அல்லது தன்மையினும் வேறாக இருப்பதனை ஒவ்வாத ஆசீவகக் கொள்கையினைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

ஆசீவகர் என்ற பெயரே இவர்களை இழிவாகக் கருதியவர்கள் இவர்களுக்கு இட்ட பெயர் என்பதனைக் காட்டும். துறவினை வயிற்றுப் பிழைப்பாகக் கைக்கொண்டவர்கள் என்ற இழிவுப்பொருளில், முதலில், பௌத்தர் முதலானோர் இதனை வழங்கினர். மகாவீரர் ஆசீவகர்–

களைப் பழிக்கும் இடம் ஒன்றில் பெண்ணோடு கூடினாலும் துறவி தீங்கொன்றும் செய்தவன் ஆகான் என்பது ஆசீவகர் கொள்கை எனச் சுட்டுகின்றார். நீலகேசி. "அலப்பா தொழியே-னிவ் ஆசீவகனை ; அருகிருந்தார் தாமறிய ஆசீவ-கனை" (687) என்று கூறுவதும் அதற்கேற்ப அதன் உரை.

"அலப்பா தொழியேன்=அலையா தொழி-யேன்; அருகிருந்தார் தாமறிய வாசீவகனை=எல்-லாருமறியத் தொழில் செய்து ஜீவிக்கின்றானை. தொழிலாவன : "கர்ப்ப நியாஸ முதலாயின" என்று கூறுதலும் காண்க.

"கரு ஈறிலாப் பித்தர்" என்று சம்பந்தர் பாடுவது (2756) இதனைக் குறிப்பதும் ஆகலாம். "ஒப்பிலாக் கள்ளத்தார்" (3253) என்பதும் இவர்களைக் குறிப்பதோ என ஆராய்தல் வேண்டும். புலைமகன் என்பது மணிமேகலை-யில் (1391) இத்தகைய கூடா ஒழுக்கத்தானைக் குறிக்கும். "புலையானார்" என்று சம்பந்தர் பாடு வது (2335) இதனையோ ?

"தவமறிகிலார் பள்ளியை மெய்எனக் கருதன்மிலன்"(3754)

என்பதும் காண்க. குண்டர் என்பது ஆசீவ-கரைக் குறிக்கும் என்பதும் ஒன்று. கணிகை நோன்பினர் என ஒருவரைச் சம்பந்தர் குறிக்-கின்றார். க்ஷணிக த்யானத்தைக் குறிக்கு-மானால் இது பௌத்தர்களைச் சுட்டும். துறவி-யானாலும் பிரமசரியம் காவாது பெண்ணோடு சேர்ந்தொழுகல் ஓர் அறம் எனக் கொள்வர்

என ஆசீவகரைப் பற்றிப் பிறர் கூறுவது உண்மையானல் கணிகையோரோடு சேர்வ-தனையே நோன்பாகக் கொண்ட ஆசீவகர் எனக் கூறலும் ஆம்.

சாதியில் நீங்கிய அத்தவத்தார் (74)

என்பதும் இவர்களைக் குறிக்கலாம். ஆசீவகர்கள் கொல்லாமை, உண்மை, கள்ளாமை, வெஃ-காமை என்ற நான்கையே கொண்டு பிரமசரி-யத்தைத் துறவின் அடிப்படையாகக் கொள்-ளாதவர்கள் என்று பலர் கொள்கின்றனர். சமணர் பௌத்தர் ஆசீவகர் என்பார், இவ்-வாறு ஒருவரை ஒருவர் பழிப்பது கொண்டே ஞான சம்பந்தர் எல்லோரையும் ஒருங்கு வைத்-துப் பழிக்கின்ருர் போலும்.

ஆசீவகரும் சமணர்களும் திகம்பரர்களாய்த் திரிந்ததால் இருவரையும் ஒன்றென மயங்கி-யதும் உண்டு. ஆனல் அடிப்படையில் ஆசீவ-கர்கள் அநேகாந்த வாதிகள்.

"அயலியர் தாமல்ல ஆசீவர்கள்: திகம்பர-ராயினும் அநேகாந்த வாதிகளாகிய நிர்க்கந்த ரல்லர் ஆசீவகர்." என்று நீலகேசி உரை கூறு-வது காண்க. சம்பந்தர் எல்லோரையும் ஒருங்கு வைத்துக் கூறுவதும் இந்தக் கண்ணோட்டத்தில் எழுந்தது ஆகலாம்.

ஆச்சியப் பேய்கள் (1291) என்று ஞானசம்-பந்தர் குறிப்பிடுகின்ருர். ஆச்சியம் என்பதற்கு ஹாஸ்யம் எனப் பொருள்கொண்டு நகையை

விளைவிக்கும் பேய்க்கோலத்தார் என்று பொருள் கூறுகிறது, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதி (Tamil Lexicon). ஆச்சியர் என்பது ஆசீவகர் என்பதன் மரூஉவும் ஆகலாம்.

"ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணுமின்கள் (1291)

என்ற பாட்டில் எதுகையை நோக்குதல் வேண்டும். இரண்டாவது அடியில் நான்காவது எழுத்து வகரமாக வருதலின் முதல் அடியிலும் நான்காவது எழுத்து வகரமாகக் கொள்ளுதல் கூடும். ஆசிவகர் என்பதில் இடையில் வரும் சகரம் இப்போதுபோல் அன்றி, முன்காலத்தில், இப்போது இரட்டித்த சகரம் ஒலிப்பது போலவே, ஒலித்து வந்தது என்று எண்ண இடம்உண்டு. அப்படியானல், இடையில் சகரம் விரித்தல் விகாரமாய் வருதற்கும் இடம் உண்டு. ஆச்சாரியர் என்பது முதலிய இடங்களிலும் சகரம் இரட்டித்தல் காண்க. சம்பந்தர் பாடுகிற இந்தப் பாட்டின் சந்தத்தில் முதற்சீரும் இரண்டாம் சீரும் பெரும்பான்மையும் காய்ச்சீராக வருவதால் "ஆச்சிவகப் பேய்களோடு" என இருந்திருப்பினும் சீர்கெடாதாம். இவ்வாருனல் ஆசீவகர்களைச் சம்பந்தர் குறிக்கின்ருர் எனலாம். பல்சமண் (43) என்று சமணரைப் பல கூறுபடுத்துக் கூறுவதால் அம்மணமாய்த் திரிவார் என்ற பொருளில் ஆசீவகர்களும் அவர்களில் ஒருவராய் அமணராதல் காண்க.

அசோகருடைய கல்வெட்டுக்கள், துறவி-களைக் கண்காணிப்பதற்கு என அசோகன் சில-ரை ஏற்படுத்தியதைக் கூறும்போது, ஆசீவகத்-துறவிகளையும் குறிக்கின்றன. ஆசீவகர்களுக்-குக் குகை ஒன்றும் அவன் தந்துள்ளான். ஆசீ-வகர் தடிகொண்டு சென்றதால் "தொடித்தலை விழுத்தண்டினார்" என்ற சங்கப் புலவர் ஆசீ-வகரோ என இதனால் திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் கருதுகிறார். "தறியார்" (358) என்று சம்பந்தர் கூறுவது தடிபிடித்த ஆசீவகரையே போலும். ஆனால், "தறிபோலாம் சமணர்"(1247) என்றும் கூடவருகிறது. சிலப்பதிகாரத்தில் மாதவி பௌத்தமதத் துறவியாக, கண்ணகி-யின் தந்தையும் கோவலனின் தந்தையும் சைனத் துறவியும் ஆசீவகத் துறவியும் ஆகின்றார்கள். இப்படி ஒவ்வொருமதத்திற்கு ஒவ்வொருவராகப் பங்கிடுகின்றார் இளங்கோ அடிகள். மணிமேகலை, சமயக்கணக்கர் தம் திறம் கேட்ட காதையில், சமணர் கொள்கைகளை அறிவதற்கு முன் ஆசீ-வகக் கொள்கையையே அறிகின்றாள். "வானிடு வில்லின் வரவறியா" எனவரும் நாலடியாரின் அடியையே ஆசீவகத் தலைவனை விளக்கக் குறிப்-பிடுவதை நீலகேசியிற் காண்கிறோம். ஆறுவது நூற்றாண்டினரான வராஹமிஹிரர் ஆசீவகர்-களைக் குறிக்கின்றார். ஏழாவது நூற்றாண்டில் ஹர்ஷ சரித்திரம் எழுதிய பாணர் மஸ்கரி (ஆசிவகர்) என்ற துறவிகளைப் பற்றிக் கூறு-கின்றார். தண்டு எடுத்துச் சென்றதன் காரண மாகத் திருமாலின் அடியாரான துறவி-

களோடு இவர்களும் ஒருவர் எனப் பிறர் மயங்-கினர் என்பதனை, வராஹ மிஹிரர் நூலுக்கு உரை எழுதிய பட்டோத் பலர் ஆசீர்வகர்களை ஏகதண்டிகள் என்றும், திருமால் அடியார் என்-றும் கூறுதலால் அறியலாம். இவர்கள் இருப்-பிடத்தைக் குக்குட நகர் அல்லது உறையூருக்கு அருகிருந்த சமதண்டம் என்ற ஊராக நீலகேசி கூறும். சிவஞான சித்தியாரும் 13–ஆம் நூற்-றாண்டில் ஆசீவக வாதத்தை மறுத்துக் கூறு-கிறது.

அம்மணமாய் நின்ற நிலையால் ஒரு சிலர் இவர்களை அமணரோடு மயங்கிய மயக்கத்தை முன்னரே குறித்தோம். ஆசீவகர்கள் என்பது துறவையே வயிற்றுப் பிழைப்புக்கு வழியாகக் கொண்ட போலித் துறவிகளுக்கெல்லாம் பொதுப் பெயராய் வழங்கியதன் காரணமாக அத்தகையார்களைக் கண்காணித்து, ஆசுவ கட-மை என்றதொரு வரிவகையினையும் தமிழரசர்-கள் பிற்காலத்தே வாங்கி வந்தனர் என 13 ஆம் நூற்றுண்டின் கல்வெட்டுக்கள்(S. I.I. Vol. I–No. 88, 92, 108) நமக்குத் தெரிவிக்கின்றன. கி. பி. ஆறும் நூண்ருண்டில் இருந்து ஆசீவகர் இவ் வாறு பிறரொடு மயங்கி முடிவில் மறைந்தனர் என்று கொள்ளுதல் வேண்டும்.

எனவே சம்பந்தர் பாடல்கள் சமணர்களைப் பழிப்பதாக மட்டும் அமையவில்லை என்று கொள்ளுதல் கூடும். ஏழாம் நூற்றுண்டிற்குப் பின் ஆசீவகர்கள் கொள்கையால் வேறுபட்டுச்

சிறந்து வாழ்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால், பழங்கொள்கையை ஆராயும்போது அவர்களைக் குறிப்பிடுவது 13-ஆம் நூற்றூண்டுவரை வழக்கமாக இருந்தது எனலாம்.

## VII. குண்டர்

குண்டர் என்றும், குண்டு என்றும் அடிக்கடி சம்பந்தர் பாடுகின்றார். குண்டாக்கன் என்ற சொல்லும் வருகிறது. (1236, 1239, 2657) குண்டாக்கர் என்பதற்குக் "குண்டு ஆக்கையர் என்றவற்றின் வழியே பொருள்காண முற்பட்டுக் குண்டரின் தலைவர் என்று பொருள் கூறுகிறது, சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி. ஆக்கன் என்றசொல்லுக்குக் கற்பனையாகப் படைக்கப்பெற்ற தெய்வம் என்று பொருள் வரும்படியாக "ஈடு"'எழுதிச்செல்கின்றது. துறவிகளை முனிவர் என்றும் கடவுளர் என்றும் கொண்டு சைனர்கள் போற்றினர். "மூலைமறைக்கப்பட்டு நீராடாப் பெண்கள் முறை முறையால் நம் தெய்வம் என்று தீண்டித் தலைபறிக்கும் தன்மையர்கள்" (6275) என்று திருநாவுக்கரசர், தெய்வம் என்று குறிப்பது "குண்டாக்கர்" என்பதன் கருத்தாகலாம்.

"குண்டன்" என்பதற்கு அகராதி ''இழிந்தோர்" என்று பொருள் தருகிறது. பெரிய திருமொழி (2, 6, 5) இதற்கு மேற்கோள். பரத்தமை உடையான் என்ற பொருள் வடமொழி வழியே வரலாம். கண்டி என்பது ஆண்பாலைக் குறிக்-

கும் சொல்லாகத் தொல்காப்பியர் காலத்தில் வழங்கி எருமைக் கடாவினைச் சுட்டியது. இது குண்டு என்றாகி வழங்குகிறது எனக் கொள்ள இடம் உண்டு. குண்டுக் காளை, குண்டுக் குதிரை, —குண்டு எனவும் பிங்கலந்தைபடி வழங்கும்.— குண்டுக் கழுதை முதலியன காண்க. குண்டு, குழி குட்டை முதலியவற்றோடு தொடர்புடையதாய் "இழிதல்" "இழிவு" என்ற பொருளும் தரலாம். எனவே, இப்பொருள்கள் எல்லாம் இச்சொல்லின் குறிப்பாக வருவது இயல்பேயாம்.

குண்டர் என்று எவரையேனும் சிறப்பாகக் குறிக்கின்றனரா சம்பந்தர் என ஆராய்தல் வேண்டும். சாக்கியரையும் சமணரையுமே குறிக்கின்றார் சம்பந்தர் என்பது பொதுவாக உண்மையானாலும் இரண்டுக்கும் மேற்பட்ட கூட்டத்தினரைக் குறிக்கின்ற பாடல்களும் இல்லாமல் இல்லை.

I (1) குண்டர் சாக்கியரும் (3) குணமிலாதாரும்
(3) குற்றுவிட்டுடுக்கையர் தாமும்.
கண்டவாறு உரைத்துக்கால் நிமிர்த்துண்ணும் கையர். (441)

கையர் என்பதற்குக் கையினர் என்று பொருள் கொண்டால் மண்டையாம் ஓட்டினில் அன்றிக் கையிலே உண்ணும் சமணர் என்பது பொருளாம். கையர் என்பதற்குக் கீழானவர் என்று பொருள் கொண்டால் இழித்துரைக்கும்

நோக்கில் புத்தரையும் குறிக்கும். இரட்டுற மொழிந்தே சம்பந்தர் மூவர்க்கும் பொதுவாகப் பொருள் கொள்ளும் வகையில் பாடியுள்ளார் என்பதே ஏற்புடைத்தாகும்.

இப்பாட்டில் விட்டுடுக்கையர் என்பது உடுக்கை விட்டவர் என்று பொருள் தரலாம். குற்றுதல் என்பதற்குப் பறித்தல் என்ற பொரு-ளும் உண்டு. உடுக்கையைப் பிடுங்கி எறிந்து வன்துறவு பூண்டவர்என்று இதற்குப் பொருள் கூறலாம். அன்றியும், பாய், தடுக்கு முதலிய-வற்றை குறுஉடுக்கைபோலக்கொண்டு மறைத்தலின், சமணர் குற்றுடுக்கையர் என்றும் பெயர் பெறுவர். "குற்றுடுக்கையர்" என்பர் சுந்தரர் (7951). குற்றுடுக்கையர் விட்டுடுக்கையர் எனத் தனித்தனிக் கூட்டிப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

"தடுக்கு உடுக்கையர்" (74)
"தடுக்கால் உடல் மறைப்போர்" (134)
"தடுக்கு அமரும் சமணர்" (674)

என வருதல் காண்க. விட்டுடுக்கையர் என்பதில் விட்டு என்பதற்கு "வான்" என்றும் பொருள் கொள்ளக் கூடுமாதலின் விட்டுடுக்கையர் என்பதற்குத் திகம்பரர் என்பதன் பொருளே கொள்ளலுமாம்.

II (1) பிண்டிபாலரும் (2) மண்டைகொள் தேரரும்
(3) பீலிகொண்டு உழல்வாரும்
(4) கண்ட நூலரும் (5) கடுந்தொழிலாளரும்
கழறநின்றவர் (2592)

"பீலி கொண்டுழல்வார்" சமணர் என்பது பொதுக் கொள்கையானுலும் வேறு சிலரும் மயில் தோகையைக் கையில் கொண்டு சென்றனர் என்று கருத இடமுண்டு. பிண்டி என்பது அசோகமரம்; இதனைக் காப்பாரோ இதனை வணங்க அதன்பால் நிற்பாரோ சமணரே ஆம். ஆனுல், பிண்டிபாலம் என்ற எறிபடை ஏந்தியவர் என்றும் பொருள் ஆகலாம். சில துறவிகள் படைஎடுத்து அரசியற் சூழ்ச்சியில் தலையிட்டமையைக் குறிப்பதாகவும் இதனைக் கொள்ளலாம். மண்டைகொள் தேரர் என்பது மண்டையாம் திருவோட்டில் உணவுண்ணும் தேரராம் புத்தர்களையே குறிப்பதாம். கண்ட நூலார் என்பது புதிது புத்தாகக் கற்பனை செய்து கட்டிவிட்ட நூலுடையார்: குற்றங்குறையுடைய மூளி நூலினைப் பின்பற்றுவோர் என்று பொருளாயின் வேதத்தினும் புறம்பாகப் பலபல நூல்களை எடுத்துக் காட்டுவோரைக் குறிப்பதாம். கடுந்தொழிலாளர்என்பது கொடுந் தொழில் செய்து அலைக்கழிப்பாரையும், கடுந்துறவு மேற்கொள்வாரையும், கருமகாண்டிகளையும், வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழில் புரியும் துறவிகளையும் குறிப்பதாகலாம். நூலை நம்புவோர், தொழிலை நம்புவோர் என அருளை நம்பாதாரைச் சம்பந்தர் வகை செய்கின்ருர் போலும். இன்னுர் எனச் சுட்டாமல் இவர்கள் எல்லோரையும் பொதுவாகத் திரட்டிக் குற்றம் காட்டுவது சம்பந்தர் இயல்பு என்பதும் ஒன்று.

III (1) கையில் உண்ணும் கையரும்
(2) கடுக்கள் தின்னும் கழுக்களும்
(3) மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேதநெறியை அறிகிலார் (3370)

இங்கே மூவர் உம்மை கொடுத்து வேறு பிரிக்கப் பெற்றுள்ளனர். மெய்யைப் போர்க்கும் பொய்யர் என்பது பௌத்தரைக் குறிப்பதாம். கடுக்கள் தின்னும் கழுக்கள் என்பார் சமணராகலாம். கையில் உண்ணும் கையர் என வஞ்சகராக இகழப்படுவார், ஊணையே கருதி இழிதொழில் செய்து, வயிற்றுப் பிழைப்புக்கு எனத் துறவு பூண்டாரின் ஏமாற்றத்தையே, சம்பந்தர் கருதியதாகக் கொண்டால், சமணரும் புத்தரும் ஒருங்கு சேர்ந்து இகழ்ந்த ஆசீவகர் என்று பொருளாகும். அவ்வாறன்றி அவர்களும் சைனர்களே என்று கொண்டால் உம்மைக்குப் பொருள் இல்லையாம். அப்போது கையரும் கழுக்களும் ஒரு புறமாகவும், பொய்யரும் என்பது மற்றொரு புறமாகவும் அமையும். ஒரு சொல்லுக்குப் பொருளில்லை என்ற கருத்தினும் பொருள் கூறும் கருத்தே வலிவுடையதாகும்.

உம்மை இல்லாத இடத்திலும் இப்படி இரண்டிற்கு மேற்பட்ட கூட்டத்தார்கள் குறிக்கப்படுகிறார்கள் என்று கொண்டு ஆராயலாம்.

IV (1) மசங்கற் சமண் (சமணர்) (2) மண்டைக்கையர் (பௌத்தர்) (3) குண்டக் குணமிலிகள் (117)

குண்டராவார் வயிற்றுப் பிழைப்புக்காக

உடலைவளர்த்துக் கூடாஒழுக்கம் மேற்கொண்ட கொடுந்தொழிலரே என்று கொள்ளலாம். குணமிலிகள் என்பதற்கு நல்ல குணமில்லாதார் என்ற பொருளோடு, குணம் என ஒன்றினை அடிப்படைத் தத்துவமாகக் கொள்ளாதவர் என்ற பொருளும் கொள்ளலாம்.

V (1) அத்தமண் தோய்துவரரர் (பௌத்தர்) (2) அமண் (3) குண்டர் யாதும் அலலது உரை (424)

VI (1) மாசுமெய்யர் (சமணர்) (2) மண்டைத்தேரா (பௌத்தர்) (3) குண்டர் குணமிலிகள் (535)

மேலே காட்டிய பாடலோடு (117) இஃது ஒத்துள்ளது. குண்டக் குணமிலிகள் என்பது இங்கே குண்டர் குணமிலிகள்என வந்துள்ளது.

VII (1) பாடுடைக் குண்டர் (2) சாக்கியர் (3) சமணர் (818)

VIII (1) குறியில் சமணொடு (2) குண்டர் (3) வண்தேரர் (925)

சமணொடு குண்டர் எனக் குண்டரை வேறு பிரித்திருப்பது காண்க.

IX சாயநின்ருன் (1) வன்சமண் (2) குண்டர் (3) சாக்கியர்

X (1) பொன்னியல் சீவரத்தர் (பௌத்தர்) (2) புளித் தட்டையர் (3) மோட்டமணர் (4) குண்டர் (100)

புளித்தட்டையர் என்பது யார் என விளங்க வில்லை.

XI சடம்கொண்ட சாத்திரத்தார் (பொது) (1) சாக்கியர் (2) சமண் (3) குண்டர் (1280)

XII (1) மன்மதன் என ஒளி பெறுமவர் (2) மருதமர் வன்மலர் துவருடையவர்களும் (3) மதியில் துன்மதி அமணர்கள் (1340)

இங்கே காமிகளாய்த் திரியும் குண்டரே முத-லில் சுட்டப்படுகின்றார்கள் எனலாம். இல்லை-யானால், "சமணர்கள் தொடர்வரும், நின்மலர்" எனப் பின் வருவதோடு சேர்த்துச் சிவனையே குறிப்பதாகக் கொள்ளலாம்.

XIII (1) குண்டரும் குணமிலாத (2) சமண் (3) சாக்கியமிண்டர்கள் (162)

XIV (1) குண்டு (2) அமண் (3) துவர்க்கூறை மூடர்

XV கட்டர் குண்டு அமண் தேரர் சீரிலவிட்டர் (1762)

XVI (1) அலையாரும் புனல்துறந்த அமணர் (2) குண்டர் (3) சாக்கியர் (2068)

XVII (1) கையினில் உண்டுமேனி உதிர்மாசர் (2) குண்டர் (3) இடுசீவரத்தின் உடையார் (பௌத்தர்) (2475)

XVIII (1) சாக்கியப் படுவாரும் (2) சமண் படுவார்களும் மற்றும் (3) பாக்கியப்படகிலாப் பாவிகள் (2451)

"மற்றும்" என வருவதால் பின் வருவதனை மூன்றும் கூட்டம் எனக் கொள்ளல் வேண்டும்; இனி அசைஎனக் கொண்டால் முன்னிருவ-ரையும் விளக்குவதே இரண்டாம் அடி எனல் கூடும்.

XIX (1) குண்டர் தம்மொடு (2) சாக்கியர் (3) சமணரும் குறியினில் நெறிநில்லா மிண்டர் (603)

குண்டரை "ஒடு"க்கொடுத்துப் பிரித்துச் சாக்-கியர் சமணரினும் வேறாகச் சுட்டுதல் காண்க.

XX (1) சீறுலாவிய தலையினர் (2) நிலையிலா அமணர்கள் (3) சீவரத்தர் (2757)

சீறுலாவிய தலையினர் என்பார் யார்? சிறுமைவிளங்கும் தலையினராம் அமணரேயோ? அவர் போன்ற ஆசீவகரா? படிந்து நில்லாமல் சீறிக்கொண்டு நிற்கும் சடைத்தலையரோ?

XXI. புத்தர்தேரர் பொறியில் சமணர் கருவீறிலாப் பித்தர்

இங்குத் தேரர் என்றது புத்தரில் அன்று சிறந்திருந்த பிரிவினர் ஆம்; புத்தர் என்பது பொதுவாக மற்றைய பௌத்தர்களை எல்லாம் குறிக்கும். புத்தராகிய தேரர் என்றும் கொள்ளலாம். கருவீறிலாப் பித்தர் என்பதனை கரு+வீறு+இல்லாப்பித்தர் என்றோ, கரு+ஈறு+இல்லாப் பித்தர் என்றோ கொள்ளுதல் கூடும். குண்டராம் ஆசிவகர் என்று இது பொருள் தரலாம் என முன்னர்க் கூறினோம்.

XXII. (1) குண்டரும் (2) புத்தரும்
(3) கூறையின்றிக் குழுவார் (சமணர்)
(3943)

XXIII. (1) நிலையார்ந்த உண்டியினர் (நின்று உண் சமணர்)
(2) நெடுங்குண்டர் (3) சாக்கியர்கள் புலையாணர் (2355)

குண்டர் என்பது சமணரைக் குறிப்பது போல வருதலும் உண்டு. இங்கே அம்மணமாய் நிற்பார் அனைவரையும்—சமணர் ஆசீவகர் அனைவரையும் – குறிப்பதாதல் வேண்டும்; குண்டு என்பதனைக் கூறை போர்த்தலோடு சம்பந்தர் முரணணி தோன்றக் கூறுவதிலிருந்து இது விளங்குகிறது.

I. அத்தமண்தோய் துவராடைச் சமணர் குண்டர் (424)
II. குண்டாடிச் சமண்படுவார் கூறைதனை மெய்போர்த்து மிண்டாடித் திரிதருவார் (501)
III. குண்டுபட்டு அமணாயவரொடும் கூறைமெய் போர்க்கும் மிண்டர் (1435)

IV. கையார் சோறுகவர் குண்டர்களும் துவருடை
மெய்யார் போர்வை மண்டையர் (2155)

V. குண்டமணர் துவர்க்கூறைகள் மெய்யிற்கொள்
கொள்கையினர் (435)

VI. குண்டர் வண் துவராடை போர்த்தார் (2440)

VII. குண்டமண் துவர்க்கூறை மூடர் (1751)

உடையிலாமையே குண்டுநிலை என்பார்போல,

VIII. உடையிலாது உழல்கின்ற குண்டரும் (2035)

என்று சம்பந்தர் பாடுதல் காண்க.

அம்மணமாய் நிற்றலே நாணம் நீங்கிய இழிதகைமையின் கொடிமுடி என்று சம்பந்தர் முதலானோர் கருதினர் போலும்.

தடுக்கினை இடுக்கி மடவார்கள்
இடுபிண்டமது உண்டு உழல்தரும்
கடுப்பொடி உடற் கவசர் (3590)
உடுக்கை இன்றியே ஊர்நகவே திரிவார் (710)

என்பன சம்பந்தர் பாடல்கள்.

குவிமுலையார் நகைகாணது உழிதர்வேனை (4203)

என்றும்,

காவிசேர் கண்மடவார் கண்டு ஓடிக்
கதவு அடைக்கும் கள்வனேன் (4207)

என்றும்,

கூறையில் மிண்டர் (512)

என்றும்,

குவிமுலையார்தம் முன்னே நாணமின்றி
உழிதந்தேன் (6271)

என்றும், திருநாவுக்கரசர் தாம் அம்மணமாய்த் திரிந்த நிலைக்கு இரங்கிப் பாடிய பாடல்கள் இங்கே நினைக்கத் தக்கவையாம். குண்டு என்பது இழிதகைமையாக அதன் முற்றிய நிலையே அம்மணநிலை என்பது தோன்றவும் சம்பந்தர் பாடுகின்றார்.

குண்டுமுற்றிக் கூறையின்றியே (92)
குண்டராய் முற்றும் திரிவார் (1089)
குண்டுபட்ட மறையவர் (1435)
குண்டாடு குற்றுடுக்கைச் சமணர் (1403)
குண்டாடிச் சமண்படுவார் (3501)
குணடராய் உள்ளார் (4099)

எனவே, அம்மணமாய் நிற்றலின் சமணரும் குண்டர் ஆவர்.

குண்டிகைக் கையுடை குணடர் (3179)
குண்டாடும் சமணர் (3392)
குண்டாடும் சமணர் (3392)
குண்டராம் அமணர் கொளுவும் சுடர் (3343)

எனவரல் காண்க.

குண்டமணர் (435, 535, 3666), அமண்குண்டர் (303, 414), சமண்குண்டர் (244, 1120) அமணர் குண்டர் (2078. 1210)எனப் பல இடங்களிலும் வருவதனைச் சமணரும் குண்டரும் என மேலே நாம் கொண்டது போலப் பொருள் கொள்வதே அன்றிச் சமணராகிய குண்டர் என்றும் பொருள் கொள்ளலாம்.

பலரையும் ஒன்றாகக் கூறுவதும் சம்பந்தர் போக்கே ஆம்.

கடுக்கள் தின்று கழிமீன் கவர்வார் (2712)

என்பது "கடுக்கள் தின்பார்" என்றும் கழிமீன் கவர்வார்" என்றும் பிரித்துக்கூட்டிச் சமணரையும் புத்தரையும் சுட்டுவதாகக் கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு வரும் இடம் இன்னமும் பலவாம்.

ஒண்துவரார் துகிலாடை மெய்போர்த்து
உச்சிகொளாமை உண்டே உரைக்கும்
குண்டர்களோடு அரைக் கூறையிலர் (3943)

இங்கே,

"உச்சிகொளாமை உண்பார்
உரைக்கும் குண்டர்கள் அரைக்கூறை யிலார்"

எனப்பிரித்துக் கூட்டிப் புத்தர் சமணர் குண்டர் என்ற மூவரையும் குறிப்பதாகக் கொள்ள வேண்டும்; அவ்வாறு இன்றிக் குண்டர் என்பதற்குக் "கையர்—இழிவானவர்" எனப் பொருள்கொண்டு புத்தரைக் குறிப்பதாகப் பொருள் கொள்வதும் கூடுமேனும் அது பிற இடங்களோடு பொருந்துமாறு இல்லை. "குண்டு முற்றிக் கூறையின்றியே பிண்டம் உண்ணும் பிராந்தர்" (292) என்பதில் கூறையின்றியார் எனப் பிரித்துச் கூட்டிச் சமணரையும் 'பிண்டம் உண்ணும் பிராந்தர்" எனப் பிரித்துக் கூட்டிப் புத்தரையும் சுட்டுவதாகப் பொருள் கொள்ளவேண்டும். "கழுக்கள் தின்று கழிமீன் கவர்வார்" என்பதுபோன்ற இடங்களிலும் இவ்வாறே விகுதி பிரித்துக் கூட்டிப்பொருள்கொண்டுள்ளோம்.

இவ்வாறுனல், குண்டர் என்பது சிறப்பாக ஆசீவகர்க்கும், பொதுவாக அம்மணமாய் நிற்கும் சைனருக்கும் பெயராம். புத்தரோடு சைனரைச் சுட்டுவதே பெரும்பான்மையாதலின் புத்தரைக் கூறிப் பின் சமணர் என்னுது குண்டர் என்று ஒழிந்த இடங்களில் எல்லாம் ஆசிவகரோடு சைனரும் சுட்டப் பெற்றுள்ளார்கள் எனக் கருத இடமுண்டு.

குண்டாய் முற்றும் திரிவார் கூறைமெய்
போர்த்துமிண்டாய் (1089

மண்டை கொண்டுழி தருமதியில் தேரரும்
குண்டரும் (3018)
குண்டிகைக் கையுடைக் குண்டகும்
புத்தரும் (3179)
குண்டராயுள்ளார் சாக்கியர் (4099)
கையார் சோறுகவர் குண்டர்களும் துவருடை
மெய்யார் போர்வை மண்டையர் (2155)
குண்டர் வண்துவராடை போர்த்தோர் (2840)
குண்டராயுள்ளார் சாக்கியர் (4499)

இவ்வளவும் கூறியமையால், சம்பந்தர்காலத்தில் பலவகையான துறவிகள் சைவத்தை எதிர்த்து நின்ருர்கள் என்பதும், அவர்களில் சாக்கியர் சமணர் என்ற இருவர் சிறப்பினர் என்பதும் இவர்களோடு ஆசிவகரும் குண்டர் எனச் சிறப்பாகக் குறிக்கப் பெற்றுள்ளனர் என்பதும், குண்டர் என்பது பொதுவாக அம்மணமாய் நின்ருர் எல்லாருக்கும் பெயராக வழங்கியது என்பதும், அந்த வகையிலே திகம்பரச் சமணரும் குண்டர் என வழங்கப்பெற்றனர் என்பதும் விளங்கி இருக்கும். இவ்வாறு குண்டர் என்பதற்கு விரிந்த நிலையில் பொருள் கொள்ளப் பாடுவதால், இழித்துரைப்பது எளிதாகிறது. "நல்லார் அறங்கூற" என்று சம்பந்தர் பாடுவதனை முன்னரே குறிப்பிட்டோம். ஆதலின், அவர்களில் பொல்லாரையே குண்டர்கள் என அவர் பழிக்கின்ருர் எனல்வேண்டும். சமணர்களின் தத்துவத்தை ஓரோர் இடங்களில் சம்பந்தர் எள்ளி நகையாடினுலும், அவர் பழிப்பது குண்டர்களையே என்று கொள்ள இடமுண்டு.